# விதியின் கை



வீரகேசரி பிரசுரம்

இரசிகமணி
கனக-செந்திநாதன்

சமூக நாவல்

வீரகேசரி பிரசுரம் 51

# விதியின் கை

பேரா. செ. சுந்தரம்பிள்ளை.

இரசிகமணி கனக செந்திநாதன்

Sundarampillai
S. B. E. A.
Teachers' College,
KOPAY.

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# VITHYIN KAI

Written by:
**KANAGA SENTHINATHAN**
Kurumbacity, Thellipalai.

*FIRST EDITION*
MARCH 1977

*COPYRIGHTS*
RESERVED WITH
THE PUBLISHERS

**PRICE Rs. 3/20**

VIRAKESARI
PIRASURAM **51**

**Published by**

**VIRAKESARI**
**P. O. Box 160, COLOMBO.**

Sole Distributors:
*Express Newspapers (Ceylon) Ltd.*
**185, GRANDPASS ROAD,**
COLOMBO-14.

அருமையான சொற்றொடர்கள்
நிறைந்த முழு நாவல்
[redacted]

# ஆசிரியர் உரை

'விதியின் கை' என்ற இந்த நாவலை வாசிக்கப் போகும் அன்பர்களே, இந்த நுழை வாயிலிலே ஒரு சில வார்த்தைகள் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். இந்த வார்த்தைகள் இந் நாவலைச் சரியாகப் புரிந்துகொள் ளவும் இரசிக்கவும் உதவும் என்று நம்புகின்றேன்.

இந்த நாவல் இக்கால நாவல்களின் நடையிலும் பொருளிலுமிருந்து சற்று வித்தியாசம் உடையது. இந்த நாவல் வெளிவந்து கால் நூற்றுண்டு காலம் முடியவுள் ளது. ஆம். இது 5—7—1953 லிருந்து ஈழகேசரிப் பத்தி ரிகையில் வெளிவந்தது. எனவே, அக்கால கட்டச் சூழ் நிலையை வைத்துக் கொண்டே இதை நீங்கள் வாசிக்க வேண்டும்; மதிப்பிட வேண்டும்.

சிறுகதைத்துறை அவ்வளவு மாற்றம் அடையாவிட் டாலும் ஈழத்தில் நாவல் துறை இந்தக் கால் நூற்றுண்டில் எவ்வளவோ மாற்றம் அடைந்து விட்டது.

1940—1950 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலும் ஈழத் திலும் சொந்தமாக நாவல் படைத்தோர் குறைவாகவே இருந்தனர். தமிழ்நாட்டுப் பத்திரிகைகளைப் பிரேம்சந்தும், தாகூரும், பங்கிம் சந்திரரும், சரச்சந்திரரும், வி. ஸ. காண் டேகரும், நா. ஸீ. பாட்கேயும் ஆக்கிரமித்திருந்தனர். ஈழத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பு நாவல்களும் வேறு சில நாவல்களுமே வெளிவந்தன.

நாற்பதுக்கு முன் நாங்கள் படித்துக்கொண்டிருந்தவற் றில் அநேகமானவை திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப் பறியும் கதைகளே. உருப்படியான தமிழ் நாவல்களாக எமக்குத் தெரிந்தவை, கா. சி. வேங்கடரமணியின் முருகன்

ஓர் உழவன், தேசபக்தன் கந்தன், கல்கியின் கள்வனின் காதலி போன்றவையே.

இப்போது பிரமாதமாகப் பேசப்படும் பிரதாப முதலியார் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் (தமிழில் ஐந்து நாவல்கள்) போன்றவைகூட கேள்வியளவிலேயே இருந்தன. ஈழத்தில், யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் ம.வே. திருஞானசம்பந்தரது 'உலகம் பலவிதக் கதைகள்' என்ற தலைப்பில் வந்த நாவல்களைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. வீரகேசரியின் அக்கால ஆசிரியர் எச். நெல்லையாவின் நாவல்கள் ஓரளவு பிரபலமுற்றிருந்தன.

அக்காலப் பிரபல சிறுகதை எழுத்தாளர்களாகிய கு. ப. ரா., பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், பி. எஸ். ராமையா, சு. சு. செல்லப்பா என்பவர்களும், ஈழத்தில் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சோ. சிவபாத சுந்தரம், அ. செ. மு., வரதர், சு. வே., அ. ந. கந்தசாமி என்பவர்களும் நாவல் எழுதவில்லை. ஒரு சிலர் 1955ஆம் ஆண்டுக்குப் பின்னரே நாவல் எழுதினர்.

இவ்வளவையும் நான் எழுதுவது, விதியின்கை என்னும் இந்த நாவல் எழுதப்பட்டபோது இருந்த சூழ்நிலையைக் காட்டுவதற்காகவே.

இந்த நிலையில் ஒரு நாவலை—அதிலும் கிராமத்துச் சூழ்நிலையைக் கொண்ட நாவலை—எழுத நான் துணிந்தேன் என்றால், அந்தத் துணிவை ஓர் அசட்டுத் துணிவு என்று தான் சொல்லவேண்டும். ஆம். அந்தத் துணிச்சலை இப்போது நினைத்தாலும் தேகம் புல்லரிக்கின்றது.

நிற்க,

யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றில் பிறந்த எனக்கு, அந்தச் செம்மண்ணின் விசேஷமோ என்னவோ சில பிடிவாதமான குணங்கள் இருக்கின்றன. கிராமங்களில் அருகிவரும்—படிப்படியாக மறைந்துவரும்—சில முக்கியமான விஷயங்களை எமது இளம் சந்ததிக்கு ஞாபகமூட்ட வேண்டும். அவற்றைச் சிறுகதைகளாக, நாவல்களாக, நாடகங்களாகப் படைக்கவேண்டும். கிராமத்தின் உயிர் மூச்சைச் செயற்கைத் தன்மை படாமல் அப்படியே காட்ட வேண்

டும் என்பது என் எண்ணம். 'கிராமத்தின் உயிர் மூச்சு' என்று குறிப்பிட்டிருக்கின்றேன். அதுதான் முக்கியமானது. இந்தக் காலத்தில் 'யதார்த்தம்' என்ற பெயரில் உயிரற்ற வைகளைக் காட்டுவதில் சிலர் இன்பம் காணுகின்றனர். அதுவே பெரிய புதுமையென்றும் ஆர்ப்பரிக்கின்றனர். பண்பாடற்ற விஷயங்களைப் பூதக்கண்ணாடியால் இளம் பரம்பரைக்குக் காட்டும் போக்கை நான் முற்றாக எதிர்க் கின்றேன். அதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை என் பது எனது நம்பிக்கை. பயனுள்ளவற்றை—கிராமங்களின் உயர்ந்த பண்பாட்டை, சிறந்த கலைகளை, எமக்குச் சொந்த மான பாரம்பரியத்தை—புதிய முறைகளிற் கட்டிக்காக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

இந்த எண்ணத்தின் விளைவே எனது சிறுகதைகள். கிராமப்புரங்களிற் பொதுவாகப் பேணப்படும் அன்னதான மும், புராணப்படிப்பும், கொட்டகைக் கூத்தும், சரமகவி யும், மண்ணின் மதிப்பும் எனது கதைகளில் ('வெண் சங்கு'த் தொகுதியில்) வெளிப்பட்டிருக்கின்றன.

இந்த நாவலிலும் கிராமத்துப் பாடசாலை, கிராமச்சங் கத் தேர்தல், காவடி ஆட்டம் என்பவற்றைப் பின்னணி யாகக் கொண்டு நிலப் பிரபுத்துவமும் யுத்தகாலத்தில் உழைத்த புதுப்பணமும் ஏழைகளின் ஏக்கமும் உண்மை நிலையில் வைத்துச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

எந்தச் சிறுகதைகளிலும், காதலைச் சித்திரியாத நான், இந்த நாவலில் அதனைச் சித்திரிக்க முயன்றிருக்கின்றேன். நீங்கள் பல காதல் நாவல்களைப் படித்திருப்பீர்கள். அவற் றில் அதிகம் கற்பனைக் காதலே காணப்படும். கற்பனையில் எதையும் எழுதலாம். நான் காட்ட முயன்றிருப்பது நடை முறைக்காதல்; கிராமத்துத் தூய்மையான காதல்.

காதலைச் சித்திரிப்பது வாளின்மேல் நடக்கும் ஒரு சங் கதி. மிகக் கவனமாகச் சித்திரிக்க வேண்டும். பலர் காதல் பற்றி எழுதுவது சுலபம் என்று நினைக்கிறார்கள். அனுபவ மற்ற ஆரம்ப எழுத்தாளர்கள் கூட காதலில்தான் தொடங்குகிறார்கள்.

மனிதனுக்கு எல்லா உணர்ச்சிகளிலும் காம உணர்ச்சி தான் மிகுதி. அதை இன்னும் கிளறுவதற்காக எழுதும் எழுத்து ஒரு சிலருக்குப் புகழையும் கொடுக்கக்கூடும். ஆனுல் ராஜாஜி அவர்கள் கூறியது போலக் கள்ளிப் பலகையில் உடனே மேசை செய்துவிடலாம். ஆனுல், அது நின்று நிலேக்காது. இதனேயே இக்காலத்துக் காதல் எழுத்தாளர் களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நாவலில் வரும் பாத்திரங்களே அதீத செயலு டையவர்களாக வர்ணிக்காமல் அப்படி அப்படியே படைத் திருக்கிறேன். கொஞ்சம் மெருகூட்டியிருந்தாலும் பாத் திரங்களின் இயல்புகள் கெட்டிருக்கும்.

இந்த நாவலே 1970 க்குப் பிறகு எழுதியிருந்தால் எனது கதாநாயகன் தீவிரமான போக்குள்ளவனுக இருந் திருப்பான். இலவசக் கல்வியினுல் ஓரளவு முன்னேற்றம் பெற்ற தாழ்த்தப்பட்ட சமூகத்து வாலிபரும் போராட்டங் களில் குதித்திருப்பார்கள். நாவலும் வேறுவிதமாகப்போயி ருக்கும்.

மாசிலாமணியில் உணர்ச்சி இருக்கும் அளவுக்குச்செயல் திறம் இல்லே என்பது உண்மை. கிராமத்து மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியரால் அந்தக் காலகட்டத் தில் இருந்த சூழ்நிலேயில் அவ்வளவுதான் செய்யமுடியும்.

கிராமத்துப் பெரிய குடும்பத்துப் பெண் — ஒரு கதா நாயகி வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டாள் என்ருல் அக் காலச் சூழ்நிலேயில் அதுவே ஒரு புரட்சிதான்.

பீடி மூர்த்தி, பொன்னம்பலவாணர், நல்லதம்பிக் கிழ வனுர் போன்ற பாத்திரங்களும் சரியாகச் சித்திரிக்கப்பட் டுள்ளன என்பதே என் எண்ணம்.

இந்த நாவலேப் புத்தகமாக வெளியிடலாமா? வேண் டாமா? என்று பலமுறை நான் சிந்தித்ததுண்டு. சில நெருங்கிய நண்பர்கள் அந்தக் காலகட்டத்தில் இப்படி ஒரு நாவல் எழுதப்பட்டது என்பதைத் தமிழ் உலகம் அறிவது நல்லது என்ருர்கள்; நாவல் வளர்ச்சி பற்றி ஆராய்பவர் களுக்கும் இது நூல் உருவம் பெற்ருல் உதவியாக இருக்கும்

எனவும் கூறினுர்கள். அவர்கள் ஊட்டிய உற்சாகத்தால் யாதொரு திருத்தமும் செய்யாது நாவலை அப்படியே வெளியிடத் துணிந்தேன்.

எனது துணிவிலும்பார்க்க இந்த நாவலை வெளியிட முன்வந்த 'வீரகேசரி' ஸ்தாபனத்தாருடைய துணிவு மகத்தானது, அவர்களது இலக்கியத் துணிவும், பணியும் பிரபலமானவை.

வீரகேசரிக்கும் எனக்குமுள்ள தொடர்பு நெருக்கமானது. ஈழகேசரி காலத்துக்குப்பின் எனக்குஉற்சாகமூட்டி, மத்தாப்பு, மணிமகுடம் ஆகிய நாவல்களைப் பல எழுத்தாளர்களுடன் சேர்ந்து எழுதுவித்து வெளிபிட்டது வீரகேசரி. இலக்கிய சர்ச்சை, பழைய நூல் அறிமுகம், கொய்த மலர்க் கட்டுரைகள் போன்றவற்றையும் வீரகேசரி வெளியிட்டது.

ஈழகேசரி எனது தாய் என்றுல் வீரகேசரி எனது தந்தை. எல்லாவற்றுக்கும் ஊடுபாவாக இருந்தவர் வீரகேசரியின் யாழ்ப்பாண நிருபரும் நல்ல இரசனையுமுடையவரான திரு. சி. செல்லத்துரை அவர்கள்.

இந்த நாவல் ஒட்டுப்புத்தகமாக இருந்தபோதே இதனை வாசித்து விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தார் பிரபல நாவலாசிரியர் இளங்கீரன். மிக நீண்ட அவரது விமர்சனத்தின் முற்பகுதியை இந்நூலிற் சேர்த்திருக்கின்றேன்.

எனது இந்த நாவலை நல்ல முறையில் வெளியிட்டு உதவிய வீரகேசரி ஸ்தாபனத்தாருக்கும், திரு. சி.செல்லத்துரை அவர்களுக்கும் திரு. இளங்கீரன் அவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடுமையான நோயினுல் கால் ஒன்றை இழந்து படுத்த படுக்கையாக இருக்கும் எனக்கு வலது கரம்போல இருந்து எனது படைப்புகள் எல்லாம் நூல்வடிவில்வெளிவர முயற்சி செய்து வருபவர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள். அவர்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே தெரியவில்லை.

கடைசியாக மிகப் பொறுமையோடு இதனை வாசித்து இரசிக்கப்போகும் வாசகப் பெருமக்களாகிய உங்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

கனக செந்திநாதன்

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
3—12—76.


அடுத்த பிரசுரம்

காதலும், கடமையும், தியாகமும்
முரண்பட்ட உணர்ச்சிகளா?
அப்பச்சி மகாலிங்கம்
அளிக்கும்

"கமலினி"

சமூக நாவல் விடைதருகின்றது.

# மதிப்புரை

கனக. செந்திநாதனோடு எனக்கு இலக்கியத் தொடர்பு ஏற்பட்டதும் அவருடைய ஒட்டுப் புத்தகங்கள் சிலவற்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவற்றில் ஒன்று 'விதியின் கை' என்ற இந்த நாவல்.

ஈழத்து இலக்கிய உலகிலே சிறு கதை எழுத்தாளர்களே மிகுதி. நாவல் எழுத்தாளர்கள் மிக மிகக் குறைவு. அதிலும் கிராமத்தை அடிப்படையாக வைத்து நாவல் எழுதுவோர் இல்லை என்றே சொல்லிவிடலாம். இப்படியான காலகட்டத்தில் கனக. செந்திநாதன் ஒரு கிராமாந்தர நாவலை எழுதத் துணிவு கொண்டமை மெச்சக்கூடியதே.

நகர்ப்புறத்து எழுத்தாளர் கிராமத்தைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை. அப்படி ஏதாவது சிந்தித்து எழுதினாலும் அவை செயற்கைத் தன்மை உடையதாகவே இருக்கின்றன. குரும்பசிட்டி என்னும் அசல் கிராமத்திலே பிறந்து வளர்ந்த கனக. செந்திநாதனாலேதான் கிராமத்தின் வளர்ச்சியை, கிராமத்து மக்களின் உணர்வு ஓட்டங்களை, நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்களைச் சரியானபடி காட்ட முடியும்.

மமதை பிடித்த பொன்னம்பலவாணரை, சகுனி நல்லதம்பிக் கிழவனாரை, சண்டியன் பீடி மூர்த்தியை, நொண்டிக் கணபதியை இப்போதும் நிச்சயமாகக் கிராமங்களில் காணலாம்.

கிராமத்துப் பாடசாலையின் படப்பிடிப்பும், அங்கு நிகழும் தூய்மையான காதலும், கிராமச் சங்கத் தேர்தலும், தாளக் காவடி ஆட்டமும் இந்நாவலுக்கு உயிர் ஊட்டுகின்றன.

இந்நாவலில் வரும் நொண்டிக் கணபதி மறக்க முடியாத பாத்திரம். படிப்பு வாசனையற்ற அந்த ஹரிசன கிழவன் தனக்கு இன்னா செய்தவனுக்கும் இனியவே செய்து-மன்னித்து-உயர்ந்து நிற்கின்றான்.

இதில் கதாநாயகனாக வரும் மாசிலாமணி ஒரு ஆசிரியர். வளைவு சுளிவு இல்லாத ஒரு முற்போக்குவாதி. பழைய நிலப் பிரபுத்துவ அமைப்பிலிருந்து விடுபட்டு புதிய ஒரு வாழ்க்கையை மேற்கொள்ளத் துடிக்கும் கிராமத்தின் பிரதிநிதி. வளர்ந்து வரும்-மாறி வரும் கிராமிய உணர்ச்சிகளின் எதிரொலிதான் மாசிலாமணி. ஆனால், மாசிலாமணியின் உள்ளத்தில் உறுதியிருக்கின்ற அளவுக்கு உணர்ச்சியில்லை.


அடுத்து ஆசிரியை அமிர்தம். மாசிலாமணியின் காதலி ஒரு மெல்லிய கோடாகவே தென்படுகின்றாள். துணைப் பாத்திரங்களால்தான் இந்த நாவல் இயங்குகின்றது. இதர துணைப் பாத்திரங்களை தத்ரூபமாகவும், முழுமையாகவும் ஆசிரியர் படைத்துள்ளார். அவர்களுடைய சம்பவத்தில் தான் கதை ஓடுகின்றது. துணைப் பாத்திரங்களான பீடி மூர்த்தி, நல்லதம்பிக் கிழவனார், பொன்னம்பலவாணர் என்னும் பாத்திரங்கள் நன்கு கவனமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

கருத்தாழமுள்ள, வசன நடை கொண்ட இந் நாவல் மொத்தத்தில் சாதாரண சம்பவத்தைக் கொண்ட திறமையான கதை.

— இளங்கீரன் —

யாழ்ப்பாணம்,
18-12-'55.

# இரசிகமணி கனக செந்திநாதன்



ஈழத்து இலக்கிய வானில் இணையற்ற பிரகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கும் ஒரு நட்சத்திர எழுத்தாளர் கனக செந்திநாதன். சென்ற 38 ஆண்டுகளாக எழுதிக் கொண்டிருக்கிறார். ஈழநாடு, ஈழத்து எழுத்தாளர்கள், ஈழத்துப் படைப்புகள் என்று சிந்தித்துச் செயற்படுபவர் அவர். அவரைப்பற்றிச் சிறிதளவு அறிந்துகொள்வது வளரும் எழுத்தாளர்களுக்கும் இரசிகர்களுக்கும் நல்லது.

ஈழகேசரி பொன்னையா அவர்கள் பிறந்த குரும்பசிட்டியிலே 5-11-1916ல் பிறந்தவர் செந்திநாதன். தந்தையார் கனகசபை; தாயார் பொன்னம்மா. உடன் பிறந்தவர் ஒருவர். பெயர் மீனாக்ஷி; செந்திநாதனுக்கு 3 வயது மூத்தவர்.

செந்திநாதனுக்குத் தந்தையார் வைத்த பெயர் திருச் செவ்வேல் என்பது. திருச்செவ்வேல் தனது எழுத்துலகப் பெயரை கனகசெந்திநாதன் என்று வைத்துக்கொண்டார். திருச்செவ்வேல் பிறந்து ஆறு மாதத்திலேயே தகப்பனை இழந்தார். அதனால் 'இன்னா இளமை வறுமை' என்பதை முழுக்க அனுபவிக்க நேர்ந்துவிட்டது. ஆனால் தாயின் தளராத முயற்சி மகனின் கல்வியை வளர்த்தது. குறைந்தது தனது மகனை ஒரு தமிழ் ஆசிரியனாகவாவது ஆக்கவேண்டும் என்பது தாயாரின் பெரு விருப்பாக இருந்தது. ஊரில் உள்ள மகாதேவ வித்தியாசாலையிலும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் செந்திநாதன் கல்வி கற்றார். 1934ம் ஆண்டு S.S.L.C.யில் சித்தியெய்தினார். 1936 ல் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திபெற்று 1937,38ம் ஆண்டுகளில் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையிற் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். 1939ம் ஆண்டு தை மாதம் ஆசிரிய உத்தியோகத்திற் சேர்ந்த செந்திநாதன் 32 ஆண்டுகளாகப் 10 பாடசாலைகளில் ஆசிரியப் பணி புரிந்தார்.

1940 ம் ஆண்டு ஆனியில் செந்திநாதனுக்குத் திருமணம் நடந்தது. அவருக்கு மனைவியாகப் பேறு பெற்றவர் அவ்வூரைச் சேர்ந்த நாகம்மா என்பவர். இருவருக்கும் இப்பொழுது மூன்று பெண்களும் ஒரு மகனும் உள்ளனர்.

இது செந்திநாதனின் குடும்ப வாழ்க்கை. அவரது இலக்கிய வாழ்க்கையை நன்கு விளங்கிக்கொள்ள இந்தப் பின்னணிக் குறிப்பு அவசியமானது. கிராமச் சூழலிற் பிறந்து, இளமையில் தந்தையை இழந்து, வறுமையில்வாடி, கடின உழைப்பால் ஆசிரியராக வந்த ஒருவர் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்று இருப்பாரா அல்லது எவ்வித ஊதியமும் இல்லாத இந்த எழுத்துத் துறைக்கு வருவாரா? இந்த இடத்திலேதான் இரசிகமணியை வாசகர்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி சி.க. வின் இரசிக மாணவனாக இருந்து, சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி அவர்களிடம் பத்திரிகைத் துறைக்குத் தேவையானவற்றை

ஓரளவு படித்து வெளியேறிய இரசிகமணி திரு. சோ. சிவபாதசுந்தரத்தின் வழிகாட்டலோடு எழுத்துத் துறையில் புகுந்தார். எழுத்து உலகில் சில காரியங்களைத் தமிழை மட்டும் படித்த தன்னாலும் சாதிக்கமுடியும் என்று துணிந்தார். அதற்காக அவர் தனது சிறிய ஊதியத்தின் பெரும் பங்கை புத்தகங்கள், பத்திரிகைகள், விசேட மலர்கள் என்பவற்றை வாங்குவதில் செலவு செய்தார். பல துறைகளிலும் ஏறத்தாழ 2000 நூல்களை வாங்கிச் சேர்த்தார்.

இரசிகமணி எழுதினார். எழுதுவதில் மட்டும் அவர் இன்பம் காணவில்லை, எழுத்தாளர்களைச் சந்தித்துப் பேசுவதிலும் அவர்களை ஊக்குவிப்பதிலும் மேலும் இன்பம் கண்டார். எழுத்தாளர் சங்கங்கள், புத்தக வெளியீடுகள், இலக்கிய விரிவுரைகள் எல்லாவற்றுக்கும் சென்றார். பல எழுத்தாள நண்பர்களது இன்பதுன்பங்களிற்கலந்துகொண்டார். எழுத்தாளர்கள் இரசிகமணியின் உறவினர்கள். ஆம். அவர் உதட்டளவில் இலக்கியம்பேசி உல்லாசபுரியில் வாழவில்லை. இலக்கியத்தை அவர் உள்ளத்தால் நேசித்தார். எழுத்தாளர்களுடன் அவர் உள்ளன்புடன் பழகினார்.

இரசிகமணியின் இலக்கியப்படைப்புகள் அனைத்தையும் அவரது அறுபதாண்டு நிறைவு விழாவையொட்டி 'பூச்சரம்' என்ற மகுடத்தில் தொகுத்துள்ளேன். யாழ். இலக்கிய வட்டம் வெளியிட்டிருக்கும் இத் தொகுப்பிலிருந்து இரசிகமணியின் பன்முகப்பட்ட எழுத்தாற்றலை அறிந்துகொள்ளலாம்.

பண்டிதமணி சி. க., ஈழகேசரி நா. பொன்னையா, கலாகேசரி ஆ. தம்பித்துரை, சிற்பக்கலைஞர் ஆறுமுகம் என்போரின் வாழ்க்கை வரலாற்றை அவர் எழுதியிருக்கின்றார். சோமசுந்தரப்புலவர், அல்வாயூர்க் கவிஞர், அம்பி ஆகியோரின் கவிதைகள் பற்றி விமர்சன நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றார். பள்ளு, பரணி, கலம்பகம் என்பவை பற்றியும் அவரது வானொலிப் பேச்சுக்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன. மாணவர்களுக்கான நல்ல இலக்கிய இரசனைக் கட்டுரைகளைக் 'கடுக்கனும் மோதிரமும்' என்ற தொகுப்புக்கொண்டுள்ளது. இவை யாவற்றுக்கும் மேலாக

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூலை 1964ல் வெளி யிட்டு எமது நாட்டின் இலக்கிய வளத்தைத் தமிழ் கூறும் நல்லுலகு முழுவதும் அறியும்படி செய்தார். ஈழத்துக் கவி மலர்கள், ஈழத்துப் பேனு மன்னர்கள், தற்காலக் கவிஞர் பற்றிய 'முற்றத்து முல்லை'க் கட்டுரைகள், ஈழத்துக் குழந் தைப் பாடல்கள் பற்றிய இரசனைக் கட்டுரைகள் போன் றவை மூலம் எங்கள் நாட்டின் எழுத்துக்கு மதிப்பும் மாண் பும் வரத் தொண்டாற்றினர். இவற்றைவிட, அவரது ஆக் கப் படைப்புகளாக 'வெண்சங்கு' என்ற சிறுகதைத் தொகு தியும் 'ஒரு பிடி சோறு' என்ற நாடகமும் வெளிவந்துள் ளன. வெளிவராமல் ஒட்டுப் புத்தகங்களாகவுள்ளவை பல.

இவரது இலக்கிய சேவையாலும், பொதுச் சேவையா லும் வடிவம்பெற்ற பல சங்கங்களைக்குறிப்பிடல் வேண்டும். மறுமலர்ச்சிச் சங்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம்— யாழ். கிளை, அகில இலங்கை எழுத்தாளர் சங்கம், யாழ். இலக்கிய வட்டம் என்பவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் இரசிகமணி. சொந்த ஊராகிய குரும்பசிட்டி யில் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களால் தோற்று விக்கப்பட்ட சன்மார்க்க சபையின் வளர்ச்சியிலும் அவர் ஒன்றிக் கலந்திருக்கின்றார்.

இரசிகமணியின் இலக்கிய சேவையைப் பாராட்ட முன் வந்த சங்கங்கங்கள் பல:

1964ம் ஆண்டு கிழக்கு இலங்கை எழுத்தாளர் சங்கம் 'இரசிகமணி' என்ற பட்டத்தைச் சூட்டிப் பாராட்டியது.

1967ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் அவரது 50ம் ஆண்டு நிறைவை ஓர் இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடியது.

1969ம் ஆண்டு அம்பனைக் கலைப் பெருமன்றம் 'இலக் கியச் செல்வர்' என்ற பட்டத்தையளித்துக் கௌரவித் தது.

1976ம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் அவருக்கு 'மணிவிழா' எடுத்தது.

ஈழத்து இலக்கியத் துறையிலும், தமிழ் நாட்டு நவீன இலக்கியப் பரப்பிலும் ஆழ்ந்த புலமை மிகுந்த ஒரு பேராசிரியர் இரசிகமணி அவர்கள். எழுத்தாளர், படிப்பாளர், படைப்பாளர், திறனாய்வாளர்,பேச்சாளர், இரசனையாளர், அன்பாளர், பண்பாளர், தொழிலாளர் என்போரின் சங்கமந்தான் இரசிகமணி எனப்படும் கனக செந்திநாதன்.

இன்று அவர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றார். 'எப்படிச் சுகம்?' என்று யாராவது பார்க்கப் போனால் 'எப்படி இந்த நாவல்?' என்றுதான் பேச்சைக் கொடுப்பார். அவருக்கு நோயைப் பற்றிக் கவலையில்லை. ஓர் எழுத்தாளனைக் கண்டுவிட்டால் அல்லது ஒரு புதிய நூலைக் கண்டுவிட்டால் அவரது நோய் அகன்று விடுகின்றது. ஆம் இலக்கியமே அவரது உயிரும் உடலும்; பேச்சும் மூச்சும்; கனவும் நினைவும்.

இரசிகமணி அவர்களைப் பற்றி மேலும் அறிய விரும்புகின்றவர்களுக்கு 'இரசிகமணி மலர் மாலை', 'பூச்சரம்' ஆகிய தொகுப்பு நூல்கள் நன்கு உதவ வல்லன.

— கவிஞர் வி. கந்தவனம்.

28—2—77.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் களின் தரமான படைப்புக்கள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுரு வில் வெளிவருகின்றன.

தவருமல் இவைகளைப் பெற்று உங் கள் இல்லத்தில் ஓர் 'குடும்ப நூல் நிலை யத்தை' ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கிஞல், ஏழாவது புத்தகம் இஞ மாக அனுப்பி வைக்கப்படும். இப் பரி சுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத் துக்கு மேற்பட்ட வாசகர்கள் இஞமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவ தில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

# பதிப்புரை

'இரசிகமணி' என்று தமிழ்ப்பேசும் மக்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. கனக செந்திநாதன், கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, ஈழத்து தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தி வருபவர். தமிழைப் போதிப்பதிலும், தமிழ் இலக்கியங்களை ஆய்வதிலும், கருத்துரைகளை வழங்குவதிலும், ஈழத்து தமிழ் எழுத்தாளர்களையும் ஈழத்து இலக்கியங்களையும் ஊக்குவிப்பதிலும், தன் வாழ் நாளில் பெரும்பகுதியை கழித்தவர். அன்னாரின் எழுத்துலகத் தொண்டுகள், இந்நாட்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் ஓர் சிறப்பிடத்தைப் பெறும். அன்னாரின் இலக்கிய சேவைக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக இந்நாவலை புத்தக ரூபத்தில் வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பதிப்பாளர்.

16—5—77.

# விற்பனைக்குரிய புத்தகங்களின்

## விபரம்

| புத்தகத்தின் பெயர் | எழுதியவர் | விலை |
|---|---|---|
| குமாரபுரம் | ஏ. பாலமனோகரன் | —3.40 |
| புதிய தலைமுறைகள் | வை. அஹ்மத் | —3.90 |
| அந்தரங்க கீதம் | உதயணன் | —3.60 |
| உலகங்கள் வெல்லப்படுகின்றன | கே. டானியல் | —3.60 |
| பிரளயம் | செங்கை ஆழியான் | —3.40 |
| வரலாறு அவளைத் தோற்றுவிட்டது | கே. ஆர். டேவிட் | —3.60 |
| கிரௌஞ்சப்பறவைகள் | வ. அ. இராசரத்தினம் | —3.90 |
| நெஞ்சக்கனல் | கே. வி. எஸ். வாஸ் | —3.40 |
| உமையாள்புரத்துஉமா | புரட்சிபாலன் | —4.40 |
| நெஞ்சில் ஓர் இரகசியம் | கருணாசேன ஜயலத் | —4.90 |
| யாத்திரை | பொ. பத்மநாதன் | —3.90 |
| கனவுகள் வாழ்கின்றன | இந்திராதேவி சுப்பிரமணியம் | —3.90 |
| நான்கெடமாட்டேன் | க. அருள்சுப்பிரமணியம் | —3.60 |
| இரவின் முடிவு | செங்கை ஆழியான் | —3.90 |
| விடிவுகால நட்சத்திரம் | கே. விஜயன் | —4.90 |
| போடியார் மாப்பிள்ளை | எஸ். ஸ்ரீ ஜோன்ராஜன் | —3.60 |
| போராளிகள் காத்திருக்கின்றனர் | கே. டானியல் | —3.40 |
| காலங்கள் சாவதில்லை | தெளிவத்தைஜோசப் | —3.90 |
| ஊமை உள்ளங்கள் | ஞானரதன் | —3.60 |
| காட்டாறு | செங்கை ஆழியான் | —4.90 |

[redacted]

# விதியின் கை

''கொடுப்பது சிரத்தையுடன் கொடுக்கப்பட வேண்டும்; அசிரத்தையுடன் கொடுக்கப்படாது. செல்வப் பூர்த்தியை அனுசரித்துத் தாராளமாகக் கொடுக்கப்படவேண்டும். அதிகம் கொடுப்பதற்கு இல்லையேயென்று வெட்கத்துடன் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கத்தக்க இடத்திற் கொடுக்காமலிருப்பது தவறு என்ற பயத்துடன் கொடுக்கப் படவேண்டும்'' —தைத்ரீயோபநிஷத்.

எழுதிச் சென்றது விதியின் கை. எழுதி எழுதி மேலும் சென்றது. அதனால்......'மாஞ்சேரியம் பதியில் மன்னிய வேளாண் மரபில்' என்று தீஞ்சுவைக் கவிகளாற் 'சரமகவிப் புலவர்கள்' பெருமைப்படக் கூறிவராநின்ற மருதஞ் சேரிக் கிராமம் தன் அந்தஸ்தில் உயர்ந்து விட்டது. அரசாங்கம் மண்போட்ட ஆம்பல் வர்ண ரோட்டு, தார்

போட்டுக் கறுத்த மகிமையினுலே பஸ் முதலாளிகளின் கண்ணை உறுத்த ஆறுமணிக்கொருதடவை அசைந்து ஆடி வரும் இரண்டு பஸ்களை ஓட விட்டனர். யாழ்ப்பாணப் பகுதியிலே கள்ளுக்குப் பெயர் பெற்ற இந்தக் கிராமம் இவர்களின் பெருங்கருணைத் திருநோக்கால் 'உச்சநிலை' பெற்றுவிட்டது அதிசயமல்ல.

ஆனுல், இந்த அதிசயத்தோடு வேருெரு ஆச்சரிய மான சம்பவம் நடந்ததை எல்லோரும் அறிய முடியாது தான். கம்பி போட்டுப் பூவரச மரத்தில் தூக்கியிருந்த வெறுந் தகரக் குவளையைக் கொண்ட ஆலடி 'ஞான வைர வர்' இப்போது அழகான புது உண்டியற் பெட்டி ஒன் றைப் பெற்றிருந்தார். கள்ளியும், கற்ருளையும் மண்டி வளர்ந்து முயல் வேட்டைக்காரருக்கு வாய்ப்பான அந்தச் சுற்று வட்டாரத்திலே, வானுற ஓங்கி வளம்பெறவளர்ந்து விழுதுகள் விட்ட ஆலமரம், 'இயற்கையன்னை ஈன்றெடுத்த இன்னமுதச் செல்வன்' என்று கவிபாடும் பெருமை பெற்று விட்டது.

மாத மும்மாரி குன்றி மக்கள் வானை நோக்கி அழுத காலத்தில், 'ஞான வைரவர் வசந்தன்' பாடி அடிப்பித்து மழை பெய்வித்த மருதமுத்துப் புலவரின் வழி வழி சிறக்க வந்த பொன்னம்பலவாணர், ஆலமரத்தைக் காப்பாற்ற ஞான வைரவரை ஊர்க்காவல் தெய்வமாக வைத்துக் கோயில் என்ற பெயரோடு 'கொட்டகை'யும் போட்டு முடித்தார்.

ஆதிகாலப் பெருமையோடு காலங் கடத்திவரும் மரு தஞ்சேரிக்கு மரவரி வந்த அதிர்ஷ்டத்தினுலே வருவோரை எல்லாம் வரவேற்பவர் ஆலடி ஞானவைரவர்தான். ஆருத பசியோடு அவசரமாக வரும் கிராமத்தானும், அரை மனத் தோடு அடிக்குப் பயந்து அழுதுகொண்டு போகும் பள்ளிப் பிள்ளைகளும் அவருக்குக் கும்பிடு போடத் தவறுவதில்லை. கடவுள், கோயில் எல்லாம் சோம்பேறிகளின் திண்ணை வேதாந்தம் என்று பட்டப் பகலில் முழக்கித் திரியும் வாலி

பர் கூட்டம், பட்டணத்திலே 'பராசக்தி' பார்த்து விட்டுப் பன்னிரண்டு மணிக்கு ஆலமரத்தடிக்கு ஐம்பது யார் தூரத்திலே வரும்போதே 'பரமனே மதித்திடாப் பங்கையா சனன்' என்று வாயசைப்பது வழக்கம். இன்னும் சந்தைக் குப் போகும் வண்டிக்காரன் தன் லாபங் கருதிச் செய்யும் வணக்கத்தையும், மீன் கடகக்காரி வியாபார நோக்கத் தோடு செய்யும் பிரார்த்தனையையும், சைக்கிளிற்செல்லும் 'மைனர்' ஒற்றைக்கையால் செய்யும் 'சல்யூட்'டையும் அவர் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்.

ஆறேழு மாதத்திற்கொருமுறை யாராவது கொளுத் தும் கற்பூரப் புகையோடு திருப்தி அடைந்திருந்த ஞான வைரவரின் முன்னிலையில் பஸ் சாரதியே முதல் நாள் இறங்கிவந்து தேங்காயடித்துக் கற்பூர தீபம் காட்டி வழி பட்டு முடித்துப் பிரயாணிகளிடம் உண்டியலுக்குப் பணம் சேர்த்துப் போட்டானென்றால் பிறகு கேட்பானேன்? தக ரக் குவளை போய்விட்டது. இப்போது புது உண்டியற் பெட்டி காட்சி அளித்தது.

புது உண்டியற்பெட்டியோடு புதிதாக ஒரு நண்பரை யும் பெற்றார் வைரவர். அந்தப் பறட்டைக் காட்டுப் பனை நிழலிற் பகல் முழுவதும் வெயிலில் உலர்ந்துபல்லுக் காட்டி போவோர் வருவோரிடம் இரந்துகொண்டிருந்த நொண்டியாகிய கணபதி பஸ் ஓடப் போகிறதென்று கேள் வியுற்றதும் அதிர்ச்சியடைந்தான். 'எல்லோரும் பஸ்ஸில் பிரயாணஞ் செய்வார்களே; நான் யாரைப் போய் இரப் பது' என்று தன் பொல்லாத காலத்தை எண்ணி நொந்து கொண்டிருந்த அவன் ஆலமரத்தடியில் பஸ் நிற்பாட்டப் படுவதை அறிந்ததும் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான்.

இரட்டைத் தெய்வங்கள்: நடமாடாத் தெய்வம் புது உண்டியலைக் கோயில் முகப்பிலே அழகாக வைத்துவிட்டுக் கோயிலுள்ளே மனித எத்தர்களின் பித்தலாட்டங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது. நடமாடும் தெய்வம்

தகரக்குவளை ஒன்றை ஏந்தி இடும்பைக்கூர் வயிற்றின் 'கொதி' அடங்குவதற்காகப் பல மனித மிருகங்களின் முகத்தைப்பார்த்துப் பாடிக்கொண்டிருந்தது. ஆனால், வரும்படியில் ஏற்றத்தாழ்வு பாராமல் போட்டியும் பொறுமையுமின்றி ஒருவருக்கொருவர் துணையாயிருந்தனர்.

ஒருநாள்.........

வானநாயகன் பூமாதேவியை நெடுநாட் பிரிந்திருந்து ஆவலாகத் தன் கரம் நீட்டித் தழுவுவதுபோல சோனா வாரியாக மழை பெய்துகொண்டிருந்தது. கொட்டிலிற் கட்டிய மாடு கன்றுகளெல்லாம் குளிரினாலே கொடுகிக் கொண்டிருந்தன. குட்டியீன்ற பெட்டை நாயொன்று கொட்டிலின் கீழே படுத்துக்கொண்டு உறுமுவதும் விடுவது மாய் இருந்தது. நொண்டி இரு கைகளாலும் மார்பை மூடிக்கொண்டு கோயில் என்று சொல்லப்படும் அந்தக் கொட்டகையின் வெளித் தாழ்வாரத்திலே ஒதுங்கிக் கொண்டிருந்தான். 'கட்டாக்காலி'யாகத் திரியும் இரண்டு ஆடுகள் கோயிலின் உட்புறத்திலே சுகமாகப் படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்தன. அவைகளுக்கு இருப்பிடம் அளித்த ஞான வைரவரின் பெருங் கருணை அன்பினாலே பிணைக்கப்பட்டிருந்த அந்த நொண்டிக்கு எப்போது கிட்டப்போகிறதோ தெரியவில்லை.

அன்று பஸ் ஓடினாலும் ஆட்கள் அதிகம் பேர் வரமாட்டார்கள். வந்தாலும் தன்னைப்பார்க்கக்கூட மாட்டார்கள் என்பது கணபதியின் முடிவு. தானும் தன் மகளும் பட்டினியாய்க் கிடக்கவேண்டியிருக்கிறதே என்பதை எண்ணும் போது அவன் கண்களில் நீர் வடிந்தது. 'சீ! இது என்ன மதியீனம். வாழ்க்கையிலே மேடு பள்ளங்கள் எத்தனையோ கண்ட நான் ஒருநாள் பட்டினி கிடப்பதற்கு அழுதால்...' என்ற எண்ணத்துடன் கிழிந்த வேட்டியினாற் கண்ணைத் துடைத்துக்கொண்டான். எதிரே அவன் நெடுநாளாகப் பார்த்த உண்டியற் பெட்டி அவனைப் பார்த்துச் சிரிப்பது

போலக் காட்சியளித்தது. அவன் எண்ணச் சுழல்களில் ஒரு நிமிஷம்........

பன்னிரண்டு வருடங்களுக்கு முன் இதே மாதத்தில், ஒருநாள் யுத்தகாலத்தில், கள்ளு விலை தலைதெறிக்கும் வேகத்தில் உயர்ந்து பணமெல்லாம் தண்ணீர்பட்ட பாடாய் இருக்கும்போது, ஒரு சல்லிப்பெட்டி நிரம்ப ரூபாயும் சில்லறையுமாய்க் குலுக்கிப் பார்த்த காட்சி அவன் மனத்திரையில். அப்போது அவள்— அழகே உருவான முயற்சியில் தளராத அவன் மனைவி—கமலி இருந்தாள். அவன் சவாரி மாடுகள் வாங்கத் தீர்மானித்தபோது அவள் ஐந்து பரப்பு நிலம், குந்தி இருக்க ஒரு வீடு, இவைதான் வேண்டும் என்று சண்டை பிடித்த காட்சி. இப்போது ஊர்ப் பெரிய கமக்காரரின் பொறாமையால் வந்த வினை... சவாரிப்போட்டியால் நொண்டியாகிவிட்ட துயர சம்பவம்.

எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் வெங்காயத் தோலை உரிக்க உரிக்க பின்னும்பின்னும் வருவதைப்போல அவன் முன் தோன்றின.

வெளியே மழை சோவெனப் பெய்து கொண்டிருந்தது. மேகம் 'சட்டச் சடசட சட்டா' என்று தாளங்கள் கொட்டி இடி இடித்துக்கொண்டிருந்தது. வடமேற்கு மூலையில் மின்னல் கண்ணைப் பொறிதட்டியது. பக்கத்தில் இருந்த கறி முருங்கை காற்றின் உக்கிரத்தால் படார் என்று முறிந்தது. கணபதி கனவுலகத்தில் இருந்து அப்போதுதான் கண்விழித்தான். அவன் கண்களுக்கெதிரே ஓடிவந்து கொண்டிருந்தது ஒரு உருவம்.

## 2.

''யோக்கியருக்குங்கும்பிடு; அயோக்கியருக்குங் கும்பிடு; யோக்கியருக்கும் பாத காணிக்கை; அயோக்கியருக்கும் பாத காணிக்கையானால், திருத்தம் எப்படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ அயோக்கியர் தொகை குறையக் குறைய யோக்கியர் தொகை அதிகப்படும்''

— நாவலர் பிரபந்தத்திரட்டு 61ம் பக்கம்

நறுக்கு மீசை நாகரிகத்தோடு பரட்டைத்தலையில் இருந்து தண்ணீர்வழிய ஓடிவந்த அந்த வாலிபனை பீடி மூர்த்திஎன்று மருதஞ்சேரிவாலிபவட்டாரம் கூப்பிடுகிறது. ஆம், 'தேடி உன்னைச் சரணடைந்தேன், தேன் மணக்கும் பீடி—யம்மா—தேன் மணக்கும் பீடி' என்று கலிகாலக் கவிதைகளை வாயாரப் பாடிச் 'சீட்டி' அடிக்கும் வாலிபன் அவன். தசம பின்னங்களிலேயே தலைசுழன்று ஐந்தாம் வகுப்பை அரை வருடத்தில் விட்டு நீங்கி 'வாயுள்ள பிள்ளை

பிழைக்கும்' என்றதமிழினத்தின் சித்தாந்தத்தைத் தானும் கடைப்பிடித்து, சுருட்டுத்தொழில், கடை வியாபாரம், பஸ்கொண்டக்ரர், பைசிக்கிள் கடை முதலாளி இப்படி எத்தனேயோ புதுப் பிறவிகள் எடுத்தவன் பட்டினத்து நாகரிகத்தைக் கிராமம்வரை எட்டச் செய்து பகல் வேஷம் போடுமிவனேக் கிராமத்தில் எல்லோருக்கும் தெரியும். 'துட்டரைக்கண்டால் தூரவிலகும்' கிராமத்தானே இவன் 'பயந்த பிராணி' என்றே மதித்துத் தன் திருவிளேயாடல்களேச் செய்தான்.

அந்த வாலிபனே நொண்டி கண்டதும், ''தம்பீ! நல்லாய் நனேந்துபோனுயே! மழை விட்டபின்பு வந்தால் என்ன?'' என்று மிகப் பரிவோடு வினவினுன். தலேயில் வடியும் தண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்தபடியே ''அது என் இஷ்டம்; நீ யார் கேட்பதற்கு?'' என்று முகத்தில் அறைந்தாற்போலப் பதில் சொன்னுன் மூர்த்தி.

வாலேக் குழைத்து நன்றி பாராட்டி ஆசையோடு ஓடி வரும் நாய் ஒன்று, வந்தமனிதனின் காலால் அடிபட்டு 'வாள் வாள்' என்று கதறுவதுபோல, அந்த மனிதமிருகத்தின் அலட்சிய வார்த்தைகள் கணபதியின் நெஞ்சைத்தாக்கி அவனே அலறச்செய்தன. அவன் ஒன்றுமேபேசாமல் எழுந்து நின்ருன்.

வெளியே மழை ஓய்ந்துவிட்டது. ஆனுல் அந்தநொண்டியின் மனதில் புயல் வீசியது. ஆலமரத்தின் இலேகளிலிருந்து பெரும் துளிகள் கூரையின்மீது விழும் ஓசை மாத்திரம்இடையிடையே கேட்டது. அவன் மனதிலும் 'நீ யார் கேட்பதற்கு' என்ற பாருங் கற்கள் ஒவ்வொரு கணமும் தாக்கிக்கொண்டிருந்தன.

தன் சட்டையிலுள்ள பையைத் துளாவி ஒரு 'பீடி'யை எடுத்து வாயில் வைத்தபடி வெகு கவனமாக மடியினுள் நனேயாமற் பாதுகாக்கப்பட்ட நெருப்புப் பெட்டியை எடுத்துத் தட்டினுன் மூர்த்தி. எல்லோரும் பயபக்தியோடு வணங்கும் ஞான வைரவரின் தெய்வ சந்நிதானமென்பதை

சிறிதும் மதியாமல், பட்டினத்துப் போலி நாகரிகமென்னும் போர்வைக்குள் இருந்து கொண்டு—கடவுள், கோயில் என்பவற்றையெல்லாம் வெறுங் கற்களென எண்ணிய அவனைக்கண்டு—அவன் செயலைக்கண்டு—தெய்வம் சிரித்தது. 'தவறிவிழுபவர் தம்மையே பெற்ற தாயும் சிரித்தல் மரபானல் தெய்வம் சிரிக்காதா?'

தெய்வம் சிரிக்கலாம். ஆனல்...... ஆயிரம் தேள்கள் தங்கள் விஷக்கொடுக்குகளால் ஒரே நேரத்தில் கடிப்பதைப் போன்ற மனக் கடுப்பை இந்த அனுசாரச் செயல் நொண்டிக்கு உண்டாக்கியது.

''ஏன் உனக்கு வீடு வாசல் கிடையாதோ? கோவில் முகப்பிலே பீடி பற்ற வைக்கத்தான் நாகரிகம் படிப்பித்ததோ?'' அளவு மீறிக்கொதித்த நீர், மூடியைக்கவிழ்த்து விட்டுப் பொங்கி வழிவதைப்போல, மனமூடியைத் திறந்து கொண்டு ஆத்திரமானது பொங்கி வெளிப்பட்டது அந்த ஏழையின் வாயிலிருந்து. 'தம்பி' என்ற வார்த்தைபோய், தடித்த—அழுத்தமான—'உனக்கு' என்ற சொல்லைக் கணபதி உபயோகித்தது இதுதான் முதல் தடவை.

''உன் வேலையை நீ பார். என் குளிருக்காக நான்குடிக்கிறேன்'' என்ற பதிலையே கொஞ்சம் சுருதி குறைந்த குரலில் மூர்த்தி முணுமுணுத்தான். தான் செய்யும் செயல் பிழையானது தான் என்று அவன் ஆத்மா கூறியதோ என்னவோ?

''இன்று பீடியைக்குடிக்கலாம்...... அது உன் இஷ்டமுமாகலாம்...... நாளை பணந்தேவைப்படலாம்... அப்போது இந்த உண்டியல் பெட்டியை உடைக்கலாம்... அதுவும் உன் இஷ்டமாக முடியுமா?......கோவில் சந்நிதானத்தில் யாரும் தன்னிச்சைப்படி செய்ய முடியாது... செய்யக்கூடாது'' என்ருன் நொண்டி.

ஏழை; அதிலும் கையேந்திப் பிச்சை எடுக்கும் நொண்டி. அது மாத்திரமா? தாழ்த்தப்பட்டவன் என்று சமூகம் பலகாலமாக ஒதுக்கிவைத்தவன். தனக்கு—'இருமர

பும் துய்ய வந்த' நரசிங்க முதலியார் வழி வழி வந்த மூர்த்திக்கு எதிர்நின்று 'இது செய்யக்கூடாது' என்று கட்டளையிட அவன் பொறுப்பானு?

பக்கத்தில் கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்து வந்து உண்டியல் பெட்டியின் பூட்டுமீது போட்டபடி 'இதோ! பார்!! இந்த மூர்த்திக்குப் பயம்காட்ட யாராலும் முடியாது. உடைக்கப் போகிறேன்... நீ தடு பார்க்கலாம்; அல்லது ஊருக்குள் போய்ச் சொல்லு; அல்லது தெய்வத்திடம் கதறு'' என்று ஆவேசம் வந்தவனைப்போலக் கத்திஞன். நொண்டி கலங்கியே விட்டான். தன் கையிலிருக்கும் தகரக் குவளையை யாரோ தட்டிப் பிடுங்குவதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

''பாவி! பூட்டை உடைக்காதே! என்னை என்ன வேண்டுமாஞலும் செய்; என் கண்காணப் பாவத் தொழிலைச் செய்ய நான் விடமாட்டேன்'' என்று மோட்டாரின் முன் ஓடும் குழந்தையைத் தாவிப் பிடித்து அணைக்கும் தாய் போலப் பெட்டியை எடுத்து அணைத்துக்கொண்டான்.

பாவம்; இந்த மெலிந்த நொண்டி உண்டியலைக் காப்பாற்றப் படும்பாட்டைக் கண்டு மூர்த்தி சிரித்தான்...... ஆஞல்... விதியின் கை ஏட்டைத்திருப்பிப் பின்ஞல் வருவதையறிந்து சிரித்தது. ''கையை எடு; எடுக்கிருயா? இல்லையா?''... என்று வினவியபடியே 'படார்' என்று நொண்டியின் கன்னத்திலே அடித்தான் மூர்த்தி. பனியில் நனைந்து வெயிலில் உலர்ந்து பசியால்வாடி எலும்புக்கூடாக இருந்த அவன் இந்த அடியிஞல் நிலை கலங்கி உண்டியல் பெட்டியை கைவிட்டு 'அட பாவி!' என்ற சத்தத்தோடு நிலத்தில்வீழ்ந்தான். நிலத்தில் இருந்த கல் தன் வேலையைச் செய்து முடிக்கத் தியாகத்தின் சின்னமான இரத்தம் நெற்றிமேல் வழிந்தது.

ஓய்ந்திருந்த மழை திடீரென்று காற்றுடன் கூடிப் புய லாயடித்தது. இந்த் அநீதியைக் கண்டு இயற்கைத் தேவன்

கோபித்தானே? ஆலமரத்தின் கொம்பர் ஒன்று முறிந்து 'மூர்க்கா' என்ற சத்தத்தோடு கொட்டகையின் ஒரு பக்கத்தில் விழுந்தது. உள்ளே படுத்திருந்து ஓய்வெடுத்த இரண்டு ஆடுகளும் 'அம்மா' என்ற சத்தத்துடன் வெளியே ஓடின. ''பாவீ! பாவீ!!'' என்ற அலறலுடன் கடகட என வரும் பஸ்ஸின் சத்தம் தூரத்திற் கேட்டது. 'யாராவது வந்தால்......' கோழையாகிய மூர்த்தி பீடியை எறிந்துவிட்டுச் செய்வதென்னவென்று அறியாது தயங்கினான்.

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்' என்று பாடிய புலவன் வாக்குப் பொய்த்துப்போய் விடவில்லை. 'பீடிமூர்த்தி' தன் கீர்த்தியை உயர்த்த ஏழைநொண்டிக்குச் செய்த செயலுக்குப் பயனை விதியின் கை வேறு விதமாகத் தீர்மானித்துவிட்டது. மருதஞ்சேரிக் கிராமத்துப் 'பெரிய மனுஷ'ராகிய பொன்னம்பலவாணர்— ஆம், அவர்தான் ஞானவைரவருக்கு இருப்பிடம் நல்கி உண்டியல்பெட்டியும் உபகரித்தவர்— அவரின் மருமகன் மாசிலாமணி பஸ்ஸில் இருந்து இறங்கிவருவதை மூர்த்தி கண்டான்.

குறும்புசெய்த பையன் ஆசிரியரின் அடிக்குப் பயந்து முன்னதாகவே போய் ''இவன் கிள்ளிவிட்டான் வாத்தியார்'' என்று அழுதுகொண்டு புகார் செய்வதைப் போல, ''இங்கே பார்தம்பி! பசுத்தோல் போர்த்த புலி; பாசாங்குக்காரக் கிழவன்; இந்த மழையில் யார் வரப்போகிறார்களென்ற துணிவில் பூட்டை உடைத்துத் திருடுகிறானே; நான் தற்செயலாக வந்துவிட்டேன். ஏனடா திருடுகிறாய்? என்று கேட்டால்......'' என்று இன்னும் ஏதேதோசொல்ல வாயெடுத்தான் மூர்த்தி.

கிழவன் முகத்தில் இரத்தம் வழிய அலங்கோலமாகக் கிடக்கும் நிலையைக்கண்ட மணி, தன் சால்வையின் ஒரு பாகத்தை மழைத்தண்ணீரில் நனைத்து நெற்றியில் வழியும் இரத்தத்தைத் துடைத்தான். களைப்பு நீங்கிக் கண்ணைத் திறந்த கணபதியின் மங்கிய பார்வையில் தன் முன்னிலையில் கண் கலங்கநிற்கும் மாசிலாமணியை— இல்லை, இல்லை—

அவனது ஞான வைரவர் சிரித்த முகத்துடன் அவனுக்கு அபயந்தந்து நிற்கும் நிலையை—கண்டான். அன்பே சிவமான நிலையைக்கண்டு ஆனந்தங்கொண்டான். 'சுவாமி!' என்றே அவன் வாய் முணுமுணுத்தது.

''ஐயோ! தாத்தா!! நான்...மாசிலாமணி...பார் தாத்தா... நன்ருகப்பார்... நீவளர்த்தபிள்ளை வந்திருக்கிறேன். வாருங்கள்... நான் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் விடுகிறேன்'' என்று கையிற் பிடித்தான். ஆகா! இந்த வார்த்தைகள் ஆயிரம் உண்டியல்பெட்டிகளில் பதினுயிரம் ரூபாயைவைத்துக் குலுக்கிப்பார்ப்பதிலும் பார்க்க நொண்டிக்கு மகிழ்ச்சியை அளித்தது. அது மாத்திரமா? அதேவாலிபனை சிறு குழந்தையாகத் தோள்மேலேற்றிப் 'பட்டுப்பூச்சி பிடி பட்டுப்பூச்சி பிடி பிடி!!' என்று கூச்சலிட்டுமகிழ்ந்தது ஒரு கணம் மனத் திரையில் வந்து மறைந்தது.

''தம்பீ! 'குலத்தளவே ஆகும் குணம்' என்பது பொய்யல்ல; மெய்... மழை பெய்கிறது... வெய்யில் எறிக்கிறது... ...நான் போவேன்... இனிச் செத்தாலும் பரவாயில்லை... நான் போவேன்'' என்று தொடர்பில்லாமல் கணபதியின் வாயிலிருந்து வார்த்தைகள் பிறந்தன. தன் குறி தவறியதைக் கண்டு— தான் சொன்னதை எள்ளளவும்நம்பாததை அறிந்து— கோபத்தணல் மூண்ட மூர்த்திக்கு நொண்டியின் 'குலத்தளவே ஆகும் குணம்' என்ற வார்த்தை புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருந்தது.

''ஏய்! நிற்பாட்டும் உமது கதையை. நீ வளர்த்த பிள்ளைதானே இந்தப் பிரபு. அவன் வேறு என்ன செய்வான்...!'' என்று மமதை பிறக்கக் கூறினுன். ''ஆம், நான் வளர்த்த பிள்ளைதான். ஏன்? உன்னைப்போல ஊர் சுற்றி உலுத்தனுகிருனு?... கோயில் முகப்பிலே பீடி பற்ற வைக்கிருனு? அந்த அநியாயத்தைச் சொன்னுல் அடித்து வளர்த்துகிருனு?... உண்டியற் பெட்டியை உடைக்கிருனு? ஊருக்கும் தெய்வத்திற்கும் பயமே இல்லை என்று உழறுகிருனு? சொல்... அப்பா, சொல்.'' எரிமலை கக்கத் தொட

ங்கி அடியிலிருந்து அக்கினிக்குழம்புகள் 'குபீர்குபீர்' என்று வெளியே கக்குவதைப் போல நொண்டியின் வெந்த மனதிலிருந்து வெளிவந்தன சொல்லம்புகள். தெருவிலே நின்று பல்லுக்காட்டிப் பிச்சை எடுக்கும் நொண்டிக் கணபதியாக இப்போது அவன் இல்லை. பாதகம் செய்பவனைக் கண்டு மோதி மிதித்துவிடும் வாலிப வயதுக் காளையைப் போல இருந்தான்.

''இந்தப் பயலின் பக்கத் துணைகண்டு துள்ளாதே கிழவா!'' என்று உறுமினான் மூர்த்தி.

''நிறுத்துடா உன் பேச்சை. ஒன்றுக்கும் உதவாத உன்னுடன் என்ன பேச்சு என்று பொறுத்திருக்க நீ என்ன துள்ளுகிறாய்'' மாசிலாமணி தனது உணர்ச்சியைக் கொட்டினான். ''உனக்கும் இவனுக்கும் ஒரு பாடம் படிப்பிக்காமல் விட்டால்... நான் மூர்த்தியில்லை.'' இந்திரன் சபையில் விஸ்வாமித்திரர் இட்ட சபதம்போல ஞானவைரவர் முன்னிலையிலே மூர்த்தியின் சபதம் முடிந்தது. மாசிலாமணி ''வாருங்கள் தாத்தா போகலாம்'' என்றான்.

ஆவேசத்தோடு வீட்டைநோக்கிவிரைந்தான் மூர்த்தி.

## 3.

''என் நண்பர்களே! ஒன்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். என் பிள்ளைகள் வளர்ந்து வயது முதிர்ந்தவர்களான காலத்தில்அவர்கள், பொருளை அல்லது வேறு எதையாவது தர்மத்தைவிடப் பெரிதாக நினைத்தார்களானல் அவர்களைவிடாதீர்கள். நான் உங்களை எப்படி விடாமற் சோதனை செய்து வந்தேனே அப்படி அவர்களையும் தொந்தரவு செய்து தண்டனையும் விதியுங்கள்.''

—ஸோக்கிறற்றீஸ்...நியாயஸ்தலப் பிரசங்கம்.

**வா**லிப வயதின் திருவிளையாடல்களிலே நரை கண்டுவிட்ட தலையும், பரம்பரை பரம்பரையாக வந்த பணத்தை வட்டிக்கு வட்டி போட்டு ஏழைகளைப் பிழிந்து வாங்கிய பணத்திலே பெருத்த தொந்தியும், சுதேச வைத்திய பூபதி குமரேசரின் தங்க செந்தூர மாத்திரையினலே வெளிறிய மேனியும், சாதிச் செருக்கினலே யாரையும் மதியாத வாய்வீச்சும் கொண்ட உயர் திரு. பொன்னம்பலவாணர் கல்லுவைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்

பிட்டும் 'மலடன்' என்றபட்டத்தை வாங்கவேண்டுமென்று தான் விதியின் கை எழுதிவிட்டது.

இந்தத் துக்க சமாசாரத்தை மறப்பதற்காகத்தான் ஒரே தங்கையின் புதல்வன் மாசிலாமணியைத் தன் வீட்டோடு வைத்துப் படிப்பித்து வந்தார். வீதி ஆட்டங்கள் எதிலும் சேராமல் தூண்டு நூற்கணத்தோடு தனியனுய்த் தோழமை பிறிதின்றி முயன்று ஒரு தமிழ்ச் சட்டம்பியார் ஆகும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது. சிறு குழந்தை முதல் கணபதி— இப்போது நொண்டியாகிவிட்ட அந்த ஏழைதான்—அவனுக்கு உலகம் போதிக்கும் உபாத்தியாயன். தவளையும், பூவும், தசம பின்னமும் பற்றிப் பாடசாலையில் அவன் படித்ததெவ்வளவோ அவற்றிலும் பன்மடங்கு ஊரின் நெளிவு சுளிவுகள், போட்டி பொருமைகள், சாதிக் கட்டுப்பாடுகள், சமயப் பித்தலாட்டங்கள் எல்லாவற்றையும் அவன் கணபதியிடம் கற்ருன்.

பொன்னம்பலவாணர் எவ்வளவு அடக்கி ஆளக்கூடிய ஒருவனுக அவனை வளர்க்கத் தெண்டித்தாரோ அதற்கு எதிர்மாருய் விஷயம் முடிந்துவிட்டது. அவரின் சாதித் திமிரும், மலடன் என்ற குறையும், எந்தவிதக் காரியத்திலும் தலைகாட்டியதை மாசிலாமணி வெறுத்தான். குடும்பத்தில் ஒருவனுக வாழ்ந்த கணபதி மாமனுரின் கருமித்தனத்திலே அவரை விட்டு நீங்கி யுத்தகாலத்திலே பணம் புரள வாழும் செய்தி கேட்டு மாசிலாமணி அடைந்த சந்தோஷம்சொல்ல முடியாது. தன் கீழ் கையேந்திப் பிழைத்த பள்ளன் செல்வச் செருக்கில் புரள்வது பொன்னம்பலவாணரை வாட்டி வைத்தது. கடைசியில் அவன் வண்டிச் சவாரியிற் கால்களை இழந்து வைத்தியச் செலவுக்காக இவ்விடம் வந்து மன்ருடிய காட்சி மாசிலாமணியின் இதயத்தை உருக்கியது. கல்லேனும் அவன் வார்த்தையில் உருகும்; மாமனது கல் நெஞ்சம் உருகாத நிலையில்தான் கணபதியின் முற்காலப் போதனையின் நிதர்சன உண்மையை மணிகண்டான். அன்று தொட்டுச் செஞ்சோற்றுக் கடன்கழிக்கத் தாமரையிலையில்

தண்ணீர்போல அவன் வாழ்க்கை நடத்த முடியாது. பொருளைப் பெரிதாக மதிக்கும் புல்லர்—தர்மத்தை அசட்டை செய்யும் ஈனர்—இவர்கள்பெற்றதந்தையாயினும் வளர்த்த மாமனுயினும் பலம்மிக்க 'கேடி'யாயினும் எதிர்க்க வேண்டும். பயந்து பயந்து பலநாள் சாவதைவிட—மண் புழுப் போல் நசுங்கி மாய்வதைவிட—தான் சரியென நினைக்கும் ஒன்றுக்காகத் தனியே போராட வேண்டும் என்று முடிவு செய்தான். பீடி மூர்த்தி கோயிலில் 'உனக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் விட்டால்...நான் மூர்த்தியல்ல' என்று சபதம் செய்த போது இந்த மூர்த்தி வெறும் வாய்ச்சவடால் பேர்வழி என்றுதான் அவன் அலட்சியமாய்விட்டுவிட்டான்.

ஆனுல் இன்று...

பாடசாலையின் அந்த முப்பது பிள்ளைகளின் காக்காய்க் கொறிப்பு, கழுதை அலறல், பூனைச் சண்டை, புலியின் உறுமல் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வீட்டின் வாயிலில் நுழையும் போதே நல்லதம்பிக் கிழவனுரின் 'நான் சொல்வது விளங்கிச்சுதோ' பாஷை அவன் காதிற்கு நாராசம்போற் கேட்டது. ஒரு கணம் நின்முன். இந்தக் கிழவனுருக்கு இன்றைக்குச் சுடச் சுடக் கொடுக்கவேண்டும்என்று அவன் மனம் எண்ணிய போது, பொன்னம்பலவாணரின் 'அப்புறம் என்ன?' என்ற கேள்வி அதிகாரத்தோடு கேட்டது.

''அப்புறம் என்னவா?... நான் சொல்கிறதைச் சொல்லிவிட்டேன்...உன் மருமகனை இந்த விஷயங்களில் தலையிடாதே...உபாத்தியாயராய் இருப்பவனுக்கு இந்தக் காரியங்கள் ஏன்? என்று கண்டித்துவிடு...நான் சொல்வது விளங்கிச்சுதோ'' என்று நல்லதம்பி கூறித் தலைநிமிர்ந்தார்.

''இந்த ஊரில் நடக்கும் காரியங்களில் சிலர் சில காரியத்தில்தான் தலையிடலாமென்று இருக்கிறதோ? ஆனுல்... காடு வா வா என்றழைக்கும் நீங்கள் தர்மாதர்மம் பாராமல் எல்லாவற்றிலும் ஈடுபடலாம் என்று விதி எழுதியிருக்

கிறதா?''என்று கேட்டுக்கொண்டே தோளில் இருந்த சால்வையைக் கொடியிற் போடுவதற்குப் போனுன் மணி.

பரீட்சையில் பார்த்தெழுதும் மாணவன் அதிகாரியாற் பிடிபட்டு மிரள மிரள விழிப்பதைப் போல விழித்தார் கிழவனுர். 'இவருடைய மகன் சுந்தரமூர்த்தியோடு உனக்கென்ன தகராறு?' என்று நீதிபதிபோலக் கேட்டார் மாமனுர். 'ஏன், கிழவனுரைக் கேட்டே தெரிந்துகொள்ளலாமே'' என்று அலட்சியமாகப் பதில் சொன்னுன் மணி.

வேருெருவர் முன்னிலையில் தன்னுடைய உப்பைத்தின்று தலை கனத்த வார்த்தையாடும் மணியின் பதிலைக் கேட்டதும் 'அடியுண்ட நாகம்'போற் சீறி எழுந்தார் பொன்னம்பலம். 'உன்னுல் சொல்ல முடியாதோ?' என்று கேட்டுக்கொண்டே கிட்ட நெருங்கினுர். விஷயம் விபரீதமாக முடியப் போகிறதே என்று பயந்த கிழவனுர், ''தம்பி சிறிசு தானே; அது சொன்னதற்கு ஆத்திரப்படலாமோ'' என்று பூசி மெழுகினுர்.

மணியின் ஆத்திரம் எல்லை கடந்து விட்டது. வாலிப வயதின் இரத்தம் கொதித்தது. அவன் வாயிலிருந்து சொல்லம்புகள் வெளிவந்தன. அவன் பேசினுன்.

''ஊராரை ஏமாற்றிக் கோள் சொல்லி வயிறு வளர்க்கும் மூர்த்தி, பட்டினத்திலே கற்றுக்கொண்ட நாகரிகத்தைப் பட்டிக்காட்டி லும் காட்டிவிட்டான். எனக்கல்ல, உங்களுக்கல்ல, தெய்வத்திற்கு, தெய்வ சந்நிதானத்திற்கு. 'பீடி குடிக்க வேறு இடம் இல்லையா' என்று கேட்க ஏழைக்கு உரிமையில்லையா? நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப் பதினைந்து வருடமாக மாடுபோல உழைத்த அவன் பணம் அந்தக் கோவிலைக் கட்ட உதவவில்லையா? கேட்கிறேன். ஏழையாய் இருந்தபடியால் கேட்டான்...இவன்... உன்னுடைய மூர்த்தி அடித்தான். நாமாக இருந்தால்... ஒரு நிமிஷம் சற்று யோசித்துப் பாருங்கள்.''

''நான் செய்தது இவ்வளவுதான். எங்கள் குடும்பத்தில் வாழ்ந்து கெட்டுப்போன அந்தக் கணபதிக்கு ஆறுதல்

சொன்னேன். ஏன்? வருத்தப்படும் எந்த உயிருக்கும் நாய், புழு, எறும்பு என்றாலும் உதவி செய்வது மனித தர்மமில்லையா?''

அவன் சிறிது நிறுத்தினான். பொன்னம்பலவாணர் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார். நல்லதம்பிக் கிழவனார் சிரித்துக் கொண்டே சொன்னார்.

''சரி, சரி நீ அந்த ஈனசாதிப்பயல் சொன்னதை நம்பி எனக்குத் தர்மோபதேசம் செய்கிறாய். செய்—செய்வதை நன்றாக யோசித்துச் செய். இதன் விளைவுகளை அனுபவிக்கப் போவது யார்? உண்டியல் பெட்டியை உடைக்கப் போனவனைத் தடுத்து நிறுத்தியது குற்றமா? அப்படித்தான் என் மகன் கேட்கிறான். நீ தான் அவனுக்கு ஏமாற்றிக் கோள் சொல்லிப் பிழைப்பவன் என்று பட்டம் சூட்டிவிட்டாயே. இனி அப்பீல் ஏது? போகட்டும். பள்ளன், குலம், குணம் எல்லாம் விசாரித்தானுமே. நீ கேட்டுச் சிரித்திருப்பாய். நாளைக்கு உன்னையும்...ஏன், உன்னுடைய மாமனையும் அவன் தான் விசாரிக்கப் போகிறான்...இன்று என் மகனைப் பார்த்து நீ சிரிக்கலாம்... ஊர் சிரிக்கலாம். நான் சிரித்தால்....உங்களைப் பார்த்து நான் சிரித்தால்... திரிபுரம் எரியும். தம்பி ஞாபக மிருக்கட்டும். வருகிறேன்.''

நல்லதம்பி கைத் தடியை ஊன்றிக் கொண்டு எழுந்தார். முழுப் பூசினிக்காயை ஒரு இலை சோற்றில் மறைக்கும் முழுமோசப் பேச்சைக் கேட்டுக் கொண்டே சட்டையைக் கழற்றிய மாசிலாமணி, ''பெரியவரே! நான் சிரிப்பது கிடையாது. இந்த ஊரின் போக்கைக் கண்டு சிரிப்பதா?... அழுவதா?...ஊராருக்கு நியாயம்வழங்கும் பெரியவர்களின் சிறு பிள்ளைத் தனத்தைக் கண்டு சிரிப்பதா? அழுவதா? சிரிப்பதும் அழுவதும் எங்கள் கையிலும் இல்லை, உங்கள் கையிலும் இல்லை. விதியின் கையில்தான் 'இருக்கிறது' என்றான் உதாசீனமாக.

''விதி...வீதி...விதி, யார் சொன்னது அப்படி? மதியின் கூர்மை அதை முறியடித்து விடுகிறதா? இல்லையா? பார்

போம்' என்றவாறே கிழவர் சென்றார். 'பாம்பின் கால் பாம்பறியும், பத்திரம்' என்றார் பொன்னம்பலவாணர். சென்றுகொண்டிருந்த நல்லதம்பியின் காதுகளில் இவ் வார்த்தைகள் அழுத்தமாக விழவேண்டுமென்பதற்காகச் சற்று உரத்த குரல் எடுத்தார் பொன்னம்பலவாணர். அவ் வளவுக்கு அவருக்கும் ஆத்திரமூட்டுவதாக இருந்தது நல்ல தம்பியின் சபதம்.

என்றாலும் மறுகணம் மாசிலாமணியைப் பார்த்து உனக்கு எங்களுடைய பரம்பரைப் பெருமை தெரியாத தால் வந்த வினை இது. நான்ஏதோ நினைச்சு உன்னைவளர்க்க நீ என்னவோ போல நடக்கிறாய். உந்த நடத்தைகளால் இந்தமாதிரியான வில்லங்கங்கள்தான் வரும். இனிமேலா வது புத்தியாய் நட. நீ நினைக்கிறது போல உந்தத் தயவு தாட்சண்யம், கருணை என்பவற்றால் இந்தக் கிராமத்துச் சனங்களை எங்கள் கைக்குள் வைத்திருக்க முடியாது. எங்கள் தலைமுறை பின்பற்றிவந்த அடக்கு முறையாலேதான் நாங் கள் தலைநிமிர்ந்து வாழலாம் என்பதை நீ உணர்ந்துகொள்' என்று பொன்னம்பலவாணர் கூறிய அறிவுரையில் அடங்கி யிருந்த உட்பொருளைக் கண்டு மாசிலாமணி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

# 4.

உயிரே, நீ கல்லாய்ப் பிறந்தால் காந்தக் கல்லாய்ப் பிற; செடியானால் தொட்டாற் சுருங்கிச் செடியாகிவிடு; மனிதனானால் காதல் செய்; காதலர் இல்லாவிடில் ஞாயிறு என்ற தீப்பந்தம் அவித்து விடும்.

—விக்டர் ஹ்யூகோ.

மருதஞ்சேரிக்கிராமத்துக் குடிசனங்களுக்கு ஞான வைரவரின் திருப்பார்வையினாலோ அல்லது 'கூப்பன்' மாவின் கெடுபிடியினாலோ குடும்பம் பெருகத் தொடங்க, அதன் அதிர்ச்சி அவ்வூர்த் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர்களுக்குத் தலைவலியை உண்டாக்கி விட்டது. மூன்று 'ஆண்' சட்டம்பிமாரும், ஒரு நையல் அம்மாவும் இருந்து அதிகாரஞ் செலுத்திய இடத்திலே ஐந்தாவது இடத்திற்கு ஆணா, பெண்ணா என்ற விஷயம் அலசி ஆராயப் பட்டது. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவருமிங்கில்லை என்ற பழைய பாட்டை மறந்துவிட்டு, 'அடகெடுவாய் பல தொழிலும் இருக்க இங்கே அலைச்சல் படத் தமிழ் உபாத்தி ஆகினோமே' என்று வாயில் முணுமுணுத்தபடியே ஆணும் பெண்ணும்

பல சிபார்சுக் கனதனவான்களுடனும் 'கையுறை'களுடனும் மருதஞ்சேரிப் பெரிய மனுஷர் பொன்னம்பல வாணரை 'முற்றுகை'யிட்டும் விஷயம் விபரீதமாக முடிந்து விட்டது. அவ்வூர்ப் புதுப் பணக்காரர் கணபதிப் பிள்ளை கோட்டையை 'முற்றுகை'யிட்டுப் பணம் என்னும் அஸ்திரத்தை ஏவித் தன் மகள் அமிர்தாம்பிகையை உள் நுழைத்து விட்டார்.

மார்கழி மாதத்துத் திருவெம்பாவையோடு விடுமுறை விடப்பட்ட பாடசாலை, தைப்பொங்கல் முடிந்து கலகலப்புடன் திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. தங்கள் ஊரிலே இருக்கும் அமிர்தம் பாடசாலையிலே புது அம்மாவாகக் காட்சி அளித்ததைக் கண்டு பிள்ளைகள் சந்தோஷத்தோடு அளவளாவினர். தலைமை ஆசிரியர் புது நேரசூசி அமைத்த லில் மூழ்கினார். பிற ஊர் ஆசிரியர் ஒருவர் புது உபாத்தியாரம்மாவைப் பாதாதிகேசமாகப் பார்த்து முடிந்ததும் தமக்குரிய வகுப்பில் இருந்து புது மாணவர் சேட்டைகளை அனுபவித்தார். தையல் அம்மாவென்ற கிழவி வரும் வண்டி இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை. முதல் முதலாக மாசிலாமணிதான் உடன் ஆசிரியர் என்ற கோதாவிலும் அவ்வூரில் 'அவள்' அறிந்த மனிதர் என்ற முறையிலும் பேச்சைத் தொடங்கினான்.

"நீர்தான் எங்கள் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறீர் என்று ஐந்தாறு நாளைக்கு முன் கேள்வியுற்றதும் நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்று அவன் வாக்கியத்தை முடித்து அப்பாலும் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "இருக்கலாம்... ஆனால்... உங்கள் மாமனார் இது விஷயமாக மிகக் கோபங்கொண்டும் இருக்கிறார் என்பதும் எங்களுக்குத் தெரியும்" என்ற வெடிகுண்டை அவள் தூக்கிப் போட்டாள்.

'முதல் நாளே, முதல் சம்பாஷணையே இப்படி இருந்தால்...' என்று மாசிலாமணி எண்ணிக் கொண்டு, "அவர் கோபிக்கலாம்... எனக்குச் சந்தோஷந்தான்... இந்த ஊர்ச்

சனங்களின் முறைப்பாடுகளை எல்லாம் கோவர்த்தன கிரியைத் தாங்கிய கோபாலன் போலத் தனியே சுமந்து சுமந்து அலுத்துப்போனேன். இப்போது பாதியைச் சுமக்க நீயும் வந்தது நல்லதல்லவா'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான். அவளும் கூடச் சிரித்தாள். அவ்வளவுதான்... ஆனால்...

அன்று முழுவதும் கோபாலன் - கோவர்த்தனகிரி என்ற இரண்டு சொற்களும் அவள் மனத்திரையில் அடிக்கடி தோன்றின. சரஸ்வதி படத்திற்குக் கற்பூர தீபங் காட்டித் தேவார பாராயணம் நடந்தபோதும் அவளால் கோபாலன் - கோவர்த்தன கிரியை மறக்க முடியவில்லை. தையல் அம்மா என்ற தெய்வானைக் கிழவி கேட்ட பல வினாக்களுக்கும் அவள் வெறும் யந்திரம் போல—உணர்ச்சி இன்றியே—பதில் சொன்னாள். புது வகுப்புக் குழந்தை ஒன்றை ''உன் பெயர் என்ன?'' என்று அவள் கேட்டதும் அது தன் மழலை மொழியில் ''கோ...பா...ல...ன்'' என்றதும் அவள் உரக்கச் சிரித்தே விட்டாள்.

'கோபாலன் என்று காரணமில்லாமல் அவர் கூறினாரா? நீ... கோபிகையாக வந்து எனக்கு... சீ! இது வீண் கனவு. அவர் மரபு என்ன? இந்த ஊரில் அவர் மாமனார் வைத்ததே சட்டமாயிருக்கிறதே. அவர் மருமகன் விளையாட்டுக்குக் கூட இப்படி எண்ணுவாரா? உவமானத்துக்குச் சொன்ன ஒரு சொல்லிற்காக இப்படிக் கற்பனைக் கோட்டைகள் கட்டுவதா?... பிறகு... இன்று முழுவதும்... ஒரு வார்த்தை... ஒரு பார்வை... ஒன்றும் இல்லையே. இதை நான் ஏன் அடிக்கடி நினைக்க வேண்டும்?' என்று அமிர்தம் பாடசாலையை விட்டு வீட்டுக்குப் போகும் போது எண்ணி அதை மறக்க முயன்றாள். என்ன அநியாயம்! சினிமா விளம்பரம் செய்து வந்த மோட்டாரின் ஒலிபெருக்கியிலிருந்து ''கோபாலனோடு நான் ஆடுவேனே'' என்ற சத்தம் அவள் காதைத் துளைத்தது.

'அமிழ்தாற் செய்த நஞ்சு' என்று கம்பர் வர்ணித்தாரே, அதுபோல அமிர்தாம்பிகையின் உள்ளம் இருக்கிறதா...? எப்படி இருந்தாலும் உள்ளதைச் சொல்லிவிட்டாளே... என் மாமனார்... அவர் ஊரின் கோயில், பாடசாலை, ஒழுங்கை, கிணறு எல்லாம் தம் அதிகாரத்தில் தன் சுண்டு விரல் நுனியில் ஆடும்... ஆட்டப்படும் பொருட்கள் என்று தலையிடுகிறாரே. ஏன்? பாடசாலை நியமனத்தில் ஒரு தோல்விப்படலம் எழுதியாகி விட்டது... இதற்கு அவர் எப்படி வர்மம் சாதிக்கப்போகிறாரோ? பேதைப் பெண்ணே! என்னிடம் சொன்னதுபோல் வேறு யாரிடமும் சொல்லாதே என்று நான் எச்சரித்திருக்க வேண்டும்... நான் ஏன் சொல்ல வேண்டும்? அவள் மீது அன்பா... காதலா... இல்லை... வேறு ஏதாவது...' என்று மாசிலாமணி நினைத்துக்கொண்டு வீட்டுப் படலையைத் திறந்தான்! சினிமாப் பிரசாரஞ் செய்யும் மோட்டார் 'விதியின் விளையாடல்' என்ற பாட்டை அலறிக் கொண்டிருந்தது.

''என்ன... அவள் இன்றைக்குப் பாடசாலைக்கு வந்தாளா? என் வார்த்தை உங்கள் மனேஜருக்கு ஏறவில்லை... இருக்கட்டும்... புதுப் பணக்காரன் வெற்றி மமதையில் கிராம சங்கத்திற்கும் போட்டிபோடப் போகிறானும்... அவளிடம் சொல்லு... நீயும் உன் தகப்பனும் ஏன் உந்தப் பாடசாலையும் இருந்த இடம் தெரியாமல் செய்ய என்னால் இயலும்... அடே மணி! அவளிடம் கதை கிதை வைத்துக்கொள்ளாதே... அவள் தாய்... உம். அதெல்லாம் எதற்கு?... கவனமாக நட... அதற்காகத்தான் அவளை இந்தப் பாடசாலையில் வைக்கக்கூடாது என்று சொன்னேன்'' என்ற பொன்னம்பலவாணரின் உபதேசம் அவரின் உள்ளத்து எரிவை மாசிலாமணிக்குப் 'பளிச்' செனக் காட்டியது.

''நீயோ படித்த பெண். எங்கள் குடும்ப கௌரவமும் அறிந்தவள். அதற்கு இழுக்கு வராமல் நடந்துகொண்டால்

அதுவே போதும்'' இவ்வளவுதான் கணபதிப்பிள்ளை அமிர்தத்திற்குக் கூறிய புத்திமதி.

எவர் எப்படிக் கூறினுலும், கோபித்தாலும், வாழ்த்தினுலும் விதியின் கை தன் வேலையைச் செய்யாமல் விட்டு விடுமா? அது எ ழு தி ய மூன்றெழுத்து ''கா...த...ல்'' இவ்வளவுதான்.

உடன் ஆசிரியர்களின் சகோதர அன்பு என்று எப்படித் தம்மைத்தாமே ஏமாற்றினுலும் இருவர் உள்ளத்திலும் காதல் அரும்பத் தொடங்கி விட்டது.

இது அவர்களின் பார்வை, பேச்சு, செயல் ஒவ்வொன்றிலும் வெளிப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமை. மத்தியானம் இரண்டுமணி. மாணவர் சங்கம் தலைமை ஆசிரியர் தலைமையில் 'தடல்புடலாக'த் தொடங்கியது. அமிர்தம் தன் வகுப்பு மாணவி ஒருத்திக்கு அழகாக உடுப்பணிந்து மேடைக்குவிட்டாள். அந்தக் குழந்தை ஆடியது... இல்லை, இல்லை. குழந்தையின் பாதத்தின் மூலம் அமிர்தமே ஆடினுள். அவள்தான் பாடினுள். என்ன பாட்டுத் தெரியுமா? 'தீராத விளையாட்டுப் பிள்ளை...'

மாணவர் சங்கத்தின் கலைநிகழ்ச்சிகள் எல்லோரையும் கவர்ந்து விட்டன. பாடசாலை வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஒரு விழாவாக அமைந்து விட்டது. மாணவர்களுக்கு நல்ல விருந்து; தலைமையாசிரியருக்குப் பரம திருப்தி. உடன் ஆசிரியர்கள் கலைநிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்த அமிர்தாம்பிகையை வெகுவாகப் பாராட்டினர். இவர்களுக்காகவா அவள் தனது திறமை, நேரம், பணம் யாவற்றையும் அள்ளிக் கொட்டிக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டாள்? யாருக்காக அவள் பாடு' பட்டாளோ, யார் பார்த்து ரசித்துப் பாராட்ட வேண்டும் என்று உள்ளார விரும்பினுளோ 'அவர்' இன்னும் வரவுமில்லை; பாராட்டவுமில்லை. அவளது கண்கள் மேய்கின்றன. கூட்டம் முடிந்து பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பி

விட்டு, மேசை, கதிரைகளை ஒழுங்காக்கி விட்டு இப்பொழுது தான் மாசிலாமணி வந்து கொண்டிருக்கின்றான்.

''அமிர்தம்...'', மாசிலாமணி கூப்பிடுகிறான்.

அமிர்தாம்பிகையின் ஆவல் முகம் அவன் பக்கமாகத் திரும்பிச் சிரித்து மலர்கின்றது.

''நான் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை இந்தப் பாட சாலையில் இதுவரை கண்டதில்லை.''

''எது போன்ற நிகழ்ச்சியை?''

''நீ பழக்கி மேடையில் ஏற்றிய பாலர் நிகழ்ச்சியைத் தான் சொல்கிறேன். பாட்டும் பொருளும், அபிநயத்தால் சிறப்புற்றதைக் கண்டு நான் மெய்மறந்து விட்டேன். கலை ஒரு உயர்ந்த பொக்கிஷம். அதில் ஈடுபாடுடையவர்களும் உயர்ந்தவர்கள்தான்.''

மாசிலாமணி தன் உள்ளத்தை அப்படியே திறந்துகாட்டினான். அவளுக்கு எதுவும் பேச முடியவில்லை. அவளுடைய நெஞ்சம் ஆனந்தத்தில் மிதந்தது.

இப்படியான பல நிகழ்ச்சிகளாலே இருவரும் காதல் என்ற தெய்வீகச் செடிக்குப் பக்குவமாகத் தங்கள் உள்ளக் குடங்களினாலே உறவு நீரை வார்த்து உரை என்னும் வேலிகட்டிப் பாதுகாத்து மொட்டாக அரும்புவதைக் காணத்துடித்தனர்.

## 5

''ஒருவன் தன் மனைவி, புதல்வர், உடன்பிறந்த பெண்கள், மாணுக்கர், ஏவலாளர், மருமகள், தம்பி ஆகிய இவர்கள் குற்றம் செய்யின் அவர்களைச் சிறிய கயிற்றினுலும் சிறு மூங்கிற் கோலாலும் அவர் தம் உடலின் பின்புறத்தில் அடிக்கலாம். ஒருபொழுதும் தலைக்கண் அடித்தலாகாது''

—சுக்கிரநீதி அத்தியாயம் 4. சூத். 90, 91.

எத்தனையோ மனோதத்துவ நூல்களைப் பேராசிரியர்மார் ஆசிரிய கலாசாலைகளிற் படிப்பித்தும், அவைகளை எல்லாம் பரீட்சைக்காக நெட்டுருப்பண்ணியும் நடைமுறையில் வரும்போது 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்ற பழைய பழமொழியைத்தான் மருதஞ்சேரிக் கிராமத்துப் பாடசாலையிற் காணமுடிந்தது அமிர்தாம்பிகையால்.

தம்பி, தங்கச்சி என்ற தயவுமுறையான விளிப் பெயர்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கநாதமாய், பொருளற்ற சொற் கூட்டமாய், காற்ருேடு கலந்துபோக வர்ணஜாலக் காட்சிப் படங்களும் பருப் பொருள்களும் தினசரி செய்து பாதுகாக்கமுடியாத, பரீட்சைக் காலமென்

னும் திருவிழாவுக்கு சோடினைப் பொருளுக்கே உதவ வெண்கட்டியும் அலரித்தடியுமே அவள் கைகளில் காட்சி யளித்ததில் வியப்பில்லை.

பாண் என்று சொல்லப்படும் பண்டத்தை வரிசை யாய் நின்று வாங்கிப் பாதியைக் காகத்துக்கும், பாதியை வயிற்றுப் பசிக்கும் பகிர்ந்துவிட்டுத் தண்ணீர் குடிப்பதற் குப்போன இடத்திலே சரஸ்வதி என்ற சாதிக்காரப் பிள் ளைக்கும், சண்முகம் என்ற ஹரிஜன மாணவனுக்கும் நடந்தசண்டையிலே சரசுவின் மூக்கிலே இரத்தம்சொட்ட, அமிர்தத்தின் அலரித்தடி ஆவேசமாகச் சண்முகத்தின் முது கைப் பதம் பார்த்து விட்டது. விஷயம் இவ்வளவுதான்!

இப்படித் தினசரி பாடசாலையிலே ஆயிரத்தெட்டு நடக்கும். அடுத்த நாள்... வெறும் புகார்—சிறு உறுமல்— 'அவனாரடா அடித்தவன்?' என்ற அதிரும் அதட்டல்.... அவ்வளவுதான். பழையபடி மாமூல் பிரகாரம்...

ஆனால், இது பெரும் கிளர்ச்சியாய் உருப்பெற்று விட்டது. இந்தச் சிறு பொறிக்குச் சாதி, அபிமானம் என் னும் பெற்ருேல் ஊற்றிப் பழைய வர்மத்தைச் சாதிப்பதற் காக முயன்றுகொண்டிருந்தார் பொன்னம்பலவாணர். அவரது 'புண்ணிய' கைங்கரியத்தினுலே பிள்ளைகள் வரவு ஒரேயடியாகப் படுத்துவிட்டது, சண்டி மாட்டைப்போல.

'உந்தப் பாடசாலையில் நீதி நியாயம் கிடையாது; எங் கள் பிள்ளைகள் குற்றம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அடி அவர்களுக்குத்தான்; நாங்கள் இனிமேல் பிள்ளைகளை விடமாட்டோம்; அவர்களின் தேகம் இரும்பாம்; மற்றப் பிள்ளைகளின் மேனி பஞ்சாம்... இது உந்த உபாத்திமாரின் எண்ணம்' இதுதான் மருதஞ்சேரி ஹரிஜன வட்டாரத்தின் ஆண், பெண் அனைவரும் ஒரே முகமாய்க் கூறிய குற்றச் சாட்டு.

படுத்த 'சண்டிமாட்டை' ஆதரவுகாட்டியோ அடித் துப் பயமுறுத்தியோ எழுப்பியே தீரவேண்டும் என்ற நிலை வந்தவுடனே ஒவ்வொரு வீட்டுப் படலையையும் திறக்க

வேண்டிய நிர்ப்பந்தம் மாசிலாமணிக்கு ஏற்பட்டது. திறந்த படலை ஒவ்வொன்றிலும் மேற் கூறிய வரவேற்பு அர்ச்சனையை அவன் கேட்டதும் திகைத்துப்போனான். எல்லோரும் ஒரே பல்லவியைப் பாடுவதினால் இதில் ஏதோ சூது இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு பாடசாலையை அடைந்தான்.

தன்னுடைய அனுபவமற்ற தன்மையினாலும் முன் கோபத்தினாலும் பாடசாலையிற் 'சீர்குலைவு' ஏற்பட்ட துக்கத்தினால் மனச்சோர்வு அடைந்த அமிர்தம், வீட்டிலே இரவு தகப்பனார், 'இதெல்லாம் பொன்னம்பலவாணரின் வேலை' என்று கூறியதைக் கேட்டதும், மனக்கலக்கம் அடைந்தாள். இந்தச் செய்தியை மாசிலாமணிக்குக் கூறினால் தங்கள் 'காதல்' வாழ்க்கையாகிய பாலம் இடிந்து சுக்கு நூறாகிப் போய்விடவும் கூடும். ஆனால், கூறாது விட்டாலோ... தன்னாலே பாடசாலைக்கு ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாற்றுமருந்து செய்ய மணியினாலே முடியாது போய்விடவும் கூடும். இந்த இருதலைக் கொள்ளியினிடையே அகப்பட்ட எறும்புபோலத் துடித்த நிலையை அவள் முகம் காட்டிற்று. 'அடுத்தது காட்டும் பளிங்கல்லவா?' அது.

காதலை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுக் கடமையைச் செய்வதற்கு முன்வந்தாள் அந்த வீரநங்கை. பாடசாலை வாயிலிலே சோர்வோடு வந்த மாசிலாமணியைப் பார்த்து அவள் பின்வருமாறு கூறினாள்:—

''என்னாலேதான் இப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வருகின்றார்களில்லை... அதனாலே உங்களுக்கும் பெரிய தொல்லை. வீடுவீடாக அலையவேண்டியிருக்கிறது. தயவு செய்து நான் சொல்வதை நம்புங்கள். இன்று தொடக்கம் நான் இந்தப் பாடசாலைக்கு வருவதை நிறுத்திக்கொள்ளப் போகிறேன். வேறுபாடசாலைக்கு மாறிச் செல்ல எண்ணியுள்ளேன். நேற்று இரவு என் தகப்பனாரும் எனக்கு இதையே கூறி என் சம்மதத்தைக் கேட்டார். விதியின் கை அப்படியே எழுதியிருக்கும்போது என்னால் என்ன செய்ய

முடியும்? ஆனுல், உங்கள் மாமனுரிடம் கூறுங்கள் 'ஆனைக் கொருகாலம் என்ருல் பூனைக்கொரு காலம் வரும்' என்பது நமது நாட்டுப் பழமொழி... அது பொய்யாது என்று.''

இடியேறுண்ட நாகம்—கடன் கொண்டார் நெஞ்சம்—கண்ணில்லான் பெற்றிழந்த கடுந்துயரம் என்றெல்லாம் கவிகள் வருணிக்கும் போது மாசிலாமணி சிரிப்பது வழக்கம். ஆனுல், அதே நிலையைத் தத்ரூபமாகத் தன்னிடத்திலே—தன் உள்ளத்திலே—அவன் கண்டான்; திகைத்தான்; தடுமாறினுன்; வார்த்தைப் பஞ்சமே ஏற்பட்டு விட்டது. கண்ணீர்ச் செல்வம் பெருக்கெடுத்தது.

''அமிர்தம்! உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்று நீ உன் வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பிக்கும் போது உன்னுடைய மனநிலையைத் திறந்து காட்டுகிருய் என்று, நான் எத்தனை தடவை மனதுள் மகிழ்ந்திருக்கிறேன். இன்று நீ கூறியதைக் கேட்டபின் சாதாரண ஒரு பெண்தான்; சில நேரம் வாய் வீச்சு காட்டும் ஒரு...'' என்று முடிக்க முடியாமல் மணி திணறினுன்.

''பெண்களில் வாய் வீச்சுக்காரர் இருக்கலாம்...ஆனுல் ஆண்களில் கோழைகள் இருப்பது தெரியவில்லையா?

''என் தகப்பனுர் எனக்கு உத்தியோகம் எடுப்பதற்குப் பாடுபட்டார். அது அவர் கடமை. அதைச் செய்யும்போது உங்கள் மாமனுரைக் கேட்டுச் செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியாது. வீணுக இந்த விஷயத்திலே அவர் தலையிட்டு மறைமுகமாக, தாழ்த்தப்பட்ட சனங்களை எங்கள் மேல் ஏவி விட்டுக்கொண்டிருக்கிருர்... இன்று எனக்காக உங்கள் மாமனுர் இந்தச் சூழ்ச்சிகளைக் கைங்கரியத்தைச் செய்யலாம். ஆனுல் நாளைக்கு, உங்களுக்கு மாருக என் தகப்பனுரும் இப்படி வேலைகளைச் செய்ய ஆரம்பித்தால்... அதை நினைத்துத்தான் நானே இன்றைக்கே இந்தப் பாடசாலையை விடுவதாக முடிவு செய்து விட்டேன்.''

தனக்காக அன்றி மாசிலாமணியின் நன்மைக்காகவும் தன் உத்தியோகத்தைத் திரஸ்கரிக்க அவள் கொண்ட முடிவை மாற்றமுடியாது என்பதனையும், துள்ளும் மாட்டிற்

குக் கொடியைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்பதனையும் உணர்ந்து, அவன் ஒன்றுமே பேசவில்லை. தலைமை ஆசிரியரும் மற்றவர்களும் கேட்டதற்கு அவன் பதில் ஒரேவிதமாக இருக்கவில்லை.

...இரண்டு சிறுவர்கள் ஏற்றிய இரண்டு பட்டங்கள் அகஸ்மாத்தாக அருகருகே வானத்திலே ஏறிக் காதற் பார்வைகள் பார்த்துக்கொண்டும், புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டும் இருந்தன. திடீரென்று ஏற்பட்ட புயற்காற்றுக்குப் பயந்து தன் பட்டத்தை ஒருவன் வலித்துக்கொண்டுபோக ஆசைப்பட்டான்.

புயற்காற்று இயற்கை நிகழ்ச்சியல்லவா? ஆனால், விஷமப் பிரசாரம் இயற்கை நிகழ்ச்சியா?

இந்த எண்ணங்களோடு அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பொன்னம்பலவாணர் அவனைப்பார்த்துப் பின்வருமாறு சொன்னார்:—

''ஏன்? பாடசாலைக்குப் பிள்ளைகள் வரவில்லையா? கேள்விமுறையின்றி அடித்தால் யார்தான் பாடசாலைக்குப் பிள்ளைகளை விடுவார்கள். அவள் அப்பன் பணத்தை வீசிஎறிந்து இதையும் சமாளிக்காமல் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறான்? நீ படலை படலையாகத் திறக்க வேண்டியிருக்கிறது. என் மானம் போகிறது.''

''அப்படி ஒன்றிருந்தால்தானே போவதற்கு'' என்று கேட்டுவிடலாம் போலிருந்தது மணிக்கு. ஆனால், இந்த விஷயத்திலே ஏதாவது பேசினால், அது எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றுவது போல இருக்கும் என்று அவன் நினைத்தான்.

அவன் நினைத்தது போல விதி நினைக்கவில்லை.....

அடுத்தநாள் வந்த இரண்டு 'மொட்டைக் கடிதங்கள்' இன்னும் நிலைமையைக் குழப்பி விட்டன. அமிர்தத்தை எதிர்பார்த்த இடத்தில் ஆலகால விஷம் பிறந்தது... அக் கடிதத்தில் இருந்ததுதான் என்ன,

# 6

''எப்போதும் நினைவில் வை. சர்வ வியாபக மான பொருளில் நீ எவ்வளவு அற்பமான பகுதி? பிரபஞ்சத்தில் நீ எவ்வளவு சிறிய பாகம்? அனந்த மான யுகங்களில் எவ்வளவு க்ஷண மாத்திரம் உன் ஆயுள்? இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால் உனக்கு நிகழும் சுகதுக்கங்களைப் பொருட்படுத்த மாட்டாய்; சமநிலை அடைவாய்''

—மார்க்க அரேலியர் ''ஆத்ம சிந்தனை''—51.

கூட்டில் அடைபட்ட சிங்கம் போல அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார் பொன்னம்பலவாணர். அன்று வந்திருந்த கடிதம் மேசைமேல் கிடந்தது. 'இது யார் எழுதியது?... இதில் இருப்பது ஒருவேளை பொய்யாய் இருக்குமா? நான் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்து விட்டதே. எது நடக்கக் கூடாதென்று நினைத் தேனோ அதுதான் நடந்து விட்டதே...'

மூன்றும் முறையாக அந்தச் சிறிய கடிதத்தை அவர் வாசித்துப் பார்த்தார். ''பஞ்சையும் நெருப்பையும் பக்கத்

தில் வைத்து விட்டு எரியாமல் தடுக்க முடியுமா? கொழு கொம்புக்கு அலேயும் கொடி பக்கத்தில் மரத்தைக் கண்ட வுடன் ஏறிப்படருகிறதே. அதை இல்லாமற் செய்ய முடி யுமா? அதுபோல ஆகிவிட்டது அமிர்தம்—மாசிலாமணி காதல். 'தேனே மறந்து வண்டு வாழமுடியுமாளுல் - வானே மறந்து பயிர் வாழ முடியுமாளுல் - நானும் உன்னே மறந்து வாழுவேன்' என்று கூறுகிருன் மணி. ஆர முது உண்ணுதற்கு ஆசை கொண்டு உதட்டிடை கொண்டு போன அவன் கைகளே, நீ உன் சிறு மதியால் தட்டி விடாதே. தடுக்க முயற்சிக்காதே. தடுத்தால் தற்கொலே செய்துகொண்டு ஒரு ஆன்மா அரை குறை ஆசையோடு பேயாய்... பூதமாய்..,'' கடிதத்தைக் கசக்கிய படியே ஒரு பெருமூச்சு விட்டார் அவர்... ''இதில் இருப்பது பொய் யாக இருக்கமுடியாது. ஒருவேளே அவளே இந்த மொட் டைக் கடிதத்தை எழுதியும் இருக்கலாம்... உம்... உப மானங்கள்... வாழுவேன் என்கிருன் மணி... வாழுவோம் இருவரும் என்று எழுதியிருந்தால் என்ன?.. இந்தப் பொன் னம்பலவாணர் இருக்கும்வரை வாழமுடியாது இவர்கள். வாழ விடேன் இவர்களே... ஆளுல்... தோளுக்கு மேலே வளர்ந்த துரை மகனுய் விட்டானே; பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்த கதையா என் கதை? தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பதா என் வாழ்வு? தற்கொலே... நினேக்கக்கூட நடுங்குகிறதே. ஐயோ! கடவுளே!! என் பணம். சதம் சத மாய் நான் தேடிய பணத்தால் ஆளாக்கிக் கடைசியில் இப் படி ஆகிவிட்டால்... என்ன? என் இடக்கண் துடிக்கி றதே... ஏதாவது விபரீதம் நடந்து விட்டால் இந்த உல கம் என்னே..''

அவர் தேகம் வியர்த்து ஒழுகியது. தலே கிறுகிறுத்தது. பக்கத்திலே, அவர் வழக்கமாகப் படுக்கும்—சோம்பேறிக் கட்டிலில் படுத்த படியே வீட்டுக் கூரை முகட்டைப் பார்த்தபடி யோசித்தார். ஆழியின் திரையைப் போல அலேஅலேயாய் எண்ணச் சுழல்கள் மிதந்தன.

'விவாகம் நடந்தால் மாத்திரம் இந்த உலகம் ஒன்றும் பேசாதா? ஏன் பேசாது?... குலம் கோத்திரம் தெரியாதவன் இன்று பணக்காரன் ஆகிவிட்டால்... அவன் பெண்ணை இருமரபும் துய்ய வந்த நரசிங்கமுதலி வம்சத்து ஓர் ஆண் மகன் விவாகம் செய்வதா? சீ! நாளைக்கு இந்த வீட்டில் யார்தான் செம்பு—தண்ணீர் எடுப்பார்கள்.'

'இதற்கு முட்டுக்கட்டை போட்டே தீரவேண்டும்' என்று முடிவு கட்டினர் பொன்னம்பலம். திறமான—காரமுள்ள—உள்ளூர்ப் புகையிலைச் சுருட்டு ஒன்றில் நெருப்புக் கொள்ளியை ஏற்றினர். யோசித்தார்... திட்டமிட்டார்... வெற்றிப் புன்னகை கொண்டார்.

அதே நேரத்தில் பாடசாலையில் மணியின் நிலை பரிதாபமாயிருந்தது. அவனுக்கு வந்த மொட்டைக் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

அன்புள்ள.........

உன் மாமனர் இந்த ஊருக்குச் சத்துரு. உனக்குச் சத்துரு. ஏன்? தன் உள்ளத்துக்கே சத்துரு. அவர்தான் இந்தப் பாடசாலைக் கிளர்ச்சிக்கெல்லாம் காரணம். தன்னுடைய அதிகாரம் செல்லவில்லையேஎன்ற கொதிப்போடு பணக்காரன் என்ற மமதையும் சேர்ந்து கொண்டு உங்கள் காதல் விருக்ஷத்தைக் கருகச் செய்யப் போகின்றன. கவனம்... தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் ஆலகால விஷந்தான் வெளிப்பட்டது என்று புராணங்கள் கூறுகின்றன. உன் அமிர்தாம்பிகை மாத்திரம் விதிவிலக்கா? கட்டுண்டோம்... பொறுத்திருப்போம்... காலம் மாறும் என்று கவிகளின் ஆகாயக் கற்பனையை எண்ணி முயற்சியைத் தளர விடாதே. விஷத்தைக் கண்டு பயந்தவனுக்கு அமிர்தம் கிட்டாத பொருளாகியும் விடும்.

நீ என்ன செய்யப் போகிருய்? உன் காதலைப்பற்றி மாமனருக்குத் தெரியாது என்று எண்ணி விடாதே,

இன்றைக்கு அவருக்கும் ஒரு கடிதம் போட்டிருக்கிறேன். காதல் கருகி விடுமா? கர்வம் வென்று விடுமா?

இங்ஙனம்
'அன்பு'

நடுக்கடலிலே, சுக்கான் முறிந்த தோணியிலே, புயலில் அகப்பட்டு அலைபோகும் போக்கிலே போகும் வீர வாலிபன் எப்படியெல்லாம் எண்ணுவானோ அதே எண்ணங்கள் தான் மணிக்கு. 'காதல் கருகி விடுமா?... இல்லவேயில்லை.... கர்வம் வென்றுவிடுமா?... எப்படி முடியும்? உலக சரித்திரத்தைப் புரட்டினல், நெப்போலியன்...... ஹெய்சர்...... முசோலினி...... ஹிட்லர் எல்லோரும் கர்வம் கொண்டு அழிந்தார்கள் என்று தான் அது முழங்குகிறது. அந்த முழக்கத்தினிடையே இந்தப் பொன்னம்பலவாணர் சிறு தூசி. சிறு தூசியாய் இருந்தாலும் நம் கண்ணில் விழுந்தால் உருட்டத்தானே செய்யும்?'

சிவபூசைக்குள் கரடி நுழைந்ததைப் போல இந்த மின்வெட்டு எண்ணங்கள் மூளையை நச்சரிக்கும் பொழுது தலைமை ஆசிரியர் பாடசாலை வரவைப்பற்றி ஏதோ புலம்பினர். அதற்கு மாசிலாமணி "எனக்கொன்றுந் தெரியாது; நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள்" என்று முகத்திலறைந்தாற்போலப் பதில் சொல்லிவிட்டு வெளியேறினன்.

வீட்டுக்கு வரும் போதுதான் ஒருவித பயம் தொற்றிக் கொண்டது. 'இந்தக் கடிதத்தில் இருப்பது உண்மையா? எங்கள் காதல், மாமனுருக்குத் தெரிந்தால்... ஏன்? ஒரு காலம் தெரிந்துதானே ஆகவேண்டும்... அவர் இப்போது கேட்டால்... உண்மையை ஒப்புக்கொள்வதா? இல்லை எனக்கொன்றும் தெரியாது என்று மழுப்புவதா?'... 'சீ! நீயும் ஒரு ஆண்மகனு?' என்று உரப்பியது உணர்ச்சி. 'ஆம்... உண்மையை ஒப்புக்கொண்டு அதனுல் வரும் தீமையையோ நன்மையையோ ஏற்பதுதான் நல்லது. காதல் தேவி கண்

ணீர்வேண்டுமென்ருல் அதைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்' இப்படிக் கூறியது மனம்.

வேலைக்காரக் கோவிந்தன், ஆம், அவன்தான் பொன்னம்பலவாணரின் நளபாக சாஸ்திரம் ஆராய்ச்சி செய்வோனுகவும்; வண்டி ஓட்டும் சாரதியாகவும், ஊர்ப்புதினம் கூறும் ஊர்க்குருவியாகவும், உள்ளக்கருத்தை அறிந்து அதன் படி நடக்கும் நடிகனுகவும் அவ்வீட்டில் வளரும் ஒரு பிறவி. அவன் சாப்பாட்டுக்கு அழைக்கும் போதே மாமனும் கூப்பிட்டார். மாசிலாமணியும் தன் உணர்ச்சிகளை முகத்திற் காட்டிக்கொள்ளாமற் சாதாரணமாகப் போய் நின்ருன்.

பொன்னம்பலவாணர் கூறத் தொடங்கினுர்:

"நான் சொல்வதைக் கவனமாகக் கேள். இந்த ஊரிலே எத்தனையோ தலைமுறையாக நாங்கள் செல்வாக்காக இருந்துவந்தோம். அதை இப்போது இழப்பது நல்லதா? பணம் இருப்பதால் தான் நாலுபேர் நம்மை மதிக்கிருர்களே ஒழிய வேறு குணம், படிப்பு, இவற்றிற்காக வென்று நினையாதே. இப்போது ஒரு புதுப் பணக்காரன்—யுத்த காலத்திலே ஆடுமாடு விற்றுப் பெற்ற பணம், கள்ளச் சாராயம் காய்ச்சிப் பெற்றபணம்—இவற்றினுலே மமதைகொண்டு திரிகிருனே அந்தக் கணபதிப்பிள்ளை—நமக்கு இடைஞ்சலாக வந்திருக்கிருன். தெரிகிறதா"

ஒவ்வொரு சொல்லையும் அமைதியாகவும் விளக்கமாகவும் கூறினுர். கூறும்போது, தான் கூறுவதன் பிரதிபலிப்பு மாசிலாமணியின் முகத்தில் ஏற்படுகிறதா என்றும் சிறிது கவனிக்கத்தான் செய்தார். புகையிலைச் சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு மீண்டும் கூறினுர்:

"அவன் மகள் அமிர்தாம்பிகையைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனுல், அவள் தாயாரைப்பற்றி நிறையத் தெரியும்...... அதெல்லாம் பற்றி ஒரு நாளைக்குச் சாவகாசமாகச் சொல்லுகிறேன். இப்போது முக்கிய விஷயமொன்று கேட்கிறேன்; பதில் சொல்" என்று நிறுத்தி

விட்டுத் துப்புவதற்கு எழுந்து சென்ருர். 'தங்கள் காதல்' என்ற தெரிந்த விஞவுக்கு விடை கூறுவது எப்படி? என்று மாசிலாமணி எண்ணிஞன். அவனுக்கு வியர்த்தது. என்ன ஏமாற்றம். அவர் அதைப்பற்றித் தெரிந்ததாகக்கூடக் காட்டிக்கொள்ளவில்லே. ''இந்த வருஷம் நடக்கப்போகும் கிராமச் சங்கத் தெரிவில் நீ போட்டி போட வேண்டும். உன் எண்ணமென்ன'' என்று மாத்திரம் கேட்டார்...... விடை ஆயத்தமில்லாத விஞ... என்ன சூழ்ச்சியான விஞவோ ... மணியின் தலே சுற்றியது.

# 7

ஒரு ஜாதியாரிடத்தில் சில பழக்கவழக்கங்கள் ஏற்பட்டுவிட்ட பிறகு, சில துரபிமானங்களோ, பொய்புரட்டுஎண்ணங்களோ தீவிரமாக நுழைந்து விட்டபிறகு, அவர்களைச் சீர் திருத்துவதென்பது ஆபத்து; பயனுமில்லை.

...ரூஸ்ஸோ சமுதாய ஒப்பந்தம். ஜனங்கள்...

சென்ற பதினைந்துவருட காலமாகக் கிராமத் தலைமை வகித்து நயத்தாலும்பயத்தாலும் நாட்டாண்மை வகித்து ஏகச்சக்ராதிபத்தியம் நடாத்தி வந்த பொன்னம் பலவாணர் திடீரென்று தன் அரசுரிமையைக் கிராமச்சங்க அங்கத்துவம் என்ற மணிமுடியை— தன் மருமகன் மாசிலா

மணிக்குக் கையளிக்க நினைத்தது வயதுத் தளர்வாலோ அல்லது பொன்னும் போகமும் போதும் என்ற நினைவாலோ அல்லது 'போகிற வழிக்குப் புண்ணியம் இனியாவது செய்வோம்' என்ற புத்திமேம்பாட்டாலோஅல்ல, நேரிடையாகவே கணபதிப்பிள்ளையை மாசிலாமணிஎதிர்த்துப்போரிட்டால் அது—அந்த நெருப்பு—தீச்சுவாலையாகி மணி, அமிர்தம் காதல் என்ற இளந்தளிரைக் கரியாக்கிவிடும். விடாது விட்டாலும் தான் அந்தப்புண்ணிய கைங்கரியத்தைச்செய்ய முடியும் என்று அவர் நம்பினுர். அந்த நம்பிக்கையின்பேரில் தான் அவர் மணியைப் பார்த்துக் கேட்டார்.

சிறு வயதுமுதல் வாழ்ந்து வளர்ந்து அறங்கொன்று மறம் ஓம்பும் மாமனுரது செயல் ஒவ்வொன்றையும் அடிமுதல் நுனிவரை ஆராய்ந்திருந்த மாசிலாமணி அதற்குப் பதில்சொல்லத் தயங்கியதில் வியப்பில்லை. அவன் தலை சுற்றியதில் ஆச்சரியமில்லை. அதிலும் பார்க்க நேராகவே தங்கள் காதல் விவகாரத்தைப் பற்றிக் கேட்டிருந்தாலும் அவன் தன் பதிலை ஆனந்தமாகக் கூறியிருப்பான்.

சிறிது நேரம் சென்றது. சுவரிலிருந்த மணிக்கூட்டின் 'டிக் டிக்' என்ற ஓசையைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை .பொன்னம்பலவாணர் அவன் முகத்தை ஆவலாகப் பார்த்துக்கொண்டிருந்தார். அவனே 'பாழ் இடம் தன்னைச் சும்மா உற்று உற்றுப் பார்ப்பதிலே' காலத்தைக் கடத்தினுன். வேலைக்காரக் கோவிந்தன் 'தம்பி சாப்பிடாமல் நிற்குதே... பாவம்' என்று எண்ணியவனுய் வாசற்படியிலே நின்று கொண்டிருந்தான். யார் செய்த புண்ணியமோ கறுப்புப் பூனைஅடுப்படியிலே அப்பளம் வைத்த தட்டை உருட்டியது. ''அட பாழாய்ப்போனபூனையே...யே'' என்ற கோவிந்தனின் ஆத்திரங்கலந்த தொனியிலே இருவரும் விழிப்புற்றனர். ''சரி, சரி, சாப்பிட்டு விட்டு வா... பேசிக்கொள்ளலாம்'' என்ற மாமனுரின் வாய்ப் பிறப்பு அவனுக்குத் தேவகானமாய் ஒலித்தது.

சாப்பிடும் போதே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான் அவன். 'சதா உப்புப் போதாது. புளி கூடிவிட்டது' என்றெல்லாம் ஏதாவது கூறும் அவன் வாய் அன்று ஒன்றுமே பேசவில்லை. கோவிந்தன் மாத்திரம் ''தம்பீ!மாமா சொல்வதற்கு...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான். மாசிலாமணி பார்த்த பார்வையில் நடுநடுங்கி ரசத்தைக்கொஞ்சம் அதிகமாகவே விட்டுவிட்டான். வயிற்றுப் பசி ஓரளவு தணிந்தது. ஆனல் வாழ்க்கைப் புயல்...?...?

புகையை மேலே விட்டபடி முகட்டு வளையைப் பார்த்துக்கொண்டிருந்த வாணர், அவன் வரவைப் பார்த்துத் திரும்பி ''என்னமுடிவு செய்தாய்?'' என்று கேட்டார்.

அவன் கூறியது அவரைத் திடுக்கிடச் செய்தது.

''இந்தக் கிராமத்துச் சனங்களுக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டுமென்றல் அதற்குக் கிராமச் சங்கத்திற்குப் போய்த்தான் செய்யவேண்டுமென்பது என் எண்ணமல்ல. தலைமுறை தலைமுறையாய் வந்த 'நாட்டாண்மை'யைக் காப்பாற்றவேண்டியதற்காகக் கிராமச்சங்க அங்கத்தவராக வேண்டுமென்றல்...இனி வருங்காலத்தில் அது நடக்க முடியாத சங்கதியாய்விட்டது. மண்ணோடு மண்ணாய் மங்கி மறைந்து போகவேண்டிய சாதி, மரபு, நாட்டாண்மை இவற்றிற்கு என்னல் மறுபடியும் தண்ணீர்ஊற்றித் தளிர்க்க வைக்க முடியாது... நீங்கள் இருக்கும் வரைக்கும் அதைக் காப்பாற்றப் போராட விருப்பமிருந்தால்... போட்டி போடுங்கள்; என்னல் முடியாது. ஏழைகள் குடிக்கத் தண்ணீர் இல்லை, கிணறு வெட்டிக் கொடுக்கப் பேசுவாரில்லை. படிக்க வசதியில்லை, நூல் நிலையமில்லை. ஏன்? விளையாட இந்தக் கற்பூமியிலே நல்ல விளையாட்டிடம் கூட இல்லை. ஆனல்......''

''நிறுத்தடா; உனது நீதிகள்போதும்'' என்று மோனையோடும் அதிகாரத்தோடும் பேசினல் 'பற்கள் பத்திரம்' என்று மறைபொருளில் கூறும் வார்த்தைகளைக் கக்கினர் பொன்னம்பலம். ''சீர்திருத்தமா? இந்தக் கிராமத்துச்

சனங்களுக்கா சீர்திருத்தம்? நீ கண்முன்னல் காண்கிருயே! ஏன் பாடசாலைக்குப் பிள்ளைகள் வரவில்லை? படிக்க ஆசை இருந்தால்தானே... அவர்கள் இப்போது எங்கள் தலைக்கு மேல் ஒருபடி போய்விட்டார்கள். அவர்களுக்கு நயம்செய்து பிரயோசனமில்லை. பயம்; பழைய முறைப்படி பயப்படுத்தி வைக்கவேண்டும்! பாளையை வெட்டு பத்துக் குடில்களுக்குத் தீயை வை... பயிர்பச்சை செய்யாமல், நிலம் கொடாமல் நிறுத்திவை. அதுதான் இவர்களை வழிக்குக்கொண்டுவரும். பார். இந்தத் தேர்தலுக்குப் பிறகு நான் கேட்கப் போவதில்லை. இதுதான் கடைசி முறை. பணத்தை இறைக்கப் போகிருன் புதுப் பணக்காரன் கணபதிப்பிள்ளை. பயத்தை வளர்த்து வெற்றிபெறப் போகிறேன் நான். இருந்துபார். நீ கோழை. இருமரபுந் துய்ய நரசிங்கமுதலி வம்சத்து இரத்தம் உன் சரீரத்தில் துளிகூட இல்லை. அப்படியிருந்தால் நீ இப்படிச் சொல்வாயா?'' என்று முடித்தார். தன்னைப்பார்த்துத் தன் மாமனுர் கோழை என்று கூறுவது அவனுக்குச் சிரிப்பாய் இருந்தது. 'கோழைத்தனம் எது? யாரும் அறியாமல் பாளையை வெட்டுவது வீரமா? குடியிருக்கும் வீட்டுக்குக் கோப மிகுதியினுலே கொள்ளிவைப்பது வீரத்தின் சிகரமா? ஏராளமான நிலபுலம் படைத்துவிட்டோம் என்ற மமதையில் பாடுபட்டுஉழைக்கும் பாட்டாளி மக்களைப் பட்டினிபோட்டு வதைப்பது வீரத்தின் முடிவா? அநீதி வீரமா? நீதி கோழைத்தனமா? படிப்பற்ற மக்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து சலுகை பெற்றுக்கொடுப்பது கோழைத்தனமென்ருல், அவர்களை இன்னும் பயமென்னும் சகதியில் ஆழ அமுக்கி உல்லாச நடைபோடும் இவர்கள் செயல் பாவத்தின் சிகரமல்லவா?' இப்படிஎண்ணியது அவன் மனம்.

பாலைவனமும் குளிர் பூஞ்சோலையும்போல, இருட்டும் ஒளியும்போல, நஞ்சும் அமிர்தமும்போல இருக்கும் இருவர் கொள்கையும் அவனுக்குத் தெற்றெனப் புலனுகியது. மற்றைய கிராமங்களின் முன்னேற்றத்திற்குஒப்ப நாமும் முன்

னேறவேண்டும் என்ற தன் கொள்கையும் பழமையிலே உழன்று பழமையையே கடைப் பிடித்துப் பயம் என்ற சம் மட்டியால் அடித்துப் பஞ்சுகளாக்கி வைக்கும் தன்மாமனுர் கொள்கையும் ஒரு காலமும் ஒத்துவராது. இதற்காகப் போராடுவது வீண் என்ற நினைப்பால் அவன் பேசாமல் வெளியேறினுன்.

அவன் வீட்டைவிட்டு வெளியேறியது தன் மாமனுரது உள்ளத்தில் இருப்பதைக் கணபதிப்பிள்ளையிடம் சொல்லி அவரை எச்சரிக்கை செய்து இந்தப் போட்டியிலிருந்து விலகி விடும்படி செய்யவேண்டுமென்று எண்ணித்தான். ஆனுல் அவர் தன்னைப்பற்றி என்ன நினைக்கிருர் என்று அறியாமல் ஆலோசனை கூறச் செல்வது சரியா? என்று அவன் மனதுள் அடிக்கடி கேட்டுக்கொண்டான். யார் எப் படிப்போனுல் என்ன என்று அவன் ஒரு கணம் சிந்திப் பான். 'ஐயோ பாவம்! இந்தப் பிரகிருதிகளின் திருவிளையா டல்களினுலே ஒன்றும் அறியாத ஏழைகள் வீணுகக் கஷ்டப் படப்போகிருர்களே' என்று அவன் மறுபடியும் எண்ணு வான். 'போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டே கும்' என்று புகழேந்தி வர்ணித்தானே அப்படித்தான் வர் ணிக்கலாம் அவன் மனநிலையை.

மருதஞ்சேரிக் கிராமத்தில் ஓய்ந்து ஒழிந்தவர் இருந்து கடதாசி விளையாடும் மடம் ஒன்று பிரசித்திபெற்றிருந்தது. கள்ளுக்குப் பேர்பெற்றிருந்த அந்தக் கிராமத்தில் அதன் கூட்டாளியாகக் கடதாசி விளையாட்டும் வந்துசேர்ந்தது. இலங்கை சுதந்திரம் பெற்றது. யேர்மன், யப்பான் சண்டை நின்றது. அரிசிக்குத் திண்டாட்டப்படுவது. இவை அவர்க ளுக்குத் தெரியா. அதனுலென்ன? தனித்து ஐந்து பிடி எடுக்க, கேள்வி-உதவி சொல்ல, வெட்டினது சரியா தப்பா என்று வாதாடிக்கொண்டிருக்க, இடையிடையே ஊரிலே இருந்து காணுமல் ஓடிய காதல் சோடி, மாட்டுச் சவாரியிலே கனஜோராய் வென்ற 'கடலும் திரையும்' எல்லையிலேயிருக் கும் கள்ளி வேலி யாருக்குப் போகும் என்ற சர்ச்சை, இவை பற்றிப்பேச அவ்வூர் மக்களுக்குத் தெரியும்.

அன்று அந்தக் கடதாசி விளையாட்டுக் கும்பலுக்குத் தலைமை வகித்தார் நல்லதம்பிக்கிழவனார். அவர் இருக்குமிடத்தில் அவர்தான் பேசுவாரே ஒழிய மற்றவர்களைப் பேச விடமாட்டார் என்பது ஊர்ப் பிரசித்தம். கடதாசிக் கூட்டத்தைக் கலைத்து ஆறு இடங்களிற் போட்டுவிட்டு வெற்றிலை போட்ட எச்சிலைத் துப்பிவிட்டு ஊர்ப் புதினத்தில் இறங்கினார். ''என்ன இந்தமுறை கணபதிப்பிள்ளையும் கிராமச் சங்கத்திற்குக் கேட்கப் போகிறானமே; உனக்குத் தெரியுமோ'' என்று பக்கத்தில் இருந்தவனைப் பார்த்துக் கேட்டார். ''கேட்டால் என்ன? நீர் ஆர் பக்கம்?'' என்று திருப்பிக் கேட்டான் அவன். ''நானா? நா ன் என்பக்கம் தான்'' என்றார் சிரித்துக்கொண்டு. ஏதோ பெரிய நகைச்சுவையை அள்ளி வீசிவிட்டதாக அவர் எண்ணம். ''ஓய் அண்ணரே! சொல்வதை விளங்கச் சொல்லுமேன்'' என்றான் கபடு சூது தெரியாத கந்தப்பிள்ளை.

''உனக்கு ஒன்றுமே தெரியாது; நான்தான் கணபதிப்பிள்ளையைத் தூண்டி விட்டிருக்கிறேன். இவன் பொன்னம்பலம் இருக்கிறானே, படு போக்கிரி. நான் வாங்க இருந்த அந்தக் காணித்துண்டை எனக்குத் தெரியாமல் ஏமாற்றி அமுக்கிவிட்டான். அன்றைக்கு என் மகனை முறைதலையின்றி அந்தநொண்டி பேச, அவன் மருமகன் சிரித்தானாம். அதைக்கேட்கப்போன இடத்தில் 'பாம்பின் கால் பாம்பறியும்' என்கிறானே இந்தப் பொன்னம்பலம். எங்கே இந்த நல்லதம்பிப் பாம்பின் காலையறியட்டுமே. இவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று சும்மா இருந்த கணபதிப்பிள்ளையைத் தூண்டியிருக்கிறேன். இப்போதெரியுதா நான் ஆர் பக்கம், என் பக்கம் தான்'' என்று முடிச்சை அவிழ்த்தார். நல்லதம்பிக்கிழவனாரின் நரிக்குணம் தெரிந்த எல்லோரும் சபாஷ்! என்று பல்லைக் காட்டினார்கள். இந்த சிரிப்பினூடே புதுவிதமான சிரிப்பொலியும் ஒன்றுகேட்கத் தான் செய்தது. திரும்பிப் பார்த்தார் நல்லதம்பி. மாசிலாமணி நிற்பதைக்கண்டார். அவரது தேகம் அந்தப் பின்னேரக் குளிரிலும் வியர்த்தது.

# 8

''யாதொரு கருமமேனு மெண்ணியே துணிக வென்றுங் காதலிற் றுணிந்து செய்தா லெண்ணு தல் கடனன்றென்று மோதுநூற் புலவர்சொன்ன ருமக்குள வுணர்வற் றன்றே பேதுற வடர்த்தும் பின்னே யுருகிநீர் பிழைசெய் தீரே.''

—மகாபாரதம்: சூதுபோர்ச் சருக்கம்—266

சித்திரைமாதம் இருபத்தேழாந் திகதி வெள்ளிக் கிழமை. பணங்கட்டிமுடிந்த மாலை தொடக்கம் இரவிர வாக இருபகுதியாரும் தங்களின் போர்முரசின் ஒலிகளைத் தட்டத் தொடங்கி கள்ளுப்பானை சகிதமாகவும் சாராயப் போத்தல் மூலமாகவும் ஆரவாரித்தனர். மருதஞ்சேரிக் கிராமத் தேர்தல் பிரசாரம் பட்டஅமளி, இதுவரை கவிஞர் களும், புலவர்களும் கற்பனைசெய்திராத ஒரு விழாப்போல இருந்தது. தெருவிலும், திண்ணையிலும், சந்தியிலும் 'குசு

குசு' கூட்டங்களும் வாய்வீச்சுகளும் தடல்புடல் பட்டன. யார் யார் கட்சி மாறிவிட்டார்கள் என்ற பேச்சே எங்கும் ஒலித்தது. பாடசாலைச் சிறுவர் முதல் கிணற்றடியில் வம்பளக்கும் பெண்கள் வரை இதைப்பற்றியே பேசினர். 'போடு புள்ளடி யானைக்கு நேரே' என்று கத்தும் கௌபீன தாரியான ஹரிஜனச் சிறு பயலுக்கு மூன்றுவயது தானும் நிரம்பியபாடில்லை என்றால் கேட்பானேன்!

உள்ளூர்க்கவிராயர்கள்பாடிய 'கணபதிப்பிள்ளைசிந்தும்' உணர்ச்சிவசப்பட்டோர் எழுதிய 'சுவர்ப்பழமொழி'களும் எங்கும் காட்சியளித்தன. இந்தக் கிராமச் சங்கப் போட்டியினால், பூசினிக்காய்கூடச் சரியாக வரையத் தெரியாத எத்தனையோ மாணவர்கள் யானையும், சைக்கிளும் அழகாகக் கீறிப் பெரிய ஓவிய விற்பன்னர்களாகிவிட்டார்கள்.இது மாத்திரமா? ஒளிவு மறைவிலே ஒருபோத்தலை உட்செலுத்தியவர்கள் பகிரங்கமாகக் கூட்டத்தோடு கூட்டமாய்க் குடித்துவிட்டுக் கும்மாளமடித்தனர். அரை நிர்வாணப் பக்கிரிகளாய் அலைந்த ஐந்தாறு வாலிபர்கள் அருமையான வேட்டி சால்வைகளோடு அரசியலும் பேசியது அற்புதத்திலும் அற்புதமாக இருந்தது.

எல்லோரையும் தூக்கிவாரிப்போட்டுவிட்ட ஒருவிஷயத்தை இங்கு சொல்லாமலிருக்க முடியவில்லை. எந்தச் சண்முகம் என்றபையனுக்கு அடித்ததினால் பாடசாலைவரவுதலைகீழாக மாறியதோ அந்தச் சண்முகத்தின் தகப்பன் கந்தன் ''தங்கச்சி! நல்லாக அடி; அல்லது தோல் தோலாய் உரி. நாங்கள் இனிமேல் கிட்டவும் வரமாட்டோம்; பிறத்தியார் சொல்லைக் கேட்டுப் பிள்ளைகளை மறிக்கவும் மாட்டோம்; பாடசாலைக்கு நீ போகாவிட்டால் எங்கள் பிள்ளைகளும் போகாது''என்று மன்றாடியதுமாத்திரமல்ல, எல்லாரையும் பாடசாலைக்குப் பிள்ளைகளை விடவும் செய்தான். ஆம். பணம், கணபதிப்பிள்ளையின் பிணமும்வாய்திறக்கும்பணம்! கிராமச்சங்கப் போட்டி என்ற பழத்திற்கு எறிந்த பணமாகிய கல்— பாடசாலை வரவு என்ற இன்னொரு பழத்தைத் தந்தது. ஆனால்......

கிராமத்தின் நாடி ஓட்டத்தை அவதானிப்பதில் வல்ல வராகிய பொன்னம்பலவாணர் விழித்துக்கொண்டார். தன்னுடைய இருமரபுந் துய்ய நரசிங்கமுதலி வம்சம் என்ற அஸ்திரத்தைப் பிரயோகித்து நல்லதம்பி கிழவனுரைக் கைக்குள் போட்டுக்கொண்டார். தன்னுடைய வாலிப மருமகனைக் கட்டித் தருவதென்ற வாக்குறுதியைச் சொல்லிப் பெண்கள் வைத்திருக்கும் எல்லோரையும் ஆசை காட்டித் தன்பக்கம் இழுத்துக்கொண்டார். தோட்டம், கிணறு இவைகளை மறிப்பதாகப் பயமுறுத்தி ஏழை எளியவர்களை வாய் பேசாதிருக்கச் செய்தார். பாளைகளை வெட்டியும், குடில்களுக்குத் தீ வைத்தும், மாடுகளை அவிழ்த்துத் துரத்தியும் எல்லாவற்றையும் சாதுரியமாகக் கணபதிப்பிள்ளையின் கையாட்கள்மேல்சுமத்தியும் 'ஆகா!' என்று எக்காளமிட்டார்.

கிராமத்தின் கதி, பணம்— குடி — பயம் — துரோகம் என்ற சற்சதுரத்துள்நின்று தத்தளித்தது. வாயில்லாப்பூச்சிகளாய் வாழ்க்கையில் தடுமாறும் இவர்களுக்கா வாக்குரிமை. ஐயோ! சர்வசனவாக்குரிமை என்ற அமிர்ததாரையில் கலக்கும் நச்சுப் பொருள்களைக் களைந்தெறிய வழியேயில்லையா? இப்படிச் சிந்தித்த ஒரேயொரு மணி — மாசிலாமணி உள்ளம் குமுறினுன்.

இதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்தவன் அவன். 'புரிவில் ஒன்றும் சரிவிலா வஞ்ச மாயச் சகுனி'யைப் போன்ற நல்லதம்பியின் தூண்டுதலால் கிராமச் சங்கத்துக்குப் போட்டி போடவேண்டாமென்று அவன் கணபதிப்பிள்ளையிடம் மன்ருடினுன். தன் மாமனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டு இம்முறை — ஒரேயொரு முறை— அவரை அனுப்பி வையுங்கள் என்று இரந்துகேட்டான். தங்கள் காதல் என்றகோட்டையில் இது ஆழமானவெடிப்பை உண்டாக்கிவிடும் என்று அமிர்தத்திடம் இரகசியமாகக் கூறித் தகப்பனிடம் மன்ருடி இந்தப் போட்டியில் இருந்துவிலகும்

படி முயற்சி செய்யச் சொன்னான். ஆனால் மாசிலாமணியின் சொல்லைக் கணபதிப்பிள்ளை கேட்கவில்லை.

தேர்தல்நாள் நெருங்க நெருங்கப் பாடுபட்டுச்சேர்த்த பணம் கரையும் விதம்—நட்டாற்றில் கைவிட்டு நாம் வேறு நீ வேறு என்று பிரிந்த நயவஞ்சக நல்லதம்பியின் பொல்லாத குணம்—குடிக்குமட்டும் கும்மாளமடித்து விடிந்தாற் பயமென்னும்பேய்பிடித்து அஞ்சும் கிராமத்து ஏழைச்சனங்கள், எங்களுக்கு நீரும் சரி; அவரும்சரி என்று பேசும் ஹரிசனங்கள், எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்றெண்ணும் பிடுங்கித்தின்னிகள், வட்டியில்லாமல் பணங்கேட்கும் கட்டிளம்'மைனர்கள்' இவர்களின் செயல்களைத்தான் அறிய முடிந்தது கணபதிப்பிள்ளையால், சாகப்போகிறவன், சங்கரா சங்கரா என்பதுபோல அப்போதுதான் மாசிலாமணியின் பெயரை அவர் மனம் அடிக்கொருதரம் நினைத்தது.

எக்காளமிட்டாலும் பொன்னம்பலவாணருக்கும் உள்ளுக்குள் குளிர்சுரம் தட்டியது. தோற்றுப்போனால் என்று அவர் எப்போது எண்ணினாலும் உடனே தேகம் வியர்த்துக் கொட்டியது. வைத்திய பூபதி குமரேசரின் தங்க செந்தூர மாத்திரையை அவர் அடிக்கடி உபயோகப்படுத்தியும் அவர் முகம் களையிழந்துவிட்டது. தான் பாடுபட்டு வளர்த்த மருமகன் சூடு சொரணையின்றி யாதும் அக்கறை காட்டாமல் திரிவது அவருக்குக் கவலையாக இருந்தது. கடைசியாக நல்லதம்பிக் கிழவனார் சொன்ன ஒரு விஷயத்தால் அவர் மனமுடைந்தேபோனார்.

பொன்னம்பலவாணர் எல்லாவற்றையும் தீர ஆலோசித்துவிட்டு மாசிலாமணியைப்பார்த்துக் கேட்டார், ''உன்னைப்பற்றி ஊர் முழுவதும் ஒரே கூக்குரலாய் இருக்கிறதே. நீ எங்களுடைய எதிரிவீட்டுக்குப் போகிறாயாம் எப்போதும். அந்தச் சாதிமரபு தெரியாதவன் வீட்டில் அவள்—அந்தச் சிறுக்கி— தண்ணீர்தரக் குடிக்கிறாயாம். ஏன் அவளையே விவாகம் செய்துகொண்டு அங்கேயே இருக்கிறது தானே; வெட்கம், மானம் இன்றி இங்கே ஏன் திரும்பி

வருகிருய்; உங்கள் காதலோ— கத்தரிக்காயோ எதையோ பற்றி ஒரு கடிதமும் வந்திருந்தது; அதை நான்நம்பவில்லை. ஆனால்...'' என்று தொடர்ந்துசொல்ல விரும்பினார்.

''இதை நீங்கள் எப்போது கேட்பீர்கள் என்று ஆவலாய் இருந்தேன்'' என்ற முகவுரையோடு பேச்சை ஆரம்பித்தான் மணி. ஆம், அவளையே நான் விவாகம் செய்ய உத்தேசித்திருக்கிறேன். எத்தனையோ பெண்களோடு படித்தேன்; எவ்வளவோபேரோடு சம்பாஷித்தேன். ஊடாடினேன். என்னையுமறியாமல் அவளைக் கண்ட அன்றே என் மனதைப் பறிகொடுத்தேன். புது மோகம் என்பீர்கள். அப்படியானதல்ல. மனதைத் திறந்து சொல்கிறேன், கதைகளிலே படித்தேன், காவியங்களிலே வாசித்தேன், படக் காட்சிகளிலே கண்டேன். எல்லாம் கற்பனை என்றுதான் எண்ணினேன். ஆனால் அது கற்பனைமாத்திரமல்ல, உண்மை என்றும் உணருகிறேன். அதை என் செயலிலே காட்ட வேண்டும். அதற்கு சாதி, குலம், பணம் என்ற தடைகள் ஏற்பட்டாலும் மீறச் சக்தி தருவாயென்று சதா இறைவனை வேண்டுகின்றேன். அதோடு உங்களையும் இரந்து கேட்கின்றேன். சிறு வயதுமுதல் படிப்பித்தீர்கள்; வாழ வழி செய்தீர்கள். வாழ முற்படுகிறேன். வளரும்பயிருக்குத் தண்ணீர் ஊற்றுங்கள். வெந்நீர் ஊற்றிச் சாக அடித்துவிடாதீர்கள்!'' அவன் நிறுத்தினான். கண்களில் நீர் மல்கியது.

''ஒகோ! வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்று பாட்டொன்றில் வருகிறதல்லவா? நீ வாழமுற்படும்போது நான் சாவதைத்தான் காண்பாய். ஏன் தெரியுமா? தலைமுறை தலைமுறையாக இல்லாத வழக்கத்தை நீ நிலைநாட்ட நினைக்கிருய்; என் பிணத்தின்மேல் அப்படிச் செய்; அல்லது என்னைவிட்டு உடனே போய்விடு. உனக்கு ஒரு மாமன் இருந்தான் என்பதை மறந்துவிடு. நானும் எனக்கு ஒரு மருமகன் இருந்தான் என்பதை மறந்து விடுகிறேன். ஆனால் காலம் இருக்கிறது... அவசரப்பட்டு முடிவு செய்ய வேண்டாம். அவ்வளவுவரைக்கும் ஏன்? இந்தக்கிராமச்சங்

கப் போட்டி முடியும் வரைக்கும் நீ அவள் வீட்டுக்குப் போவதோ பேசுவதோ நன்ருயில்லை'' என்று முடித்தார் பொன்னம்பலம்.

காலம் இருக்கிறது என்றுதான் அவனும் கருதினுன். ஆனுல் அது சமாதானக் கதவைத் திறப்பதற்குப் பதிலாக சண்டைக் கதவைத்தான் தட்டியது. வைகாசி மாதம் பதினைந்தாம் தேதி செவ்வாய்க்கிழமை தேர்தல் முடிவு.

கணபதிப்பிள்ளையின் பணம் கள்ளாக ஓடித்தான் என்ன? பொன்னம்பலவாணரின் பயமுறுத்தல்தான் இறுதியில் வென்றது. போட்டியில் யானையைப் பைசிக்கிள் பதினுறு 'வோட்'டால் வென்றுவிட்டது. வென்றுவிட்டதா? பிழையான முடிவு, சமாதானம், அன்பு, அறிவு, இன்பம் இவை வெற்றிக்குப்பின் வந்தனவா? இல்லவேயில்லை? பின்பு......?

## 9

ஆண் பெண்களின் மனதில் உண்டாகி நாலு புறமும் அவர்களுக்கிருக்கும் பல பாகங்களையும் அறுத்துக்கொள்ளும்படி எந்தஅன்புசெய்கிறதோ, எவ்வித அன்பு ''நாமிருவரும் கூடியிருந்தால் போதும். உலகம் முழுவதும் நம்மை நிராகரித்தாலும் நமக்கு அச்சமுமில்லை; குறைவுமில்லை'' என்று ஸ்திரீபுருஷர்களை எண்ணும்படி செய்கிறதோ அதுவே காதல்.

—ரவீந்திரநாத் தாகூர் ... குமார சம்பவமும் சாகுந்தலமும்

பொன்னம்பலவாணர் வெற்றிக்கொடி நாட்டிய அன்றிரவு ஊதாரிக்கூட்டம் ஒன்று அவர் வீட்டில் கூடியிருந்தது. அவ்வளவு பேருக்கும் கோவிந்தன் தேநீர் கொடுப்பதிலும், வெற்றிலை-புகையிலை நீட்டுவதிலும் சலிப்படைந்து

விட்டான். நல்லதம்பி அண்ணரின் தலைமையிற் கூடிய அந்தக்கூட்டம் ஓயாத பேச்சும் ஒழியாத குடியுமாகப் பத்து மணிவரை நீண்டிருந்தது அதிசயமல்ல. அவரின் அருந்தவக்கொழுந்து 'பீடி மூர்த்தி' தகப்பனாரின் தலைமறைவில் இருந்தபடி புகையை மேலேவிட்டுச் சகபாடிகளுக்குப் புளுகையும் நீட்டிவிட்டுக் கொண்டிருந்தான். நல்லதம்பி கூட்டம், கணபதிப்பிள்ளை கூட்டத்தை 'மண்கௌவச் செய்த மகிமையை' ஒரு பாட்டம் பாடிவிட்டு இனி எப்படியெப்படியெல்லாம் அவர்களை மட்டம் தட்டவேண்டும் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தது. பீடி மூர்த்தியின் கூட்டம் ஏழை எளியவர்களை எப்படி வாட்டி வதைக்கவேண்டும் என்று திட்டமிட்டுக்கொண்டிருந்தது.

பொன்னம்பலவாணர் கோவிந்தனுக்குக் கட்டளைகள் இட்டபடி வருகிறவர்களுக்கெல்லாம் ஒரு 'கள்ள'க்கும்பிடுகையும், மெள்ளப்புன்சிரிப்பும் காட்டி உபசரித்துக்கொண்டிருந்தார். ''என்ன பாடுபட்டாலும் பதினறு 'வோட்' தானே வித்தியாசம். இது எனக்கும் என் சந்ததிக்கும் நீங்காத வசை'' என்று அவர் வாய் அடிக்கடி புலம்பிக்கொண்டிருந்தது. இந்தப் புலம்பலுக்குவிடை நல்லதம்பி அண்ணரின் வாயிலிருந்து உதிர்ந்தது. ''இந்தத் தாழ்ந்த சாதி ஆட்கள் தங்கள் சுயரூபத்தைக் காட்டிவிட்டார்கள். அவர்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தால் இப்படி நடப்பார்களா? எங்கள் காலத்தில் இப்படியானல், எங்கள் பிள்ளைகள் காலத்தில் எப்படி நடக்குமோ? பொன்னம்பலம்! அவர்களை ஒரு கை பார்க்காமல் விட்டால் எங்களுடைய குடி அழிந்தது'' என்று எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளினர். ''கட்டாயம் செய்துகாட்டுகிறேன் பார்'' என்று ஒத்தூதினர் பொன்னம்பலம். அங்கே இருந்த அத்தனை தலைகளும் ''ஆஹா! ஆஹா!!'' என்று ஆட்டம்போட்டன. பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்பது பொய்யா?

கணபதிப்பிள்ளையின் வீடு இருண்டுகிடந்தது. 'மெத்த வெளிச்சமின்றி ஒற்றைவிளக்கு' மினுங்கிக்கொண்டிருந்தது. ஒப்புக்குத் தோல்விபற்றிச் சமாதானம் கூற ஒரு சிலர் வருவதும் - போவதுமாயிருந்தனர். கணபதிப்பிள்ளையும் தன்னுடைய முன் யோசனையற்றசெயலை எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருந்தார். அமிர்தம் தன் 'பெரியம்மா'வைப் பார்க்கப்போய் நேரம் சென்றும் இன்னும் திரும்பிவரக் காணேம். வழியில்......

ஆம். வழியில் அவள் அவனைச்சந்தித்தாள். மாசிலாமணி, அவள் வீட்டைநோக்கிவருவதை அவள் பார்த்து விட்டாள். தன் தந்தையைச் சந்திக்க மணி வருவதை அவள் விரும்பவில்லை. தேர்தல் கோபத்தில் அவர் ஏதாவதுசொன்ஞல் தங்கள் காதல் கட்டிடம் பொடிப்பொடியாய் மண்ணேடு மண்ணுய்ப் போய்விடுமே என்று அவள் பயந்தாள். அதை அவ்ள் வெளிப்படையாகவே அவனிடம் கூறினுள். அவன் அதற்குக் கூறியபதில் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது:

''அமிர்தம்! உன் தகப்பனைச் சந்திக்க வேண்டாமென்று கூறுகிருயே, ஏன்? எனக்கு உங்கள் வீட்டுத் துக்கத்தில் பங்கு இல்லையா? நான் நியாயத்தைக்கூறிப் போட்டியிட வேண்டாமென்று தடுத்தேன். உன் தந்தை கேட்கவில்லை, அதற்காக நான் கோபித்தேனு? அப்படித்தான் இன்றும் உன் தந்தை என்ன கூறினுலும் நான் கோபிக்கமாட்டேன் உண்மை, அதனுல் எங்கள் காதல் குறையும்— மடியும்— என்று நினைக்காதே. காதல், அணையா விளக்கு. அந்தப் பொருளை ஒரு சிறு காற்று அணைத்துவிடும் என்று நீ பயப்படுகிருயா?''

அவள் பதில் சொல்லத் தயங்கினுள். ஒவ்வொரு வார்த்தையும் வெளிவர மறுத்தது.

''உலகம் முழுவதும் எதிர்த்தாலும் நமது காதல் ஜோதியை நான் காப்பாற்றுவேன் என்ற தைரியம் எனக்குண்டு. ...அதற்காக நான், பயப்படவில்லை. இந்த ஊரின்

எத்தர்கள் சிலரின் பேச்சைக்கேட்டு, நம்பி இத் தேர்தலில் அவர் இறங்கினுர். அப்போது நீங்கள் தடுத்தீர்கள். இப்போது நீங்கள் என்னசொன்னுலும் அவருக்கு மனச்சாந்தியை அளியாது. 'புண்ணிடைக் கோல்கொண்டு குத்த' வந்திருக்கிறீர்கள் என்றுதான் அவர் நினைப்பார். அதனுல் என் சொல்லைக் கேட்டுத் திரும்பிச் செல்லுங்கள்''

அவன் மறுத்துப்பேசவில்லை. அவன் வீட்டில் எத்தனை இடிமுழக்கம் கேட்டாலும்அவன்வீட்டில் எவ்வளவுஎதிர்ப்பு ஏற்பட்டாலும் தங்கள் காதல்... குன்ருமல்— குறையாமல் வளரும் என்ற நம்பிக்கையில் அவன் திரும்பினுன்.

அவன் நம்பிக்கை தளரவில்லை. தன்னுடைய கோரிக்கையைத் தன் தகப்பன் நிராகரிக்கமாட்டார். காலமும், இடமும் நோக்கிச் சொன்னுல் கைகூடும். அதற்கு மாசிலாமணியின் வரவிலும்பார்க்க வராமல்இருத்தல் நல்லதுதான். அவள் விரைவாக நடந்தாள். வீட்டின் சோகம் அவளை வாட்டியது.

அவனது வீட்டிலே கோலாகலமான காட்சி அவனை வரவேற்றது. சிற்றுணர்வுடையோரது சிலுசிலுப்பு அவனுக்கு எரிச்சலை மூட்டியது. மருதஞ்சேரி என்ற மைப்புள்ளியளவு குக்கிராமத்திலே நடந்த ஒரு கிராமச்சங்கத் தெரிவிலே வென்ற ஒருவெற்றி, தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்ற வெற்றியைப் போல ஆரவாரப்பட்டால்.........

அப்போது திடுக்கிடும்படியான ஒரு கேள்வி அவன் காதில் பட்டது. ''நாமெல்லாம் சந்தோஷப்படுகிருேம். ஆனுல்... பொன்னம்பலவாணரே! உங்கள் மருமகன் மாசிலாமணி எங்கே? அவனுக்கு இது சந்தோஷ நாளல்லவா? அவன் இப்போது எங்கே போய்விட்டான்? நானும் நெடுநேரமாகப் பார்க்கிறேன்; அவனைக்காணவில்லையே'' என்று கேட்டவர் யார்? மாமனுக்கும் மருமகனுக்கும் கோபத்தை மூட்டி ஒரு முடிச்சுப் போடப்பார்க்கும் பொல்லாத மனிதர் நல்லதம்பிக் கிழவனுர். ''உம்... நான் அவனை ஒரு

அவசரகாரியமாக ஒரு இடத்துக்கு அனுப்பிவிட்டேன். வந்து விடுவான்'' என்று மென்று விழுங்கினர் பொன்னம் பலவாணர். எப்படி மூடிமறைத்தாலும் அவர் கோபம் கொண்டிருக்கிருர் என்பதை அவர் முகம் காட்டிக்கொண் டிருந்தது.

அந்த நேரத்தில்தான் அவன் வந்து சேர்ந்தான். ''தம்பிக்கு நூறு வயது. தம்பியைப் பற்றிப்பேச அதுவே வந்துவிட்டதே'' என்று அழகாக அஃறிணையில் பேசி முடித் தார் நல்லதம்பி. ''ஏன் இந்தக் காட்சியைக் காண நூறு வயது போதுமா தாத்தா. ஆயிரமாயிரம் வயதல்லவா வேண்டும்'' என்று சிலேடையாகக் கூறினுன் அவன்.

மருதஞ்சேரிக் கிராமத்தில் தன்னை இதுவரை யாரும் 'தாத்தா' என்று கூப்பிட்டுக்கேளாத நல்லதம்பி மிரண்டு போனுர். தன் தகப்பனுரைத் 'தாத்தா' முறைபோட்டு அழைப்பதைக்கேட்ட 'பீடி மூர்த்தி'க்கும் கோபம் பொங்கி எழுந்தது. ஆனுலும் சிவபெருமானின் முடியில் இருக்கும் நாகம்தான் கருடனைப்பார்த்து, ''கருடா சுகமா?'' என்று கேட்கமுடியும். கருடன் கோபித்துத்தான் பயன் என்ன? விஷயம் விபரீதமாகப் போய்விடப்போகிறதே என்றபயத் தினுலே பொன்னம்பலவாணர், ''கோவிந்தா! தம்பிக்குச் சாப்பாடு கொடு'' என்று அதிகாரத் தொனியோடு கட் டளையிட்டுவிட்டு மற்றவர்களுக்கும் விடை கொடுக்கும் வேலையில் முனைந்தார்.

இராத் திருவிழா முடிந்து விடிந்ததும் கோவிலடி எப் படி 'வெறிச்'சென்றிருக்கிறதோ அப்படியே அந்த வீடும் காணப்பட்டது. பொன்னம்பலவாணருக்குத் தன் மருமக னில் இருந்த கோபம் உச்சநிலையை அடைந்திருந்தது. அவர் மனம் இடித்துரைத்தது. 'என் பணத்தினுலே இவனைப் படிப்பித்தேன். வீடுவீடாய்ப் பிச்சை எடுத்துத் தின்னுமல் மரியாதையாக அறுசுவை உண்டி கொடுத்து வளர்த்தேன். என் சந்தோஷத்தைக் கண்டு இவன் களிப்படையாமல் உள் ளத்தில் பொருமுகிருனே. இவன் ஒரு மனிதனு? இருதயம்

இல்லாத கற்சிலையா? எனக்கு உற்சாகம் ஊட்டிப்புகழேணி யில் ஏற்றவேண்டியஇவன் பலர்முன்னிலையிற் படுபாதாளத் தில் தள்ளிவிடுகிருனே. தான் உதவி செய்யாமல் விட்டா லும் செய்கிற மனிதர்களையும் கேலி செய்கிருனே. இவனை இப்படியே விட்டுக்கொண்டுபோனுல்... பிறகு நம்மை யார் மதிப்பார்கள். வளர்த்த கடா மார்பில் பாய்ந்தால் விட்டுவிடுவதா? — வழக்கம்போலக் காரமுள்ள உள்ளூர்ப் புகையிலைச் சுருட்டு வாயில் ஏறியது. யோசித்தார்... யோ சித்தார்... ஆழியின் திரையைப்போல அலையலையாய் எண் ணச்சுழல்கள் வந்து மடிந்தன.

அவன் சாப்பிட்டு முடித்துவிட்டு வந்தான். வாணர் அவனை அழைத்து, ''இவ்வளவும் எங்கே போய்விட்டு வரு கிருய்? அவளைத் தேடிப்போய்க் கவலை கொள்ளாதிருக்கும் படி சொல்லிவிட்டு வருகிருயா? கணபதிப்பிள்ளை வீட்டுக் குப்போய்க் கள்ளும், 'தண்ணீரும்' கொடுத்த பணம் எவ்வ ளவு என்று கணக்குப் பார்த்துக்கொண்டு வருகிருயா? 'ஐவ ருக்கு நெஞ்சும் எங்கள் அரண்மனைக்கு வயிறும்' என்று விது ரனைப்பற்றிக் கேட்டானே துரியோதனன், அப்படித்தான் நானும் கேட்கவேண்டியிருக்கிறது. பதில் சொல்'' என்று இரைந்தார். இந்த இரைச்சலைக் கேட்டுக் கையிலிருந்த வேலையையும் விட்டுவிட்டு ஓடி வந்தான் கோவிந்தன். முற் றத்தில் படுத்திருந்த நாய் மூச்சுவிடாமல் குரைத்தது.

மாசிலாமணி அமைதியாகப் பதில் சொன்னுன்: ''உங் களை நான் நேசிக்கிறேன். ஆனுல் அதிலும் பார்க்க இந்த ஊரை நேசிக்கிறேன். இன்றிருந்து நாளைமடியும் எங்களி லும் பார்க்க எழில்வளம் குன்றுத—எங்களை ஈன்று வளர்த் தெடுத்த— இந்தக் கிராமம் உயர்ந்ததல்லவா? உங்கள் தற் பெருமைக்காக—புகழ் என்று அலைந்துஓடும் பொய்க்கானல் நீருக்காக ஊரை நாசமாக்குவதா? இந்தக் கிராமச் சங்கத் தெரிவால் விளைந்த பயன் என்ன? தெளிந்த அறிவோடு யோசியுங்கள். ஊர் இரண்டுபட்டுவிட்டது. ஒரு சிறு கிரா மம். கிழக்கு - மேற்கு என்று பிரிக்கப்பட்டுப்போர் துவங்கி

விட்டது. கிழக்குப்பகுதியின் நாய் மேற்குப் பக்கத்திற்குப் போனாலும்—மேற்குப் பகுதியின் ஆடு கிழக்குப் பக்கத்தில் மேய்ந்தாலும் வந்தது வினை. ஆடு, மாடு, நாய், பூனை இப்படி யென்றால் மனிதர்கள்?... மனிதர்களா?... மனித உருவில் நடமாடும் மாமிசப் பிண்டங்கள்...

இந்த ஊரில் ஏழை எளியவர்கள் உங்கள் சூதாட்டத் தின் பகடைக்காய்களா? அவர்களுக்கு வாழ்வு இல்லையா? தேர்தல் தொடங்கி முடிந்தவரை எத்தனை வாழைகள் வெட் டப்பட்டன? எத்தனை பனையின் பாளைகள் சீவப்பட்டன. எத்தனை ஆயிரம் புகையிலைக் கன்றுகள் சிதறடிக்கப்பட்டன? எத்தனை ஏழைகள் கண்ணீர் சிந்தினர்? கதறி அழுத எளிய வர் எத்தனைபேர்? இதற்குப்பிறகு நடந்த வெற்றிக்காகச் சிரிப்பதா? அழுவதா?

பொன்னம்பலவாணர் சிரித்தார். காதலை மூடக் கபட நியாயம் பேசிப் போலித் தேசபக்தி காட்டுகின்றான் அவன் என்று எண்ணிச் சிரித்தார். "என் பாதை உங்களுக்குக் கோபத்தை மூட்டினாலும்—சிரிப்பைமூட்டினாலும் எனக்குக் கவலையில்லை. என்னை என் பாதையில் விடுங்கள்; இதுதான் நான் சொல்வது." என்று மாசிலாமணி வேண்டினான்.

"எள்ளு நசுங்காமல் எண்ணெய் வராது தம்பி! உலகா னுபவம் என்ற செக்கிலே நசுங்குமுன் உன்போல் பேசியவர் ஏராளம்" என்று மீண்டும் சிரித்தார் பொன்னம்பலம். பொன்னம்பலம் மாத்திரம் சிரிக்கவில்லை. விதியும் கை கொட்டிச் சிரித்தது.

# 10

மத்தளம் யாழ்கொம்பு வார்குழல் கின்னரம்
வாழ்த்தெடுப்பப் பக்தியி னுற்பலர் போற்றநற்
பாற்காவடி யுயர்த்தே எத்தனை பேரிரு கண்ணீர்
சொரிய விறைஞ்சிச் சென்று சித்திபெற் றூர்மன
மேசெல்வச் சந்நிதித் தேவனுக்கே.

—செல்வச் சந்நிதித் திருப்பாடல்

கையில் வேலுடைய ஐயன், அன்பர் வினையுடையவே மிதிக்கும் காலுடைய கந்தன், உப்பாற்றங்கரையிலே செல்வச் சந்நிதியிலே வீற்றிருந்தருளி, ஆவணி மாதத்துப் பூரணைத் திருநாளிலே பவனிவரும் காட்சியை யாழ்ப்பாணத்துப் பக்தகோடிகள் கண்ணாரக்கண்டு, வாயாரப்பாடி, மனமார வணங்கும் கோலத்தை என்னென்றுரைப்பது. சுற்று வட்டாரக் கிராமங்களில் இருந்து 'கைபுனைந்தியற்றிடுங் காவடி எடுத்து நிகரில் கீதம் நேர்படவியல அதற்கிணை மத்தளம் அதிர்ந்து முழங்க அளவில் அனுபவத் தண்ணுவி தாளம் அமைவுறப் போடும் அவதிக்கிணையாய்' ஆடும்

தாளக் காவடியும், தேர்க் காவடியும், செடில் காவடியும், கரகமும் பார்க்கப் பதினுயிரங் கண்களுக்கு நாமெங்கே போவது?

மருதஞ்சேரிக் கிராமத்தில் அண்ணுவி வைரவன் ஆடி மாதப் பிறப்போடு தாளத்தைக் கையிலெடுத்துவிட்டான். சந்நிதி முருகனுக்குத் தான் செலுத்த வேண்டிய நேர்த்திக் கடனுக்காகவும், தன் தலைமுறையின் புகழை மங்காது காப்பதற்காகவும் கிராமத்தில் வெகுசுட்டிகளாகிய மூன்று பையன்களைப் பொறுக்கித் தடியைத் தோளிற் கொடுத்துப் பழக்க ஆரம்பித்துவிட்டான். கேட்கவேண்டுமா? வருடம் முழுவதும் ஓயாது உழைத்து ஓடாகிப் போன தொழிலாளி வர்க்கத்திற்கு ஆயாசம் தீர்க்க அருமையான கண்காட்சி. குமரிமுதல் கிழவிவரை பாலர் முதல் பல்லுப்போன தாத் தாவரை அவன் முற்றத்திலே வட்டவடிவமாக இருந்தும் சிலர் உள்ளே போன ஒன்றரைப் போத்தலுக்கு உவப்பாகச் சென்ற வருடத்துப் புழுக்கொடியலை வாயில் மென்றபடியும் இரசிக்கத் தொடங்கிவிட்டார்கள். எங்கும் இதேபேச்சு. ஒரே கும்மாளம்.

வெறுங்காலோடு தாளத்துக்கு மிதித்த அந்த மூன்று சிறுவர்களுக்கும் சதங்கை கட்டி ஆடவிடும் சலங்கைக்கட்டு என்னும் திருநாள் இன்றைக்குத்தான். கிராமத்துக் கூத் திலே 'வெள்ளுடுப்பு' எனவரும் நாளைப்போலக் காவடி ஆட்டத்திலே இந்த நாளையும் கள்ளு, கோழி, ஆடு இவற் ருேடு அதி விமரிசையாகக் கொண்டாடுவார்கள். மழை பெய்து வேலை ஒன்றும் இல்லாத நாளானபடியால் சூரியன் மறையுமுன்னமே கும்பல் கூடிவிட்டது.

அண்ணுவி வைரவன் வெகுகவனமாக, பாதி ஆட்டத் தில் அறுந்து தொந்தரவு கொடாமல் இருக்கும்படி சதங் கைகளைக் கவனித்துக் கட்டுவதில் ஈடுபட்டிருந்தான். இன்று அவனுக்குப் பாதி கவலையாயும் பாதி சந்தோஷமாகவும் இருந்தது. தாளத்தின் ஒலியோடு சதங்கைகளின் ஓசை அணைந்து வரும்படியாகக் கால் மிதிகளில் பிழைவிடாமல்

இச்சிறுவர் ஆடுவார்களோ? என்பது அவன் கவலைக்குக் காரணம். இவ்வளவு நாளாகத் தான்பட்டபாட்டின் பெறுபேறு— அதன் முதற்படி— இன்று என்பதை நினைக்க அவனுக்குச் சந்தோஷம். மத்தளகாரரர் நேரம் இருப்பதைக் கவனித்துவிட்டு அந்த வீட்டின்பின் புறமாகப் போனார். திருவிழாவுக்குக் கொடியேற்றம் தானே செய்வதில் அவருக்கு ஆசை. காவடி எடுப்பாக இருக்கும். 'ஹார் மோனியம்' தன் சொந்தக்காரரர் இன்னும் வராதபடியால் ஒரு மூலையிற் கிடந்து தூங்கியது. வந்து சேர்ந்த சிறுகும்பலில் சிலர் நேரம் போவதற்காக வெற்றிலை—சுருட்டுப் பரிமாறிக் கொண்டு தமக்குள்ள நன்மை தீமைகளைப் பற்றிப் பேசினார்கள்.

''என்ன பெரியவரே! கள்ளுக்குடிக்காமல் விடச் சொல்வதற்குப் பட்டணத்தில் இருந்து படித்த மனிதர் சிலர் கூட்டம் போட வருகிறார்களாமே; எப்பொழுது?'' இது சுருட்டுக் குடித்துக்கொண்டிருக்கும் சுப்பனின் கேள்வி.

''எனக்கு எப்படியடா தெரியும். வாதம் வந்து முடக்கி வீட்டை விட்டு வெளிக்கிட்டே ஒருமாதம் ஆச்சு. உம்... எங்களுடைய காலத்திலே......'' என்று நீட்டி முழக்கிவிட்டு வாயில் இருந்த 'செருக்கற்பாக்கு' தலையைச் சுற்றியதால் அதைத் துப்ப எழும்பினார். தங்களுடைய காலத்தைப்பற்றிப் பெருமை பேசும் பெரியவர். அந்த நேரத்திலேதான் பெட்டைநாயின் குரைப்போடு தலை தெறிக்க ஓடிவந்து படலையைத் திறந்து உள் நுழைந்தான் மூர்த்தி.

''என்னடா பயலே! ஆளைப் பார்த்துவரக் கூடாதோ? என்மேலே விழுந்து பச்சடியாக்கப் பார்த்து விட்டாயே?'' என்ற பெரியவரின் உறுமலைக் கேட்டு அந்தக் கும்பலில் இருந்தவர்கள் எல்லோரும்திரும்பிப் பார்த்தார்கள். நறுக்கு மீசை நாகரிகத்தோடு நிற்கும் மூர்த்தி 'ஹி ஹி' என்று பல்லைக் காட்டியபடி ''ஒருநாய்...... துரத்தி......'' என்று மென்று விழுங்கினான்.

''போடா! போ. நாயைக் கண்டு ஓடும் ஆண்பிள்ளைச் சிங்கம், எங்களுடைய காலத்திலே......'' என்று பெரியவர் சொல்லத்தொடங்கவும் ''நீங்கள் நிச்சயமாக நாயைக் கடித்திருப்பீர்கள்'' என்று சுடச் சுடப் பதிலளித்தான் மூர்த்தி. வாலிப மட்டங்கள் இந்த ஹாஸ்யத்தை அனுபவித்து இடி இடி என்று சிரித்தன.

இந்தக் கோலாகலத்திடையே அண்ணுவி வைரவனின் பாட்டு ஆரம்பித்துவிட்டது. அந்த மூன்று சிறுவர்களும் மிகவும் பயபக்தியோடு அண்ணுவியாரைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத் தங்கள் இடங்களிற் போய் நின்றூர்கள். தாளத்தின் சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த பெட்டிக்காரர் அவசர அவசரமாகக் கட்டைகளை அமுக்கினூர். மத்தளகாரர் அப்போதுதான் சுதி சேர்த்தார். ''செல்வச் சந்நிதியிலே யமரும் பன்னிருகை வேலனே...... வா...... வா...... வந்தருளே'' என்ற இடத்தில் தான் சதங்கைகள் சப்தித்தன. தாளம் ஒன்று சேர்ந்தது. மத்தளம் ஒத்து வாசித்தது. சந்தோஷம் பொங்கி வழிந்தது.

அரைமணித்தியாலம் ஓய்வே கொடாமல் பம்பரம் போல் ஆட்டுவித்தான் வைரவன். ஏன்? அவனே ஆடினூன் என்று கூடச் சொல்லலாம். இந்தப் பக்கக் கால் மிதிக்க வேண்டுமென்றூல் தாளத்தை அந்தப் பக்கத்துக்கே போட்டுக் காட்டுவான். மறுபக்கமாகவென்றூல் அதையும் அபிநயத்தோடு தாளத்தாலே தான் காட்டினூன். ஒரே பல்லவியாகிய 'செல்வச் சந்நிதியிலே யமரும்' என்ற வரியை வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப விதம் விதமாகப் பாடித் தாளத்திலே அவன் காட்டிய வித்தியாசங்களையும் பிள்ளைகள் அதற்கேற்பத் துரிதமாய் ஆடிய பாங்கையும் கண்டு எல்லோரும் அதிசயித்தனர். 'ஆகா!' என்றூர்கள் பலர். உற்சாகமிகுதியால் சீழ்க்கையே வலித்துவிட்டனர் சிலர்.

சிறிது ஓய்வு. அண்ணுவி வைரவனது தாளம் இருந்த கையில் 'பிளா' காட்சியளித்தது. இந்த நிகழ்ச்சி முடியப்

போவது எப்போதோ?...... வந்திருந்தவர்களில் பாடக் கூடியவர்களை அழைத்துப் பாடச் சொன்னார் பெட்டிக் காரர். காத்தவராயன் பாட்டு, நல்லதங்காள் நாடகம், பூதத்தம்பி விலாசம், கிட்டப்பா சங்கீதம்......'காயாத கானகம்,' 'கோடையிலே இளைப்பாறி' 'டடடா டடடா' என்னும் டப்பா சங்கீதம், ஹிந்தி மெட்டு எல்லாம் கதம்பமாக மாறி மாறிப் பாடப்பட்டன.

அந்தக் கிராமத்துக் 'கழுதைக்' குரல்களையெல்லாம் மூர்த்தி வெறுத்தபடியால் ஒரு பீடியைப் பற்றவைப்பதற்காக வெளியே சென்றான். அங்கே தான் சுப்பனும் வந்து நெருப்புப்பெட்டி கேட்டான், "நீங்கள் ஏறுவதில்லையோ?" என்று சாதாரணமாகக் கேட்டான் மூர்த்தி. இந்தக் கேள்விக்குச் சுப்பன் ஒரு பெரிய பாரதக்கதையையே வாசித்துவிட்டான்.

"அதை ஏன் கேட்கிறாய் தம்பி! எல்லாம் என்னுடைய கெட்டகாலம். பாளை பதமாக வரும்போதுதான் கிராமச் சங்கத்தெரிவும் வந்தது. பெரியவர் பொன்னம்பலவாணர் வந்து நெருக்கினார். புதுப்பணக்காரரர் கணபதிப் பிள்ளையும் வந்து தனக்குப்போடும்படி கேட்டார்......நாங்களோ ஏழைகள்...... வேளாளர்களை அண்டிப் பிழைப்பு நடத்துபவர்கள். நாங்கள் என்ன செய்யலாம் தம்பி! நீயே சொல்லு!!"

"இது என்ன தலையிலா இடி விழவேண்டும். முதல் நான் நூறுரூபாய் கட்டிப் பத்துப்பனைக்கு உத்தரவு பெற்றுக் கொண்டு வந்தால், எல்லாப் பாளையும் வெட்டுப் பட்டுக் கிடந்தன. ஐயோ அதை இப்போ நினைத்தாலும்......" தன் குழந்தைகளை ஒவ்வொன்றாய் இறக்கக் கொடுத்துவிட்டுப் பரிதவிக்கும் அநாதைப் பெண்போலக் கண்ணீர் துளிக்கச் சொல்லி முடித்தான்.

இந்த இடத்திலே ஒரு முடிச்சுப்போட்டு மாசிலாமணி, அவன் மாமனார் பொன்னம்பலவாணர் இவர்களை மட்டம் தட்டவேண்டும் என்று மூர்த்தி தீர்மானித்தான்.. முன்பு

ஞானவைரவர் கோவிலில் தான் செய்த சத்தியம் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

"சுப்பா அது பொன்னம்பலவாணர் செய்வித்த வேலை தான்...... சந்தேகமே இல்லை. உனக்கு மாத்திரம் அதோடு போய்விட்டது...... ஊருக்கு இப்போது பெரிய நட்டம் வரப்போகுது...... அவர் தன்னுடைய மருமகன் மாசிலா மணியைப் பட்டினத்துக்குப் போய்க் கள்ளுக்குடியாமல் விட...... மரவரியை எடுக்க...... பிரசங்கிகளைப் பிடித்து வா என்று அனுப்பியிருக்கிறாராம்...... நீங்கள் நல்லாய் இருப்பது இந்தப் பெரிய மனிதர்களுக்குப் பிடிப்பதில்லையோ?"

குறைப் பீடியைப் பிறகும் பற்றவைத்துக்கொண்டு மீண்டும் குசுகுசுவென்று எவ்வளவோ ஓதினான் மூர்த்தி. எங்கேயோ இருந்து பல்லி ஒன்று 'இச் இச்' என்று சொல்லிச் சுப்பனைச் எச்சரித்தது. "பல்லி சொல்வதைப் பார்த்தால் சந்தேகமில்லாமல் உங்களுடைய சாதிக்கு நட்டமே வரப்போகிறது" என்று சிறிது பயமும் காட்டி முடித்தான் அவன். சுப்பன் மனதில் தீவினைத் தருவின் முளை அரும்பத் தொடங்கிவிட்டது.

'ஏலேயேலோ தத்தெய்யா ஏலேயம்மா' என்ற பல்லவியோடு கப்பலாட்டமும் தொடங்கி விட்டது. காவடி ஆட்டத்திலே அதி துரிதமாக ஆடும் இந்தக் கப்பலாட்டத்தினாலே புழுதி பறந்தது. 'ஏராஞ் சிலாபமும் மன்னாருங் கண்டு எழின்மேவு பாம்பன் வாய்க்காலுந்தாண்டி' என்றெல்லாம் வர்ணனைகளோடு கிராமக் கவிதையை நயம் படப்பாடி வைரவன் அதற்கியையப் போட்டதாளமும், அந்த மூன்று பிள்ளைகளும் நாலுதிசைகளிலும் மாறி மாறிக் கப்பல் தள்ளுவதைப் போல ஆடிய ஆட்டமும் வந்திருந்த கூட்டம் 'ஏலேயேலோ' என்று சேர்ந்து போட்ட ஒத்தாசையும் மத்தளத்தின் ஓசையும் ஹார்மோனியத்தின் பேரிரைச்சலும் சதங்கைகளின் கலகலப்பும் ஒரே ஆரவாரமாக இருந்தன.

'பீடி மூர்த்தி' என்ன மந்திர தந்திரம் போட்டானோ அது உடனே பலித்து விட்டது. "நிறுத்து ஆட்டத்தை; என்னுடைய பையனை ஆடவிட முடியாது" என்று இடிக் குரலில் முழக்கினான் சுப்பன். அண்ணாவி வைரவன் அவனை ஏறிட்டுப் பார்த்தான். "இடையில் ஏனப்பா குழப்புகிறாய்?" என்றான் மத்தளக்காரன். சுற்றியிருந்த ரசிக சிகாமணிகளும் ஏன்? ஏன்? என்றுதான் கேட்டார்கள்.

"எனக்கு ஒரு விடியத்தில் முடிவு தெரியவேண்டும்... அது இப்போது எல்லார் முன்னிலையிலும் சொல்லக் கூடியதல்ல. நாளைக்கு அண்ணாவியாரோடு பேசிய பின் தான் என் பிள்ளையை ஆடவிடுவேன்" என்று சொல்லிய படி தன் மகனை அழைத்துக்கொண்டு வெளியே புறப்பட்டான் சுப்பன். 'இந்த மூடு மந்திரம் என்ன? இது தான் எல்லார் வாயிலும் பிறந்த கேள்வி. வைரவன் அவமானத்தால் தலை குனிந்தான். மூர்த்தி வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். "எங்களுடைய காலத்திலே என்றால்......" என்று நீட்டி முழக்கிப் பெருமூச்சு விட்டார் பெரியவர்.

## 11

வெல்வதெம் குலத்தொழிலாம்— எந்த
விதத்தினில் இசையினுந் தவறிலைகாண்!
நல்வழி தீயவழி —என
நாமதிற் சோதனை செயத்தகுமோ?
செல்வழி யாவினுமே— பகை
தீர்த்திடல்சாலு மென்றனர் பெரியோர்;
கொல்வது தான்படையோ?— பகை
குமைப்பன யாவுநற் படையலவோ!

—சுப்பிரமணிய பாரதியார்— பாஞ்சாலிசபதம்

கணபதிப்பிள்ளை பின்வருமாறு சொன்னார்:

''எத்தனையோ மேடுபள்ளங்களைக் கண்டவன் நான். நான் வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால்... ஆ! அது பூம்பஞ்சணையல்ல புதரும்முள்ளும் நாலாபுறமும் பற்றி இழுக்க, இரத்தச் சுவடுபட்டு முன்னேறிய பாதை அது. ஒவ்வொரு படியிலும் எத்தனை கசையடிபட்டு முன்னேறியிருக்கிறேன். 'இன்று விளமை வறுமை' என்பது பொய்யல்ல,

அந்த வறுமையைப் புன்சிரிப்புடன் தாங்கி உலகத்திற் சிறிய கடுகுபோன்ற இந்த ஊரைவிட்டுப் பரதேசம் போனேன். பிறந்த பொன்னுடு உதாசீனம் செய்து துரத்தியது. இலங்கை மாதாவின் மலைவளநாடு என்னை வரவேற்றது. உடுத்த கந்தையோடு ஊரை விட்டுப்போன நான் பத்து வருடத்தில் இருக்க வீடு கட்டக்கூடிய பணத்துடன் திரும்பினேன். உதாசீனம் செய்த ஊர் அப்போது பொருமைக் கண் கொண்டு பார்த்தது. சீ !இது என்ன உலகம்!!

''அப்போதும் இந்தப் பொன்னம்பலவாணர்தான் பொருமைப்பட்டார். அவருடைய குடும்பத்தில் அவருக்குப் பேசிய பெண்ணை எனக்குக் கொடுக்க முன்வந்தார்கள். அதற்காகத் தான் பொருமைப்படுகிருர் என்று விட்டுவிட்டேன். ஆனுல், சாதி சாதி என்று பல்லவி பாடிக்கொண்டிருக்கும் அந்தக் குடும்பத்துள் என்னை மதிப்பார்களா? அந்தக் கலியாணத்தை நான் நிராகரித்தேன். அப்போதும், இப்போதும், எப்போதுமே நான் செய்தது சரி என்று என் மனச்சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது.

''அம்மா! அமிர்தம் நீ சிறு குழந்தையல்ல. படித்து உபாத்தியாயினியாகிப் பல விஷயங்களைக் கிரகிக்கக்கூடிய சக்தி பெற்றுவிட்டாய், உன் விவாக விஷயமாய் நான் இன்று அடுத்த ஊரில் பிரஸ்தாபித்தபோது கேட்ட சங்கதி என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது. அது உண்மையாய் இருக்க முடியாது என்று நினைத்தேன். நினைத்தது மாத்திரமல்ல, அப்படி இருக்கக்கூடாது'' என்றும் இப்போதும் சொல்கிறேன்.

''பூனையும் நாயும் வாழ்ந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிருயா? கதைகளில் இருக்கலாம். பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடித்ததாகக் கேள்விப்பட்டாயா? பழம்பெரும் புலவர்கள் புராணங்களிற் பாடியிருக்கலாம். உண்மையில் நடக்குமா? 'அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்

பருந்தும் ஒரு கூட்டில்' வாழ்ந்ததாக எங்கள் உபாத்தி யாயரும் சொல்லித்தான் தந்தார். உண்மை அதுவல்ல' அது வெகு கசப்பானது. நாயின் குரைப்பையும், புலியின் உறுமலையும், பருந்தின் பார்வையையும் தான் நான் உலகத் திற் கண்டேன்; கேட்டேன்.

'காதல்' என்கிறார்கள். பூனைக்கும் நாய்க்கும் காதலா? துஷ்யந்தன் சகுந்தலையைக் காதலித்தான். என்ன நடந்தது? அதற்குத் துர்வாச முனியின் சாபம் என்கிறார்கள். இங்கேதான் என்ன வாழ்ந்தது— வாழப் போகிறது— எத்தனை 'முனிபுங்கவர்கள்' சாபமிட— இல்லை, இல்லை— சாகடிக்கக் காத்துக்கொண்டிருக் கிறார்களோ?

"நீ எனக்கு ஒரே ஒரு பெண். சிந்தித்துப்பார். நன்றா கச் சிந்தித்துப்பார். நான் சிந்தியாமல் இந்தத்தேர் தலிலே இறங்கிப்பட்ட அவமானம் போதும். ஆனால் அந்த அவமானம் துடைக்கக்கூடியது. அடுத்த முறையில் நான் வெற்றி பெற்றால் அதுபோய் விடும். ஆனால் இது வாழும் கதை; வளரும் பயிர்; ஊழிகாலம் பெருகும் ஊற்று. அது யோசித்துச் செய்யப்படவேண்டியதே. பயம் வேண்டாம். உன் மனதில் உள்ளதைச் சொல். மூடி மறைத்துப் பயன் என்ன? உனக்கும் மாசிலாமணிக்கும் கடிதப்போக்கு வரவு உண்டா? அவன் உன்னை விவாகம் செய்யச் சம்மதிக்கிறானா? உனக்கும் அது சம்மதமா? எனக் குப் பதில் வேண்டும்."

அமிர்தம் பதில் சொல்ல யோசித்தாள். எப்படிச் சொல்ல வேண்டும்? என்பதுதான் அவள் யோசனை. தக பனார், முகவுரை— பிரசங்கம் வினா—என்ற முறையிலேவிஷ யத்தை முடித்து விட்டாரே. அவர் தகப்பன்; அவருக்கு ஒரு மகளிடம் அப்படிப் பேச உரிமையிருக்கிறது. ஆனால் அவளுக்கு, 'காதலை வேண்டிக்கரைக்கின்றேன்; இல்லை யெனில் சாதலை வேண்டித்தவிக்கின்றேன். என்று பாரதி யின் குயில் போலச் சுருக்கமாகக் கூறிவிட முடியுமா அல் லது கிணற்றிலே தண்ணீர் அள்ளினேன் ஒருநாள்; மிதிக்

கல்லுச் சறுக்கிக் கிணற்றுள் விழப்போகும் போது அவர் வந்து என்னைக் காப்பாற்றினர். அன்று தொடக்கம் எனக்கு அவர் மேல் காதல் என்று ஒரு காரணத்தின் மேல் ஏற்பட்ட காதலிது என்று பேசும் படக்காரர் உத்தியிலே ஏதாவதொன்றைச் சொல்லத்தான் நிகழ்ந்திருக்கிறதா? அப்படித்தானும் இல்லையே. 'அண்ணலும் நோக்கினன்'— நானும் நோக்கினேன். 'வந்துரு மாரன் கண்டான்— வம்புகள் செயுமப்பாவி, சிந்தனை என்னும் பந்தை உந்தினன் விந்தைக்காலால்' என்று கவிதை மூலந்தான் கூறமுடியுமா? இது என்ன சங்கடம்? போகிறது; போய்க் கொண்டே இருக்கிறது. நிமிஷம் ஐந்து, பத்து, பதினைந்து. 'இடை நிலை மயக்கம்' படிப்பிக்க முகவுரை எப்படிச் சொல்ல வேண்டும் என்று கேட்டாலும் ஒரு நிமிஷத்திற் பதில் சொல்லக்கூடிய அமிர்தத்திற்கு காதல் மயக்கத்திற்குப் பதில் சொல்ல எத்தனை நிமிஷம்தான் வேண்டுமோ?

கைத்தடியின் டக்— டக்— டக் என்னும் ஓசை முற்றத்திற் கேட்டது. கணபதிப்பிள்ளை எழுந்துவந்து பார்த்தார். ஒரு நாளும் இல்லாத திருநாளாய்— கிராமச்சங்கத் தெரிவு முடிந்து சுமார் மூன்றுமாதங் கழித்து— நல்லதம்பிக் கிழவனர், அவரை நோக்கி வந்து கொண்டிருந்தார். முகங் கொடுத்துப்பேசியறியாத அவர் தன் வீடு தேடிவருவதைக் கண்டு கணபதிப்பிள்ளை திகைத்தார். 'என்ன சூழ்ச்சி செய்யப் பிறகும் என்னிடம் வருகிறார்.' என்று அவர் ஒரு கணம் எண்ணினர். ஆனாலும் வீட்டுக்கு வந்தவரை விரட்டியடியாத கிராமத்துப் பண்பாடு கணபதிப்பிள்ளைக்கு மாத்திரம் விதிவிலக்கா? ''பெரியவரே! வாருங்கள். என்ன அவசரகாரியம். என்னைத்தேடி நீங்களே வந்துவிட்டீர்கள்?'' என்ற குரல் கேட்டு அமிர்தமும் திரும்பிப் பார்த்தாள். 'நொள்ளைக் கதைகள் பல பேசி ஊரைக்கிள்ளி விட்டுக் கூத்துப் பார்க்கும்' கள்ளக்குணமுள்ள நல்லதம்பி ஹி ஹி ஹி என்று சிரிப்பதைக் கண்டாள். வந்தது வினை என்று வெறுப்போடு திரும்பினள். சுவரிலே மாயமானைக்

கண்டு சீதை மருளும் காட்சி வர்ண ஓவியமாக அவள் முன் காட்சியளித்தது.

''என்ன கணபதிப்பிள்ளை, எப்படிச் சுபசேமம் என்று சும்மா விசாரிக்கலாம் என்று தான் வந்தேன். வந்து அதிக நாள் ஆகிவிட்டது. உனக்கு ஒருவேளை என்மீது கோபமாய் இருக்கலாம். என்னடா இந்தக் கிழவன் கிராமச்சங்கத்துக்குக் கேள் கேள் என்று தூண்டினனே. பிறகு பொன்னம்பலவாணனுக்காக ஒடியாடித்திரிகிருனே என்று என்னப்பா செய்யலாம். ஒரே பழியாக வந்து வீட்டிலே கிடந்தான் மனுஷன்; என்ன செய்ய முடியும்? என்னுடைய நிலைபரத்திலே நீ இருந்தாலும் அப்படித்தான் செய்வாய். ஆனுலும் என்மீது பிழையில்லாமல் இல்லை. அதை உன்னிடம் சொல்லத்தான் வந்தேன்.'' என்று பலமான பீடிகை போட்டு வலையைவிரித்தார். கணபதிப்பிள்ளை, கிழவனுரின் வார்த்தையில் மயங்கவில்லை. அவர் விட்டுக்கொடாமற் பதில் சொன்னுர்.

''பெரியவரே! நான் தேர்தலில் இறங்கும் பொழுது என் சக்தியைக் கொண்டு— அதை முழுதாக நம்பி— இறங்கினேன் ஒழிய, உங்களின் தூண்டுதலால்மாத்திரம் இறங்கவில்லை. அப்படியிருந்தால் நான் பாதியளவிலேயே அதை விட்டு வெளியேறியுமிருப்பேன். என்றுலுமென்ன? பதினுறு 'வோட்' வித்தியாசம். அடுத்தமுறை; அல்லது விட்டால் அதற்கு அடுத்தமுறை; இல்லை உயிருள்ளவரைக்கும் கேட்கத்தான் போகிறேன். அத்தனை முறைக்கும் உங்களை மாத்திரம் நம்பினுல் போதுமா? நீங்கள் இருக்கத்தான் போகிறீர்களா? இதில் எனக்கு யார்மீதும் கோபமில்லை. மாருக மகாசந்தோஷம். இந்த ஊரில் பொன்னம்பலவாணரை எதிர்க்கக்கூடிய ஒருசக்தி எனக்குத்தான் உண்டு.

''ஆமாம்! ஆமாம்''என்று தலையாட்டினுர் நல்லதம்பி. ஆனுல், உள்ளுக்குள் ''நீங்கள் இருக்கத்தான் போகிறீர்களா?'' என்று என்னை வெகு விரைவில் சுடுகாட்டுக்கு அனுப்ப இவனுக்கு ஆசை என்பதும் தெரிகிறது என்று புழுங்கினுர்.

''போகட்டும். நீ கோபிக்கவில்லே; சந்தோஷம். ஆனுல் அந்த நன்றிகெட்ட பயல் பொன்னம்பலம் கோபித்து விட்டானே; அவன் மருமகன் அந்தச்சட்டம்பி இன்றைக்கு என்னே......'' என்று கோபத்திற் கைத்தடியை நிலத்திற்பலமாகத் தட்டினுர்.

''என்ன? என்ன கொஞ்சம் விபரமாகச் சொன்னுல் அல்லவோ விளங்கும்'' என்று கணபதிப்பிள்ளே ஆவலோடு வினவினுர். இன்னெரு மனம் அந்தப் புதினத்தை அறிய 'காற்றினும் கடிய வேகத்தை அடைந்தது. ஆனுல் தகப்பனுர் ''அமிர்தம்! போய் தேநீர் கொண்டு வந்து பெரியவருக்குக் கொடு'' என்று கட்டளேயிடும்போது அந்த மனம் என்ன பாடுபட்டிருக்கும். ஆனுலும் சாதித்தடிப்புத்துணே செய்தது. கிழவனுர் ''வேண்டாமப்பா இப்பதான் குடித்து விட்டு வந்தேன். புகையிலேயிருந்தால் கொடு'' என்றுர். கணபதிப்பிள்ளே வீட்டில் 'செம்பு— தண்ணீர் எடுக்கக்' கூடியவரா நல்லதம்பி? ஆனுல் அவர் திருக்குமாரன் பீடி மூர்த்தி ஓடி ஓடி யார் வீட்டிலும் எது வேண்டுமானுலும் குடிப்பது யார் செய்தகர்மவினேயோ? அட! சண்டாள உலகமே!!

புகையிலேயை வாயிற் குதப்பியபடியே நிகழ்ச்சியைப் பிரலாபித்தார் கிழவனுர். 'நிறையக் கைச்சரக்கும், கொஞ்ச உண்மையும் கலந்து பூசிமெழுகினுர்.

''இந்தத் தெரிவு வந்தபிறகு எங்களூர்ப் பள்ளருக்குத் தலேகால் தெரியவில்லே. 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு யோகம்'' தானே' நேற்று மழை பெய்தபோது என்னுடைய மகன் ஞானவயிரவர் கோவிலில் ஒதுங்கப் போயிருக்கிறுன். அப்போது அந்த நொண்டிக் கணபதி உண்டியற் பெட்டியை உடைத்துத் திறந்துகொண்டு இருந்தானும். இவன்— மூர்த்திதான்— அவனேப் பார்த்து 'ஏனடா திறக்கிருய்' என்று கேட்டானும். அந்தநேரம் அந்தச் சட்டம்பி— ஆமாம் பொன்னம்பலவாணருடைய மருமகன்— வந்து என்னுடைய மகனே ஏசி அனுப்பினுனும்.

அவன் சும்மாவிடக் கூடியவனு? அடிபட்டதிலே இடையிலே புகுந்த நொண்டிக்குத் தலையிலே அடிபட்டிருக்காம். இதுதான் நடந்தது. காலம் கலிகாலமப்பா! 'ஏன் திருடு கிருய்' என்று கேட்டால் ஏச்சு அடி, இப்படியிருக்கிறது ஊர் என்னும்போது, ''பிள்ளை! பெரியவர் இருக்கிருரோ'' என்ற குரல் கேட்டது.

# 12

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம்

—''வாக்குண்டாம்''......... பாட்டு 15

''பெரியவர் உள்ளே இருக்கிறாரா?'' என்ற குரல் கேட்டு நல்லதம்பி அண்ணார் ''யாரடா அவன்'' என்று அதிகாரத்தோடு உறுமினார். ''நான்தான் சுப்பன்'' என்ற பதில் அவரைத் தூக்கிவாரிப் போட்டது. 'இந்த ஊர்ப் பள்ளருக்கெல்லாம்' என்று அவர் நீட்டி முழக்கிச் சொல்லிக்கொண்டிருந்த சம்பாஷணையை அவன் கேட்டுக் கொண்டிருந்தானோ என்று அவர் ஒரு கணம் சிந்தித்தார். ஆனால் சிந்திக்க முடியவில்லை. கணபதிப்பிள்ளை ''என்ன சங்கதி?'' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தார். அவர் மாத்திரம் தனித்திருக்க முடியுமா?

சுப்பன் சொன்ன சங்கதி பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது கிழவருக்கு. அவன் சொன்னது இது

தான்: "வருகிற பூரணைக்குக் காவடி எடுக்கப் போகிறோம் செல்வச் சந்நிதி முருகனுக்கு. அண்ணாவி வைரவன்தான் எங்களுடைய பிள்ளைகளில் மூன்று பேரைப் பழக்கினான். ஆனால் சலங்கைக் கட்டோடு காவடி ஆட்டம் குழப்பத்தில் முடிந்துவிட்டது" என்று இழுத்தான்.

"ஏன்? பணம் இல்லையா." என்று கேட்டார் கணபதிப்பிள்ளை. "யார் குழப்பியது?" என்று ஆவலோடு வினவினார் நல்லதம்பி. "நான்தான் குழப்பினேன்; பணம் இல்லாமல் அல்ல. அண்ணாவியாருக்கும் எனக்கும் ஒத்துப் போகவில்லை. அன்றுதான் ஒரு சங்கதி கேள்விப்பட்டேன்; அதுவும் பெரியவருடைய பிள்ளைதான் சொன்னது." என்று கதை கேட்கும் ஆவலைத் தூண்டினான் சுப்பன்.

"யார் மூர்த்தியா? அவன் என்ன சொன்னான்?" என்று பரபரப்போடு கேட்டார் கிழவர். கணபதிப்பிள்ளை, 'விஷயம் முக்கியமானதுதான். நேரம் செல்லத்தான் போகிறது' என்று யோசித்தவராய், "அமிர்தம்! சுப்பனுக்குத் தேநீர் கொண்டுவந்து கொடு" என்று கட்டளையிட்டுவிட்டு முன் திண்ணையிலே உட்கார்ந்தார்.

"இந்தப் பாழாய்ப்போன கிராமச்சங்கத் தெரிவு வந்ததோ இல்லையோ—அன்றுதொட்டு இந்த ஊருக்கு வந்தது வினை. நான் பத்துப் பனைக்குக் காசு கட்டிவிட்டு வந்து பார்த்தால் எல்லாப் பாளைகளும் வெட்டப்பட்டுக் கிடந்தன. இந்த இரகசிய வேலையைப் பொன்னம்பலவாணர் செய்வித்துவிட்டு, தம்பி மீது சாட்டிவிட்டார். அப்போது நானும் இதை நம்பினேன். இப்போதுதான் இது எனக்குத் தெரிந்தது— தம்பி! ஏழை அழுதகண்ணீர்— நான் விட்ட பெருமூச்சு— என் குடும்பத்தார் போட்ட சாபம் இது அவரைச் சும்மா விடுமா?" என்று அவன் பொருமலோடு நிறுத்தினான்.

''சரி! சரி! பழங்குப்பையைக் கிளறி என்ன பிரயோசனம்! துர்நாற்றம்தான் மிச்சம். தேநீரைக் குடி'' என்று அதிக அக்கறை கொள்ளாதவர் போலச் சொன்னார் கணபதிப்பிள்ளை. கிராமச்சங்கத் தெரிவுக்கும் காவடி ஆட்டக் குழப்பத்திற்கும் காரணம் தெரியாமல் திருதிருவென விழித்தார் நல்லதம்பி. தன்னுடைய மகன் போட்ட முடிச்சு எப்படி இறுகியது என்று அவர் எவ்வளவு யோசித்தும் புலனாகவில்லை. தன் மகனுடைய சாமர்த்தியத்தை மனத்துள் மெச்சிக்கொண்டார். ஆகா! 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ன!

இந்தச் சிக்கலை சுப்பன்தான் விடுவித்தான். ''வழக்கமாக ஞானவைரவர் கோயிலிலிருந்து காவடி எடுப்பதுதான் எங்கள் மரபு. முதன்முதலில் பொன்னம்பலவாணர் வீட்டில் ஆடிவிட்டுத்தான் மற்றைய வீடுகளுக்குப் போவோம். வழியில் இருக்கும் பெரிய மனிதர்கள் வீட்டுக்கு அண்ணாவி கூட்டிக்கொண்டு போய்த் தன் திறமைகளைக் காட்டுவது அன்று தொட்டு இன்று வரையும் உள்ள சங்கதிதான். எனக்கு இந்தமுறை அப்படிச் செய்ய விருப்பமில்லை. 'என்னுடைய மகனை நான் அப்படிச் செய்யவிட முடியாது' என்று கூறிவிட்டேன். ஆனால், அண்ணாவியார் 'அப்படியானால் காவடி ஆட்டமே நடவாது' என்று சொல்லிவிட்டார். இதற்கென்ன செய்வது?'' என்று அவன் சுருக்கமாக— ஆனால் தன்மானத்துடனும்— அதனால் ஏற்படும் விளைவு குறித்து வருத்தம் தொனிக்கும் விதமாகவும் கூறி முடித்தான்.

சிக்கல் தீர்ந்ததும் நல்லதம்பி உஷாரானார். ''ஏன்? வேறொரு அண்ணாவியாரைப் பிடித்து ஆட்டுவதுதானே? இந்த ஊர் தேசமெல்லம் ஒரு வைரவனைத் தவிர வேறு அண்ணாவிமார் கிடையாதோ? பணமில்லாவிட்டால் சொல். தனித்து மத்தளம்-பின் பாட்டுக்காரர் பிடிக்கக் கொஞ்சம் செலவாகும்தான். ஆனால், பொன்னம்பல

வாணன் மனம் எரியவேண்டும். தம்பி! கணபதிப்பிள்ளை! கிராமச்சங்கத் தெரிவில் பட்ட தோல்வியை இந்தச் செய்கையால் நிரவிவிட்டால், பொன்னம்பலம் ஒழிந்தான். உண்மை. அவன் மனம் எனக்குத் தெரியும். பொருமை அவனை அரித்துத் தின்றுவிடும். சுப்பனுக்கு வேண்டிய பணம் கொடு. பின் அவன் உழைத்துத் தருவான். அவன் நிரம்ப யோக்கியன்'' என்று தன் மனதில் பட்டதை பட்ட வர்த்தனமாகக் கூறினர். அவர் அப்படிக் கூறியது வாழ்க்கையில் இதுதான் முதல் தடவை.

ஆனுல் கணபதிப்பிள்ளை நம்பவில்லை. நல்லதம்பிக் கிழவனாின், தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் சூழ்ச்சியை, தெரிவின்போது நன்கு அறிந்தவர் அவர். 'சூடு கண்ட பூனை அடுப்படிக்குப் போகுமா?' கணபதிப்பிள்ளை சாந்தமாக, ''சுப்பா! வழக்கம் எதுவோ அதைத்தான் செய்யவேண்டும். மீறி நடக்கக் கூடாது. நடப்பதை நானும் வெறுக்கிறேன்'' என்ருர்.

சுப்பனுக்கும் நல்லதம்பிக்கும் ஒரே ஏமாற்றமாய்ப் போய்விட்டது. எனினும் எத்தனையோ ஏமாற்றங்களைக் கண்ட கிழவனர் விட்டுவிடுவாரா? ''வழக்கமாம் வழக்கம். அப்படியானுல் எத்தனையோ ஆண்டாய்க் கிராமச்சங்க அங்கத்தவனுய் இருந்த அவனுடன் நீ ஏன் போட்டி போட்டாய். பெண்கள் படித்து உபாத்தியாராக வந்தது இந்த ஊரின் வழக்கமோ? கட்டைவண்டி ஓடிய இந்தத் தெருவிலே 'பஸ்' ஓடக்கூடாது. அது வழக்கமில்லை என்று மறித்துவிடாமல் ஏன் பார்த்துக்கொண்டிருக்கிருய்? கிழவனுகிய நான் வழக்கம், மரபு எல்லாம் விட்டுவிட்டு ஊருக்குத் தக்கதாக மாறிவிட்டேன். பணத்திலே புரளும் நீ— நாற்பத்தைந்து வயதைக் கடவாத நீ— ஊருக்கு வழிகாட்டவேண்டிய நீ— வழக்கம் வழக்கம் என்று கூறுகிருயே. சூடு மிதிக்கும் மாடுகளைப்போல வழக்கம் என்ற தடியைச் சுற்றிச் சுற்றி வருகிருயே''

என்று மேடைப்பிரசங்கி கர்ச்சிக்கும் தோரணையில் கேட்டார்.

அதற்கு ஏற்றதுபோல அவனும் சொன்னான். ''எனக்கு நட்டம் வருவித்து— என் குடும்பத்தைத் திண்டாடவிட்டு— என் குழந்தைகளைத் திக்கற்றவர்களாக்கிவிட்ட அந்தப் பெரிய மனிதனை நான் மதிக்கப்போவதில்லை. வழக்கமாய் இருந்ததுதான். அதை நாம் அழிக்கக் கூடாது என்பதும் உண்மைதான். பச்சிளம் பாலகரின் கழுத்தைத் திருகிக் கொல்பவர் மாதிரி, பனையின் பாளையை வெட்டித் தள்ளியது வழக்கமானதா? என்னை அடிக்கலாம். நான் பொறுத்துக்கொள்ளுவேன். வேண்டிய மட்டும் வையலாம். நான் சிரித்துவிட்டுப் போய் விடுவேன். ஆனால் இது என் குடும்பத்தையே அழித்த மாதிரித்தான். என்ன நேர்ந்தாலும் சரி... இந்த ஊரை விட்டுத் துரத்தி நாய்போல் அடிக்கப்பட்டாலும் சரி... நான் இதை நடத்தியே தீருவேன். தனியாக என் பையனை ஞானவைரவர் கோவிலில் வைத்து வேறொரு அண்ணாவியாரின் தாளத்தோடு காவடி எடுப்பித்து முதன் முதலில் இங்கேதான் வருவேன். தம்பீ! நீங்கள் உங்கள் முற்றத்துக்கு வரும் ஏவல் செய்பவனைத் துரத்தாதீர்கள். அதுதான் நான் வேண்டுவது.'' அவனது மனத்திலிருந்த பாரம் நீங்கியது.

கணபதிப்பிள்ளை பெரிய இடர்ப்பட்டார். ''சரி, சரி பார்ப்போம்'' என்று சொல்லிவிட்டு, இருவருக்கும் புகையிலை எடுத்து வருவதற்காக உள்ளே போனார். அமிர்தத்தின் கண்கள் கலங்கியிருப்பதையும், அதைத் தனக்குத் தெரியாமல் அவள் துடைப்பதையும் அவர் காணத்தவறவில்லை. அவள் அழுவதன் காரணம்தான் யாது? அந்த யோசனையில் அவர் வாயிற்படியில் குனியாமல் உள் நுழைந்தார். 'படார்' வாயிற்படி அடித்துவிட்டது. தலையில் என்ன கேடுதான் சூழப்போகிறதோ? விதியின் கை எழுதுவதை யாரால்தான் அழிக்கமுடியும்?

சுப்பனும்— எத்தனையோ விஷயங்கள் பேசவந்த நல்ல தம்பிக் கிழவரும் சுருட்டைப் புகைத்தபடி வெளியேறிவிட்டார்கள். கிராமச்சங்கத் தெரிவின் பின் ஓய்ந்திருந்த அந்த வீட்டில் பின்பும் துயரம் குடிகொள்ளத் தொடங்கியது. அவள் அழுதாள். தன் காதலுக்கு இடையூறாய்— ஒரு தொடர்பும் இல்லாமல்— இந்தக் காவடி ஆட்டம் வந்து புகுந்து குட்டையைக் குழப்புகிறதே. காதல் நிறைவேறுமா? காவடி ஆட்டம் சுமுகமாய் முடியுமா? இதுவே அவள் பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது யார்?... அவன்..... ஆமாம்! விடியட்டும்,

## 13

''ஒருவேளை அவர்கள் என் சொல்லைக் கேளாவிட்டாலும் அவர்களை ஒரு வார்த்தை கூடச் சொல்லி திட்டமாட்டேன்; அல்லது சாப மிடமாட்டேன். சென்ற காலத்தில் நாம் அரிய காரியங்களைச் செய்திருக்கிறோம். எதிர்காலத்தில் நாம் அதைவிடப் பெரிய காரியங்கள் செய்ய முடியாவிட்டாலும் நாமனைவரும் சமாதானத்துடன் ஒன்றாக மூழ்கி இறக்கிறோம் என்ற இந்த எண்ணமாவது நமக்கிருக்கட்டும்.''

—சுவாமி விவேகானந்தா இந்தியப் பிரசங்கங்கள்—

விடிந்தது— கூர் இருள் கழிந்து கோழிகள் கூவ, கடவுளர் நிலை தொறும் படுமணி அரற்ற பூவெல்லாம் மலரப் புட்குலம் ஆர்க்க— விடிந்தது. மருகஞ்சேரிக் கிராமம் தன் அன்றாட வேலைகளில் முனைந்துவிட்டது. அவள் ஒருத்தி, ஆமாம்; அமிர்தம்தான் அமைதியில்லாமல் அன்றிரவு முழுவதும் புரண்டு புரண்டு படுத்தாளே; அவள்

தான் தன்வேலையை விட்டு அவனைத் தேடிப் புறப்படச் சித்தமானாள். அன்றிரவுதான் வீட்டில் நடந்த விடயங்களைக் கூறி, மாசிலாமணியின் ஆலோசனைகளைக் கேட்க முன் அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை. பாடசாலையில் கேட்கலாமோவென்றால்... பாழாய்ப்போன பாடசாலை சந்நிதி முருகன் திருவிழாவுக்காக மூடப்பட்டுவிட்டதே. எங்கே சந்திப்பது? எப்படிச் சந்திப்பது? கிராமத்தில் இது நடக்கக்கூடிய காரியமாக அவளுக்குத் தோற்றவில்லை.

அவள் பாடசாலையை நோக்கித்தான் நடந்தாள். அவள் மனம் எதிரே வரப்போகும் குடும்பச் சண்டையைப்பற்றிக் கற்பனை செய்ததே ஒழிய, கண்கள் தன்னிடம் படிக்கும் பிள்ளைகளில் யாராவது தென்படமாட்டார்களா? என்று துருவி ஆராய்ந்தன. நல்ல காலம் பனங்காய் பொறுக்கக் கடகத்தோடு போன திலகவதி என்ற பிள்ளை மூலம் தூது நடந்தது.

அவன் வந்தான். கிராமச்சங்கத் தேர்தல் என்ற புயலுக்குப்பின் அமைதி நிலவுவதாக அவன் கட்டிய மணற்கோட்டை அவள் செய்தியால் தகர்ந்தது. பெருநெருப்பின் மேல் மூடிய சாம்பல், காவடி ஆட்டமாகிய சிறு காற்றுப் பட தக—தகவென மின்னிப் பழையபடியும் காதலாகிய மலரைக் கருக்கப் போவது அவன் மனத்திரையில் தெரிந்தது. எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளுவதற்கு நல்லதம்பிக் கிழவனார் இருக்கிறாரே, இந்தப் பொல்லாத நச்சரவங்கள் அற்றுப்போகும் வரை இந்த ஊருக்கு விமோசனமில்லை என்பதுதான் அவன் கண்ட முடிபு.

"இந்த நல்லதம்பிக் கிழவனார் சுபாவம் மாறாது. என் மாமனார் இதைக்கேட்டால் உருத்திரமூர்த்தியாய் விடுவார். உன் தகப்பனாரை இந்தக் காவடியாட்டம் நடக்கும் நாளில் கலந்துகொள்ளாமல் இருக்கச் செய். இதற்கிடையிலே இருபகுதியாரையும் நான் சமாதானஞ் செய்யத் தெண்டிக்கிறேன். என் சொல்லைக் கேளாவிட்டாலும்

முயற்சி செய்து பார்ப்பதில் தவெருென்றுமில்லே. இன்று அண்ணுவி வைரவனேச் சந்தித்துப் பேசிப் பார்க்கிறேன். சமாதானத்துடன் காவடியாட்டம் நடக்க வேண்டும்; அல்லாதுவிட்டால் ஞானவைரவர் கோவிலில் வைத்துக் காவடி எடுக்கக் கூடாது என்று இரு பகுதியாருக்கும் கண்டிப்பாகக் கூறுவதுதான் என் முடிபு.'' மாசிலாமணியின் இந்த வார்த்தைகள் அவளுக்கு மனத்திலே சமாதானத்தை உண்டாக்கவில்லே. நேற்றிரவுதான் தகப்பனுரது தலேயில் வாயிற்படி அடித்ததைப்பற்றி அவள் திரும்பத் திரும்பக் கூறினுள். 'ஏதோ கேடு சூழப்போகிறது' என்று அவள் அடிக்கடி ஞாபகப்படுத்தினுள். 'என்ன நேர்ந்தாலும் தங்கள் காதல்— ஒட்டும் இரண்டு உள்ளங்களின் துடிதுடிப்பு— என்று அமைதிபெற முடியும்?' என்பதுதான் அவள் ஏக்கம். சிந்தனே. திகில். விதியின் விளேயாட்டை அவன் தீர்மானமாகக் கூறமுடியுமா? ''பயப்படாதே'' என்று மாத்திரம் கூறி வாய் மூடினுன்.

எது நிகழாது சமாதானமாய் முடியும் என்று கற்பனே செய்தாஞே அல்லது பதினேந்து நாள் கழித்துத் தான் நடந்தாலும் நடக்கும் என்று தீர்மானித்தாஞே— அது உடனே நடந்துவிட்டது. பொன்னம்பலவாணர் பாடசாலே வாயிலில் நின்று உறுமினுர். அப்போதுதான் சிறுபிள்ளேயைத் 'தாதுவிட்ட' பெரும் பிழையை அவள் உணர்ந்தாள். ''போதும்! வா!! பயப்படாதே என்று நீ கூறலாம். ஆனுல் நான் இருக்கும் வரை பயப்படாமல் நீயும் அவளும் வாழவிடமாட்டேன். விடிந்தது விடியுமுன் தூது அனுப்புகிருளே, இதுதான் அவள் படித்த படிப்பின் புத்தியோ? அவளேச் சொல்லிக் குற்றமில்லே. அவள் தாய்? 'மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டுமா?' நீயும் இவள் பின்னுல் சுற்றிச்சுற்றி வருகிருயே. உன் புத்தி எங்கே போய்விட்டது. இவள் தகப்பன் பணம் சீதனமாகத் தருவான் என்று மனப்பால் குடிக்கிருயா? பணம்— இறைச்சி, கள் இவை விற்றுப்

பெற்ற பெரும் பணம். அவனு கொடுக்கப் போகிறுன்? வாடா! வா!! மிகுதியைப் பாடசாலை தொடங்கிய பின் பேசிக்கொள்ளலாம்.'' தன் மனத்திலிருந்த விஷவித்துக் களை ஒவ்வொன்ருக உதிர்த்தார் பொன்னம்பலம்.

மாசிலாமணி வாய் திறக்கவேயில்லை. திறந்தால் ஏதேனும் விபரீதம் விளைந்து ஊர் திரண்டுவிடும். அதனுல் அவளுக்கு பெரும் மனத்துயர் உண்டாகும் என்பதுதான் அவன் எண்ணம். அவளுக்கு இது மனதில் உதிக்கவில்லை. தன்னை எப்படி வைதாலும் அவள் பொறுத்துக்கொள்வாள். தன்னுடைய தாய்— இறந்துபோன ஒரு பிரகிருதி— இவ்வுலக துன்பங்களிலிருந்தும் விடுபட்ட ஒரு ஆத்மா— அவளைப் பற்றி ஒரு கயவன் கூறுவதை அமிர்தம் பொறுப்பாளா?

''இறந்து போனவர்களைப்பற்றி இருப்பவர்கள் இழித்துரைப்பது அவ்வளவு நன்ருக இல்லை. பெரியவரே! நாங்கள் என்ன செய்தோம்? என்ன பேசினேம்? என்று ஆராயாமல் வாயில் வந்தன வந்தன எல்லாம் பேச நீங்கள் எங்கே படித்தீர்கள்? என்று சுடச்சுட அவள் கேட்டாள். சீறிப்படமெடுக்கும் பாம்புக்குப் பின்னும் கோல் கொடுத்து விளையாட்டு பார்ப்பதுபோல நிலைமை முற்றிவிட்டது. இரு மரபுந் துய்ய வந்த நரசிங்க முதலியார் வழி தோன்றிய தனக்கு நேற்றுப் பிறந்த— சாதி மரபு தெரியாத ஒரு சிறுக்கி நியாயம் கற்பிப்பதா? பொன்னம்பலவாணருக்கு உலகமே சுழலத் தொடங்கிவிட்டது. கோபத்தினுல் வார்த்தைகள் திக்கித்திக்கி வெளிவந்தன.

''வயது வந்த ஒரு ஆணும் பெண்ணும் தனி இடத்திலே என்ன செய்வார்கள்? என்ன பேசுவார்கள்? என்று நேற்றுப் பிறந்த குழந்தைக்கும் தெரியும். அதை நான் சொல்லி நீ கேட்க வேண்டுமா? அல்லது உங்களிடம் விசாரித்துதான் தெரிய வேண்டுமா? அவ்வளவு உலக அனுபவம் உன் அப்பனுக்கு இல்லாமல் இருக்கலாம். எனக்கு அது நிரம்ப உண்டு. போதும். உன்ேனுடு எனக்கென்ன கதை? அடே! மாசிலாமணி! இந்த வாய்த்துடுக்குப் பெண்

ணோடுதான் வாழ விரும்பி ஓடோடியும் வந்தாயா? பார்! அவள் பெரியவர்களுக்குக் கொடுக்கும் மரியாதையை.''

புயலோடு பெருங்காற்றும் சேர்ந்துவிட்டது. ''யாரடா வாய்க்கொழுப்புக்காரப் பெண் என்று சொன்னவன்.'' இந்த இடிமுழக்கம் வந்த திசையை மூவரும் பார்த்தனர். கணபதிப்பிள்ளை கனல் உமிழும் கண்களோடு காட்சிகொடுத்தார். அவரை இங்கே வரச்செய்து ஆருத மனப்புண்ணை ஆக்கவிட்ட பெரும் புண்ணியசீலன் 'பீடிமூர்த்தி'யும் இன்னும் சிலரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு வெளியே நின்றனர். அவள் அவமானத்தால் தலைகுனிந்தாள். அவள் முகம் வெளுத்துவிட்டது.

''நான்தான் கூறினேன். ஏன் கூறக்கூடாதோ? உன் பெண் என்ன கூறினுலும், செய்தாலும், பொறுக்கவேண்டுமென்று எந்தச் சட்டத்தில் இருக்கிறது? ஒரு பெண்ணைப்பெற்றுல் அதை வளர்க்கும் முறையாகவல்லவோ வளர்க்கவேண்டும். வெட்கம் மானமின்றி சிறு குழந்தைகளைத் தூது விடுவதும், தனியிடத்திலே வாலிபப் பிராயத்து ஆண்களுடன் சரசமாடுவதும், கேட்டால் வாய் வேதாந்தம் பேசுவதும்''— பொன்னம்பலவாணர் 'மகாபாரதம்' வாசிக்கத் தொடங்கிவிட்டார். இது எப்போது தான் முடியுமோ? ஆனுல்...... முடிக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது.

''மாமா! நிறுத்துங்கள். பாடசாலை வேலையாக நான்தான் வரச்சொன்னேன். வந்தவுடன் ஒரு பிள்ளையை எனக்கு அறிவிக்க அனுப்பும்படியும் கூறினேன். நாங்கள் இன்றைக்குத்தான் புதிதாகத்தனிமையாக பேசுகிறோமா? எப்போதும் பேசுகிறோம். எல்லா விஷயமும் பேசுகிறோம். சரசமாடுவதாகச் சொன்னீர்களே. பேசுவதற்குப் பேர் சரசமா? உங்கள் வாயில் இப்படிச் சொல் வந்தால் உங்கள் மருமகனைப்பற்றி இந்த ஊரார் என்னநினைப்பார்கள். அனுவசியமாக ஒரு பெண்பிள்ளையைப் பார்த்து அவதூறு கூறுகிறீர்கள்.''

மாசிலாமணி தன் மாமனுக்குக் கூறுவதுபோல நிலை மையைப் பூசி மெழுகிச் சரிகட்டப் பார்த்தான். ஆனால் கணபதிப்பிள்ளை விட்டால்தானே.

''மலடனுக்குப் பிள்ளைகளின் மானம் காக்கத் தெரியுமா? ஊரவர்களை வெருட்டி, அதட்டி, உருட்டி வாழ்நாள் முழுதும் பாவகாரியம் செய்யும் இவர் எங்களையும் அப்படித்தான் என்று நினைத்துவிட்டார். ஓய்! பொன்னம்பல வாணரே! உம்மைப் பற்றி எனக்கு நல்லாகத் தெரியும். நீர் எப்படியெப்படியெல்லாம் விஷயங்களைக் கூறுவீர் என்பதும் தெரியும். தெரிவுகாலத்தில் எத்தனை பாளைகள் வெட்டுவித்தீர்; எத்தனை குடில்களை எரிப்பித்தீர்; எவ்வளவு மாடு கன்றுகளை அவிழ்த்துத் துரத்தினீர் என்றும் தெரியும். அவை எல்லாவற்றையும் எப்படி என் மீது சுமத்தினீர் என்றும் தெரியும். ஏன் அந்தசுப்பன் கூட இராத்திரி வந்து உங்கள் பாளை வெட்டைப்பற்றி அழுதான். அவனைப் போய்க் கேள். ஏழை அழுத கண்ணீர் விடாது என்று சாபமிட்டானே அவனைப் போய் விசாரி. நீர் வந்து நியாயம் கூறுகிறீரே. இந்த ஊர் இதைக் கேட்டால் சிரிக்கும்.'' அவர் நிறுத்தினார்.

''சிரிக்குமா? சிரிக்கட்டும். கேட்டுச் சிரிக்கிற ஊர் பார்த்துச் சிரிக்கட்டும்.'' இப்படிப் பேசிக்கொண்டே அவர் காலில் கிடந்த செருப்பைக் கழற்றினார். மாசிலாமணிக்கு விஷயம் விளங்கி விட்டது. 'இவ்வளவு வயதாகியும் அவர் ஆணவம் அடங்கவில்லை. கட்டாயம் செருப்பால் அடிக்கத் தான் போகிறார்' என்பது அவன் முடிவு. அவர் முன்பு போய் அவன் நின்றான்.

''நீங்கள் நினைப்பது எனக்குத் தெரியும். என்னை பிணமாகப் பார்க்கப் பிரியமானால் அப்படிச் செய்யுங்கள். அல்லது வீட்டுக்கு நடவுங்கள்.'' இதை அவன் தீர்மானமாகக் கூறினான். ''என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்'' என்று கணபதிப்பிள்ளையைத் தூண்டினான் 'பீடி மூர்த்தி.'

''அப்பா! வாருங்கள் வீட்டுக்கு'' என்று அழைத்தாள் பரிதாபமாக அமிர்தம். முடிந்தது. 'எல்லாம் வெற்று வேட்டு' என்றது கூடி நின்ற கும்பல்.

## 14

''இருப்பதை இழந்துவிடக்கூடாதென்று நினைக்கிறவர்கள்; பழைய ஞாபகங்களைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருப்பதில் திருப்தியடைகிறவர்கள்; பழைய ஞாபகங்களிலேயே வாழ்கிறவர்கள்; எப்பொழுதும் ஏதோ ஒரு குறை சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள்...... இவர்கள்தான் முதியவர்கள்.''

...அரிஸ்ட்டாட்டில்... பொன் மொழிகள்...

மருதஞ்சேரி ஆலடி வைரவர் முன் ஒருகாலமும் அவ்வளவு சனக் கும்பலைக் கண்டதில்லை. இன்று அவ்வூரே திரண்டு வந்திருந்தது. திடீரென்று ஏற்பட்ட பக்திப்பெருக்கினலல்ல. போட்டி உணர்ச்சியோடு நடத்தப்படும் காவடி ஆட்டத்தைக் கண்டுகளிப்பதற்காகத்தான். ஆனலும் எல்லோர் முகத்திலும் ஒருவித பீதி குடிகொண்டிருந்ததும் உண்மை. எங்கோ இரண்டு பேர் குசுகுசுவென்று 'காதைக் கடித்தாலும்' என்ன சங்கதி? என்று கூட்டம் கூடிவிடும்.

பொன்னம்பலவாணர் கையிலோர் பிரம்புதாங்கி அண்ணுவி வைரவனுக்குப் பக்கத்திலே நின்று ''காரியம் விரைவில் நடக்கட்டும்'' என்று தூண்டிக் கொண்டிருந்தார். மாசிலாமணி தன்னை எடுத்து வளர்த்த நொண்டிக் கணபதியோடு பேசிக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. ''என்ன தாத்தா! நாம் எவ்வளவு முயற்சி செய்தும் காரியம் கைகூடவில்லையே?''... இதுதான் மாசிலாமணியின் துக்கம் தோய்ந்த—பொருமலோடு பிறந்த வினு. ''நெருப்பையும் பஞ்சையும் பக்கத்தில் வைத்துவிட்டு எரியாதே, எரியாதே என்ருல் முடியுமா? அந்தக் காலத்திலே இந்தக் கணபதி சொன்னுல் கேட்காமல் விட்டது யார்? இப்போது நொண்டி- அதிலும் கையேந்திப் பிச்சை எடுக்கும் ஏழை-சொன்னுல் செவியில் ஏறுமா? இயன்றமட்டும் மன்ருடினேன். இருபகுதியாரதும் காலில் விழுந்து கெஞ்சினேன். கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்வதிலே வீம்பு செய்யாதீர்கள் என்று நியாயஞ் சொன்னேன். கேட்டார்களா? பொறுத்திருந்து பார்க்கட்டும்... இதனுல் விளையும் விளைவு எப்படியாகுமோ? இந்த ஊருக்கு இப்படி நடக்குமென்று விதியின் கை ஒன்றை எழுதினுல் நம்மால் அழிக்க முடியுமா? பொழுது மறையப் போகிறது. நான் வீட்டுக்குப் போகிறேன். தம்பி! நீயும் இந்த இடத்தில் நிற்பது நன்ருயில்லை'' கணபதி தடியை ஊன்றிக் கொண்டு எழுந்துவிட்டான். மாசிலாமணியும் அரை மனதோடு வீடு திரும்ப ஆயத்தமானுன்.

வைரவன் கற்பூரத்தைக் கொளுத்தி வணங்கிவிட்டுத் தாளத்தைக் கையில் எடுத்து விட்டான். அவனுடைய சிஷ்யக் 'குஞ்சுகள்' இரண்டும் அவன் ஏவலை எதிர்நோக்கியபடி தத்தம் தகப்பன்மாருடன் நின்றுகொண்டிருந்தன. பெரும் பணச் செலவில் அழைக்கப்பட்டிருந்த பின் பாட்டுக்காரரில் ஒருவர் கள்ளு நாற்றத்தை மறைக்க மூட்டிய பீடியை இரண்டு தடவை இழுத்துவிட்டு வாயைத் திறந்துபாடினுர். தேவார திருவாசகமல்ல. இரண்டாந்தர சினிமாப்பட

மொன்றில் வந்த ஏதோ ஒரு 'டப்பா' பாட்டு. வீணை அழுது வடிந்தது. மத்தளம் ஓங்கி ஒலித்தது. மக்களும் ஆகா! என்று வாயைப் பிளந்தனர்

அந்த நேரத்தில் சுப்பன் தன் சகாக்களுடன் வந்து கொண்டிருந்தான். முன்னுல் கணபதிப்பிள்ளையும் நல்லதம்பிக் கிழவனுரும் பேசிக் கொண்டு வந்தார்கள். பொன்னம்பலவாணர் முகம் கறுத்தது. வீடு திரும்ப எண்ணிய மாசிலாமணியின் மனம் 'திக் திக்' என்று அடித்தது. 'பீடி மூர்த்தி' அடுத்த பீடியைப் பற்ற வைத்தான் உற்சாகத்தோடு.

தாளம் போட்டுக் கொண்டிருந்த வைரவன், பொன்னம்பலவாணர் காதில் ஏதோ ஓதினுன். அவர், ''சரி, சரி. நீ உன் வேலையைப் பார்'' என்று தலையைப் பலமாக ஆட்டினுர்.

வைரவனும் சகாக்களும் கூடி இருந்த கும்பலுக்குப் பத்துயார் தள்ளிச் சுப்பன் தன் வீணை -மத்தளம் இவற்றை வைத்தான். வைத்துவிட்டு நிமிர்ந்ததும் பொன்னம்பலவாணர் தன் முன் நிற்பதைக் கண்டு உள்ளூர நடுங்கினுன். சனக்கூட்டம், என்ன நடைபெறுகிறது என்று அறியக் கூடிவிட்டது.

''நீ இங்கே வைத்துக் காவடி எடுக்கக் கூடாது'' இது பொன்னம்பலவாணர் வாயிலிருந்து பிறந்த அதிகாரக் கட்டளை. ஏன்! என்று மாத்திரம் அவன் கேட்க எண்ணினுன். அதற்கு முந்தி ''அப்படியானுல் வைரவனும் இங்கே வைத்துக் காவடி எடுக்கக் கூடாது'' என்ற சப்தம் கூட்டத்தின் ஒரு பக்கத்தில் ஒலித்தது. சப்தம் வந்த திசையை நோக்கி ஏறிட்டுப் பார்த்தார் வாணர். தன்னுடைய- அருமையான-மருமகன் மாசிலாமணியின் திருமுகத்தையே கண்டார்.

நல்லதம்பிக் கிழவனுர் ''சபாஷ்!'' என்றுர்- கணபதிப்பிள்ளை ''சரியான வார்த்தைதான்'' என்று எக்காளமிட்டார்.

பொன்னம்பலவாணருக்கு ஒருகணம் பூமியே சுழல்வது போல இருந்தது. தன்னுடைய மருமகன்-தான் ஆசையோடு வளர்த்த பிள்ளை-நாலுபேர் மத்தியிலே தனக்கு மாருக வார்த்தையாடுவதென்ருல் அவர் பொறுப்பாரா?

''அவன் நல்லாகச் சொல்லட்டும்; நீ இங்கே காவடி எடுக்கக் கூடாது'' என்று மீண்டும் பழைய பல்லவியையே பாடினுர். சுப்பன் தலை நிமிர்ந்து, ''ஏன் எடுக்கக் கூடாது? அதன் காரணத்தையாவது சொல்லுங்களேன்'' என்று மிடுக்காகக் கேட்டான்.

''இது என்னுடைய கோவில். நான் தான் உண்டாக்கினேன். இதில் நான் இட்டது தான் சட்டம். அதற்கு ஏன்? எப்படி? என்று கேட்க யாருக்கும் உரிமை கிடையாது. உனக்கு விருப்பமாக இருந்தால்வேறு எங்கேயாவது வைத்து எடு. இந்த ஊரின் ஒற்றுமையைக் குலைத்து வழி வழியே உங்களைச் சண்டை பிடிப்பிக்கச் சிலருக்கு விருப்பமிருக்கலாம்! எனக்கு அது சம்மதமில்லை. நான் சொல்வதைக்கேள். இந்த ஊரில் இன்னும் நீ வாழ வேண்டுமாஞல் - சண்டை சச்சரவு இல்லாமல் இருக்க வேண்டுமாஞல் - மரியாதையாகச் சந்நிதி கோவிலுக்குப் போய் அங்கேயே வைத்து உன் நேர்த்திக் கடனைச் செய். வீணுகக் கெட்டு அழியாதே!'' கசப்பு மருந்தையும் சீனியையும் உண்பது போல இருந்தன இந்த வார்த்தைகள் சுப்பனுக்கு. மழைக்கால இருட்டிலே சிறு மின்னல் தோன்றுவது போல அவன் மனதில் சிறிது வெளிச்சமுண்டாகியது. அவன் தடுமாறிஞன்.

நல்லதம்பிக் கிழவஞர் தன் அஸ்திரத்தைப் பிரயோகித்தார். ''கிராமச் சங்கத் தெரிவிலே தோன்ருதஒற்றுமை இப்போது சிலருக்குத் தோன்றியிருக்கிறது. தமக்கு இருப்பதை இழந்து விடாமல் இருப்பதற்காக வேற்றுமை ஆக்குவார்கள் செய்கையினுல். ஒற்றுமை பேசுவார்கள் நுனி நாக்கால். கோயில் ஒருவருடையதென்ருல் உண்டியற் பெட்டி ஏன்? தன்னுடைய வளவிலே தன்னுடைய பணத்

திலே பூசை, திருவிழா செய்தால் ஒருவருடையதாகலாம். இது பொதுக் கோயில். என்னுடையதென்று உரிமை பாராட்ட முடியாது ஒருவராலும். போகட்டும். இப்போது கோயிலைப் பற்றி யார் கேட்டார்? வைரவனுக்குக் காவடி ஆட என்ன உரிமையிருக்கிறதோ அதே உரிமை உனக்கும் உண்டு. உனக்குச் செய்த உபதேசத்தை அவனுக்கும் ஒரு முறை செய்வதுதானே. அவன் அதற்கு ஒப்புக்கொண்டால் நீயும் சந்நிதி முருகன் வீதியிலேவைத்து எடுக்கலாம். அதைத் தான் தம்பி மாசிலாமணியும் சொன்னது.''

சிக்கலான வழக்கொன்றிலே இரண்டு பிரபல நியாய வாதிகள் பேசுவதுபோல் இக்காட்சி இருந்தது. ஆனால் இருவர் மனதிலும் அடியிலே விஷம் தேங்கியிருந்தது உண்மை. கணபதிப்பிள்ளை பேசுவதற்குத் தொடங்குமுன் வைரவன் பொறுத்திருக்கவில்லை.

''பெரியவரே! நான் வழக்கமாகச் செய்யும் ஒரு காரியத்தைச் செய்ய வந்திருக்கிறேன். இன்று நேற்றல்ல, பத்துப் பன்னிரண்டு வருடங்களாக இந்தக் கோயிலில் வைத்துக் காவடி எடுப்பது எல்லார்க்கும் தெரியும். புதுமையாக ஊருக்கு மாருக-ஒற்றுமையைக் குலைக்க இந்த வருடம் இவன் முளைத்திருக்கின்றான். ஆனால் ஒன்று. அவனாக முளைக்கவில்லை. [விஷ வித்தை யாரோ ஊன்றி, பொறாமை என்ற தண்ணீரை ஊற்றியிருக்கிறார்கள். அது படர்ந்து பெரியமரமாகி விட்டது. இப்போது அதை வெட்ட ஒருவராலும் முடியாது. அது இந்த ஊரையே-ஏன் எங்கள் சமூகத்தையே அழிக்கப் போகிறது.] எனக்கு இங்கே வைத்து எடுக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. நான் சந்நிதி முருகன் கோயில் வீதியில் வைத்து எடுப்பேன். அதற்காகப் பெரியவர்கள்-ஊரின் நன்மையை விரும்புகிறவர்கள்- எது சொன்னாலும் கேட்க நான் தயார்.''

''அப்படியானால் நல்லது. இருபகுதியாரும் அங்கேயே போய்க் காவடியை எடுங்கள்'' என்று தீர்ப்புக் கூறினார் கணபதிப்பிள்ளை.

"இவ்வளவு பணத்தையும் செலவழித்துப் பெட்டிக் காரர், மத்தளக்காரர், பின்பாட்டுப் பாடுபவர் எல்லோ ரையும் கூப்பிட்டுவிட்டுச் சந்நிதியில் இருந்து எடுக்க மனம் வருமா?" என்று ஆட்சேபித்தான் சுப்பன். "ஏதோ இந்த வருடத்திற்காவது இங்கிருந்து எடுக்கவிட வேண்டும்" என்று அவன் வேண்டுகோள் விடுத்தான்.

பொன்னம்பலவாணர் நேரிடையாகவே பேசினுர். "சுப்பா! நீ இந்த வைரவர் கோயிலடியிலிருந்து எடுப்பதில் எனக்கு ஏன் கோபம் தெரியுமா? கேள். வழக்கமாக என்னுடைய வீட்டுக்கு வந்து ஆடி மரியாதைபெற்ற பின் தான் வேறு யார் வீட்டுக்கும் போவதை வைரவன் நடைமுறை யிற் செய்துவந்தான். ஆனுல் நீயோ, ஊர் பேர் தெரியாத நேற்று முளைத்த புதுப்பணக்காரன் வீடுகளுக்கெல்லாம்..."

"அப்படிப்பட்டவன் யார் காணும். வெளிப்படையா கச் சொல்லும்" என்று தூண்டினுர் நல்லதம்பிக்கிழவனுர்.

"போதும். நிறுத்துங்கள்" என்று சப்தமிட்டான் மாசி லாமணி. முதலடி மண்டையில் விழுந்தது மாசிலாமணிக்கு. இந்தத் திருப்பணியைத் தொடங்கி வைத்தவன் 'பீடி மூர்த்தி.'

எல்லாம் அல்லோல கல்லோலம். யார் யாருக்கு அடித் தார்கள் என்பது தெரியாது. காவடிகள் முறிந்தன. மத்த ளப் பெட்டிகள் துகளாயின. கற்கள் பறந்தன. பெண் களின் கூக்குரல், குழந்தைகளின் அலறல்... ஓட்டம்... அடி தடி...ஐயோ! அப்பா! ஐந்தே நிமிஷம்தான். அந்த இடத் தில் ஆள் சந்தடியே யில்லை. 'பீடி மூர்த்தி' ஓடினுன்......... இரத்தம் வழிந்தோடத் துரத்தினுன் மாசிலாமணி.

## 15

''மனத்துக்கண் மாசிலனுயிருந்து நீ பேசுவா யாகில் கண்ணியமாகவும் நிதானமாகவும் காரியங் களைச் செய்வாயாகில், நாகரிகமில்லாத இடங்க ளில் கூட நன்மதிப்புப் பெறுவாய்,''

—கன்பூஷியஸ், பொன்மொழிகள்......

மாசிலாமணியைப் பின் தொடர்ந்து கூடி நின்ற கும்பல் ஓடியது.

மருதஞ்சேரிக் கிராமத்தின் தெரு, ஒழுங்கை, ஒற்றைய டிப்பாதை எல்லாம் அவனுக்கு, ஆமாம் பீடிமூர்த்திக்குத் தான்தெரியும். ஆனுல்அப்போது எல்லாவற்றையும் மறந்து விட்டான். கால்போன திசையில் ஓடினுன். கிட்டிப்புள் அடித்த பொட்டல் வெளி. முயல் வேட்டை ஆடிய சிறு பற் றைக்காடு, கள்ள இளநீர் பருகிய தென்னை மரச்சோலை,

நுங்கு குடித்த பனங்கூடல் எல்லாவற்றையும் கடந்து சுற்றிச்சுற்றி ஓடினுன். போட்டிக்கு ஓட்டப்பந்தயம்வைத்தாற் கூட அவன் அவ்வளவுவிரைவாக ஓடுவான் என்று நம்பமுடியாது. ஆனல் மாசிலாமணி அவனை விட்டபாடில்லை.

'இனி முடியாது' என்ற எண்ணம் தோன்ற ஒரு குடிசையுட் பிரவேசித்தான் பீடி மூர்த்தி! அங்கே அவன் கண்டது திடுக்கிடவைத்தது. புலிப் பொறியிற் சிக்கிய குள்ள நரியைப் போல அவன் திருதிருவென விழித்தான். பழைய வைரியான நொண்டிக் கணபதி, தன் மகளின் வரவை எதிர் பார்த்திருக்க இவன் வந்து விழிப்பதையும் வெளியில் பெரிய ஆரவாரம் கேட்பதையும், நிதானமாக ஆலோசித்துப் 'பயப்படாதே! என்ன சங்கதி?' என்று ஆறுதலாகக் கேட்டான்.

''எல்லாம் சொல்கிறேன். என்னைக் காப்பாற்றுங்கள். வெறிகொண்ட மனித கூட்டத்திடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று அவன் பதறினுன். அன்று கோவிலிலே பீடியைப் புகைத்துக்கொண்டு உதாசீனமாக 'உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று வீருப்புப் பேசிய அதே மூர்த்திதானு இவன் கணபதியின் மனதில் ஒரு கணம் மின் வெட்டுப்போல் இது காட்சியளித்தது. நொண்டியாகிய தான் தனக்குப் படுகாயமுண்டாக்கிய இப்பாதகனைக் காப்பாற்றுவது செய்யக்கூடிய காரியமா? இதுவே அவன் சிந்தனை. சிந்தனைக்கு இடமேயில்லை. ஆரவாரம் சமீபித்து விட்டது. 'பிடி... விடாதே—குத்து—கொல்லு!...' இப்படி இப்படி.

''என்னல் முடிந்தவரையில் காப்பாற்றுகிறேன். நீ முதலில் உள்ளே போ'' என்று அதிகாரத்தோடு கட்டளையிட்டுவிட்டு ஒரு பெரிய கத்தியைப் பக்கத்தில் வைத்தபடி குடிசையின் சிறிய வாயிலில் இருந்தான். இவனுக்கு எதிரிகள் யார்? காவடி ஆட்டத்தில் தான் ஏதோ குழப்பமாயிருக்கவேண்டும். ஒன்றில் வைரவனுகை இருக்கலாம். அல்லது சுப்பனுயிருக்கலாம். அவர்களை ஏதாவது சொல்லிச் சமாளிக்க முடியாதா? இதுதான் அவனது எண்ணம். ஆனல்—

என்ன ஆச்சரியம்! தன்மகனைப்போல தான் வளர்த்த பிள்ளை—தாத்தா!தாத்தா!! என்று வாயூறும் மாசிலாமணி தலையில் இருந்து இரத்தமானது முகமெல்லாம் வழியத் தன் முன் நிற்பதைக் கண்டான். ஒரே அதிர்ச்சி! குழப்பம்!! பூகம்பம்!!!

''மூர்த்தி இங்கேவந்தானே; எங்கே போனான்? உள்ளே தான் இருக்கிறானா?'' ஆவேசத்தோடு மாசிலாமணி கேட்டான். உள்ளே இருந்த மூர்த்திக்கு நெஞ்சு படபட வென அடித்தது. கணபதியின் வாயிலிருந்து என்னமறுமொழி வருகிறது என்பதைக் குற்றவாளியாகிய ஒரு கயவன் நீதிபதியின் வாயிலிருந்து என்ன தண்டனை பிறக்கிறது என்று கூர்மையாகக் கேட்பது போலக் கேட்டான்.

''இருக்கிறார் என்ன சங்கதி?'' என்று ஆர் விகுதியை அழுத்தமாக உச்சரித்தான் கணபதி. வேண்டுமென்றுதான் அவன் அப்படி உச்சரித்தான்.

''இருக்கிறாரா? பெரிய மனிதன்? பேடி, பேடித்தனமான செயல் செய்துவிட்டு ஓடி மறையும் பிரபு. ஆண்மையிருந்தால், நெஞ்சில் உரமிருந்தால், துடிக்கும் என் கைகளுக்குப் பதில் சொல்லட்டும். வெளியே வந்து காரணம் கூறட்டும். சீ! மானங்கெட்ட......'' கும்பல் கூடிவிட்டது.

''வெளியே விடு... அல்லது உன்னையும் துகளாக்கி அவனையும் கொன்றுவிடுவோம்'' இது வைரவனின் வீர கர்ச்சனை. ''என்னடா! பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்?நெருப்பையெடுத்துக் குடிசைக்கு வை.'' எத்தனையோ குடில்களை எரியச்செய்து மனம் மகிழ்ந்தபொன்னம்பலவாணரின் உறுமல் இது.''அவனை வெளியில் விடு. உன்னிடம் வந்து உயிர்ப் பிச்சை கேட்டானே அவன் இருப்பதிலும் இறப்பதே மேல், நான் என் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சியுடன் சாவேன்'' நல்லதம்பிக் கிழவனாரின் வயிறெரியும் வார்த்தைகள் இவை. கணபதிப்பிள்ளை பேசவேயில்லை. சுப்பன் அவ்விடம் வரவேயில்லை,

கணபதி பேசத்தொடங்கினான்:

''தம்பீ! மாசிலாமணி!! இதைக்கேள். நீ இப்படிக் கெட்டுப்போவாயென்று நான் நினைக்கவேயில்லை. ஓடுகிற வனைத் துரத்துவதுதான் நீபடித்தபடிப்பா? பிழைசெய்வது மனித இயல்புதான். அதைப் பொறுப்பதுதான் மனிதர்க ளின்உத்தமகுணம். திடீரென ஏற்பட்டகோபத்திலே வாலிப முடுக்கிலே சிலர் தகாத காரியங்கள் செய்யலாம். ஏன்? உன்னைப்போலத்தான் எனக்கும் அன்று மூர்த்தி பிழைசெய் தார். நானும் வாயில்வந்தபடி பேசிவிட்டேன். பிறகு தான் அதைப்பற்றி யோசித்தேன். சில நாளைக்கு இருந்து சாகப்போகும் நமக்குச் சண்டை சச்சரவுதான் வேலையா? சிறிய பிழைகளைப் பொறுத்தால் தான் பெரிய காரியங் களைச் செய்யலாம். போ! உன்னைவிட எனக்கு அருமை யான பொருள் இந்த உலகத்தில் இல்லை. வளர்த்த தந்தை யைப்போல இருக்கும் நான் சொல்கிறேன். பொறுமையே நல்லது. கலகம் வேண்டாம் போய்விடு.''

கண்களில் கண்ணீர் மல்க உள்ளக் குழைவோடு அவன் கூறிய வார்த்தைகள் பலித்துவிட்டன. கோபம்மறைந்தது; மனது திறந்தது. திரும்பினுன் வீடுநோக்கி. மாசிலாமணி திரும்புவதைப் பார்த்துப் பொன்னம்பலவாணர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். வாயிலில் இருந்து கணபதி எழு ந்து நொண்டி நொண்டி வந்து அவர் காலில் விழுந்தான்.

''பெரியவரே! நீர் தந்த உப்பைத் தின்று வளர்ந்தவன் நான். நான் உமக்குச் சொல்ல என்ன இருக்கிறது.? பணம் அதிகாரம்— பதவி எல்லாம் வரும்...போகும், ஆனுல்குணம் அதுதான் இறுதியில் எல்லாராலும் வாழ்த்தப்படும். உமக் குக் கோபமிருந்தால் என்னை அடியும், திட்டும், என்குடிசை க்கு நெருப்பு வையும். நான் சிறிதும் கவலைப்படமாட் டேன். கவலைப்பட்ட காலமெல்லாம் போய்விட்டது. கன வாய் மறைந்துவிட்டது. வாலிபர்கள் கையிலே ஊர்ப்பொ றுப்பை விட்டுவிட்டு அமைதியாக மிகுதிக்காலத்தைக் கழிப் பதுதான் பெரியவர்களுக்கு நல்லது.''

கணபதிப்பிள்ளையைப் பார்த்துச் சொன்னுன்.

''உங்கள் சண்டையால் ஊரே இரண்டு பட்டுவிட்டது. இப்படி விட்டுவிட்டால் இனிமேல் என்ன கதி வரப்போகிற தோ? வாலிபர்களும் இதையே பின்பற்றி நடந்தாற் குட்டிச்சுவராய்ப்போவதுதான் மிச்சம். குளம் தேய்ந்து குட்டையாகி நீர்கலங்கிவரண்டுபோனல் யாருக்குஎன்னலாபம்? குளத்தைத்தோண்டி மண்ணைக்கரையேற்றினல்தான் மழை நீராவது தங்கும். இதுதான் நான் சொல்லக்கூடியது.''

கணபதி வாயிலேவிட்டு வெளியே வந்ததும் நல்லதம்பிக் கிழவனர் ஏதோவிதமாக உள்ளே போய்விட்டார். அவர் உள்ளே போவதைக்கண்டும் சிலர் ஒன்றும்பேசவில்லை. தகப்பன்மகன் சண்டையில் தலையிட அவர்களுக்கு உரிமை ஏது?

தலைமயிரிலே பிடித்து இழுத்துவந்தார் நல்லதம்பி. ''பேடிப்பயலே! உன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்டதற்கு எனக்கு ஏற்பட்ட அவமானம் போதும். இந்தக் கணபதியைப் பார்த்துத்தானே உண்டியற் பெட்டியைத் திருடினன் என்று சொன்னய். அதற்காகத்தானே சுப்பனுக்குக் கோள் சொல்லிக் காவடி ஆட்டத்தைக் குழப்பினய். இப்போது அவனையே காப்பாற்று என்று வந்து நிற்கிருயே. உனக்கு வெட்கம்-மானம்-ரோசம் ஏதாவது உண்டாசொல்லு'' என்று உறுமினர்.

பீடிமூர்த்தியா விடுபவன் ''நீங்கள் என்ன நல்லகாரியம் செய்கிறீர்கள்? கிராமச்சங்கத்திற்குக் கேள் என்று கணபதிப் பிள்ளையைத்தூண்டினீர்கள். கடைசியிற் பொன்னம்பலம் பக்கம் பாடினீர்கள். காவடி ஆட்டத்தைக்குழப்பத் திரும்பவும் கணபதிப்பிள்ளை பக்கம் சேர்ந்தீர்கள். ஏதாவது சண்டை உண்டாக்கவேண்டுமென்றுசாடையாக என்னிடம் கூறினீர்கள். இப்போது விதி இப்படி முடிந்துவிட்டது''

''நிறுத்தடா அதிகப்பிரசங்கி'' என்று உறுமினர் நல்ல தம்பி. 'நல்ல அப்பனும் மகனும்' என்று கேலியாகச் சிரித்தனர் கூடி நின்ற சனங்கள். இந்தச் சிரிப்பினூடே ''ஐயோ! என் மகளே'' என்ற ஒரு பெரும் அழுகைக் குரல் கேட்டது, எல்லோரும் திரும்பிப்பார்த்தனர். அமிர்தத்தின் 'பெரியம்மா' தலைவிரிகோலமாய் ஓடிவருவதைக்கண்டனர். எல்லோர் வாயிலும் 'என்ன? என்ன?' என்ற வினவே எழுந்தது.

# 16

''தீய சிந்தனைகளுக்கும், துர் எண்ணங்களுக்கும் நாம் இடங் கொடுத்து விடுவதாயிருந்தால் நம்மை மனிதரென்று சொல்லிக் கொள்ள வேண்டிய தில்லை. பிறப்பில் மனிதராயிருந்தாலும் குணத்தில் மிருகங்கள் தான்.''

—மகாத்மா காந்தி—பொன் மொழிகள்.

''அமிர்தத்தைக் காணவில்லை.'' பெரியம்மாவின் வாயிலிருந்து பிரலாபத்தோடு திக்குமுக்காடி வெளிவந்த கடைசிப் பேரிடியைக் கேட்டுக் கூடிநின்ற கும்பல், என்ன? ஏன்? என்று திரும்பத் திரும்ப ஒருவரை ஒருவர் கேட்டார்களே யொழிய செயலாற்றத் துணியவில்லை. கணபதிப் பிள்ளையின் மனது செய்வதறியாது திகைத்தது. அவர்வெகு விரைவாக வீட்டுக்கு வந்தார், தேடினுர்; கூப்பிட்டார்; கூக்குரலிட்டார். பயனென்ன? வெறும் கூட்டம் கூடியதுதான் மிச்சம். அவள் அப்போது ஆடி ஆடிப் போய்க்கொண்டிருக்கும் பஸ்ஸில் பட்டினத்திற்குப் போய்க்கொண்டிருந்

தாள். ஏன்?.... அது அவளுக்கே தெரியாது. அவள் இன்னும் தீர்க்கமாக ஒரு முடிவுக்கும் வரவில்லையே. சூரியன் அஸ்தமன கிரியை அதிவிரைவாக அணுகிக் கொண்டிருந்தான். அவள் வாழ்வாகிய சூரியனும் ஒரு வேளை அப்படித்தானோ? இதை எண்ணியபடி அவள் சூரியன் மறையும் காட்சியை ஓடும் பஸ்ஸில் இருந்து கொண்டே நோக்கினாள். ஏதோ ஒரு பாடசாலையின் பெயரைச்சொல்லி 'பஸ் கொண்டக்டர்' இறங்குகிறவர்களை நெருக்கிய சப்தம் அவள் காதிலும் கேட்டது. எரிந்து கொண்டிருக்கும் குறைச் 'சிகரெட்'டின் சூடு உள்ளங்காலில் பட்டதும் ஏற்படும் அதிர்ச்சி போல அவள் மனதிலும் ஓர் அதிர்ச்சி. இறங்கிவிட்டாள், அப்பாடசாலையடியில். ''நீங்கள் பட்டினத்திற்குத்தானே 'ரிக்கற்' எடுத்தீர்கள்; இங்கே'' என்று அவன் தலையைச் சொறிந்தான். ''ஆமாம். அதிலென்ன? இங்கு என் சிநேகிதியிடம் ஒரு முக்கிய வேலை...''என நடந்து கொண்டே அவள் சொன்னாள்....

அன்று சந்நிதி கோயில் தினமாகையால் எங்கும் சனக் கூட்டமும் 'கார்' ஓட்டமுமாக இருந்தது. அவள் போய்க் கொண்டிருந்த ஒழுங்கையிலும் நாலைந்து 'கார்'கள் கோவிலுக்குப் போகத் தயாராக நின்று கொண்டிருந்தன. இதோ! அவள் வீடு. ஆசிரியகலாசாலையில் படித்த தன் அருமைச் சிநேகிதியைக் காண ஆவல் கொண்டு இறங்கினாலும் இப்போது ஒருவித 'பயம்' அவளைப் பிடித்துக் கொண்டது. இந்த நேரத்தில் ஒருவித துணையுமின்றி வீட்டில் கோபித்துக் கொண்டு, சீ! வேண்டாம்; திரும்பிவிடுவோமா? ஆமாம்; திரும்பிவிடுவோம். நாயின் பயங்கரக் குரைப் போடு தொடர்ந்து ''யாரது?'' என்ற அதிகாரத் தொனி பிறந்தது.

யாதும் பதிலே கூறுமல் நிற்கும் உருவத்தைக் கண்டு சுப்பையா விதானையார், ''தவம்! விளக்கைக் கொண்டு வா'' என்று உறுமினர். அமிர்தத்தின் தேகம் வியர்வையிலே நனைந்து விட்டது. வீட்டுக்குடைய 'பெருமாட்டி'

வெளியே வந்து ''யாரம்மா நீ?'' என்று வினவி முடியுமுன் ''அம்மா! தெரியவில்லையா? என்னுடைய சிநேகிதி அமிர்தம் இவள்தானம்மா'' என்று இறுகத் தழுவிக்கொண்டாள் தவமணி. பின்பு சமையற் கட்டுக்குள்ளே சந்தோஷம்'கரை புரண்டது.'

இங்கே பொன்னம்பலவாணர், அவர் மருமகன் மாசிலாமணி, கணபதிப்பிள்ளை, நல்லதம்பிக் கிழவனார், பீடி மூர்த்தி எல்லார் மனதிலும் ஏகமாய் இருந்த ஒரு கேள்வி அமிர்தம் எங்கே? என்பது தான். அவளின் பெரியம்மாவின் அழுகை ஓய்ந்தபாடில்லை. அமிர்தம் உபயோகிக்கும் மேசை மீது இருந்த ஒரு துண்டுக் கடிதத்தில் இருந்த செய்தி அவர்களை இன்னும் திடுக்கிட வைத்தது. அதில் திகதியோ அல்லது அன்புடைய என்று தொடங்கும் வரிகளோ இல்லை. தலையும், வாலுமில்லாமல் அதில் கிடந்த இந்தப் பாட்டு:

''தூயநற் காதலர்க்கே-பெருந்
தொல்லை தரும் புவியில்
மாய்க நமதுடல்கள்!—விஷம்
மாந்துக நம்மலர்வாய்
போய்நுகர் வோம்சலியா-இன்பம்
பூமியின் கர்ப்பத்திலே!''

விஷம்-வாய் என்ற இரண்டு சொற்கள்மாத்திரம் அவர்களை எண்ணுதவை எல்லாம் எண்ணச் செய்தது. பொன்னம்பலவாணர் நீண்ட அமைதியைக் குலைத்து ''தம்பீ மணி; அவளுடைய சிநேகிதிகளில் யாராவது முக்கியமானவர்களின் பெயர் உனக்குத் தெரியுமா?'' என்று தன் மருமகனைக் கேட்பது போலப் பாவனைசெய்து கணபதிப்பிள்ளையையே குறிப்பாகக் கேட்டார். கணபதிப்பிள்ளை அவள் பெட்டியைத் 'தடவும்' திருப்பணியிலே மும்முரமாக ஈடுபட்டார். 'பீடி' மூர்த்தி பீடி ஒன்றை எடுத்து அவசரம் அவசரமாக மூட்டி இரண்டு தரம் 'இழுத்து' விட்டு கணபதிப்பிள்ளைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து, ''உபயோகம் இல்லாத

வேலையை இப்போது செய்து என்ன பயன்?முதலில் நான்கு பக்கமும் ஆட்களை விட்டு விசாரித்துத் தேடிப் பாருங்கள்' என்று நச்சரித்தான். நல்லதம்பிக்கிழவனுர், "முதலில் ஆள் உயிரோடு இருக்கிருளா? இல்லையா? என்று சோதிடம்தான் கேட்கவேண்டும்'' என்று நிலைமை தெரியாமற் சொல்லிவிட்டார்.

கணபதிப்பிள்ளை தேடுவதை அப்படியேவிட்டுவிட்டார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "ஓய் கிழவனுரே! மரியாதையாகச் சொல்கிறேன். முதலில் நீர் இந்த வீட்டைவிட்டு வெளியே போம். எனது மகளைக் காணுத துக்கம் எனக்கு. கேலிப் பேச்சுப் பேச இதுவா சமயம்? அவள் இருந்தால் உமக்கென்ன இலாபம்? அல்லது இறந்தால் உமக்கென்ன நட்டம்? உமது மகனுக்கு மாத்திரம் விவாகம் செய்துதரப் போவதில்லையே. போம். மரியாதையாகப் போய் விடும். அனுவசியமாக எத்தனையோ விஷயங்களில் ஜெகஜாலவித்தையெல்லாம் செய்தீர். இன்று உம் மகனே உம்மைப்பற்றி வானளாவ வர்ணித்தானே. போதாதா? இனிமேல் நானும் என் மகளும் இருக்கிறதும் இல்லாததும் உமக்குத் தேவையில்லை. உறுதியாகச் சொல்கிறேன். உம்மை எனக்கு இனிமேல் தேவையில்லை. உம்மால் பட்டதெல்லாம் போதும். போய் வாரும்.'' கிழவனுருக்குத் தான்இருந்த இடத்திலே பூமி பிளப்பது போலவும், இருக்கும் நாற்காலியோடு அதல பாதாளத்திற்கு இறங்குவது போலவும், அதனுல் தன் தேகம் நடுங்குவது போலவும் இருந்தது. அணையும் விளக்குக் கூட கடைசியில் ஒரு முறை சிறிது பிரகாசமாகத்தான் எரிகிறது! நல்லதம்பியும் இறுதிமூச்சாகக்கூறினுர். "தம்பி கணபதிப்பிள்ளை! மகள் ஓடிப் போனுளே, மானம் போய்விட்டதே என்ற ஆத்திரத்தில் வாயில் வந்தது எல்லாவற்றையும் கிழவனுகிய எனக்கு எடுத்து வீசாதே. ஓடிப் போன உன் மகளை யார் இந்தக் கிராமத்தில் விவாகம் செய்யப்போகிருன். எனது மகன் உன் வீட்டுக் கிள்ளுக்கீரையா? இருமரபுந்

துய்ய வந்த நரசிங்கமுதலி வம்சத்துக் கொழுந்து. என் உதவி தேவையில்லை என்றாய். யாரையா இனி உமக்கு உதவப் போகிறார்கள் இந்த ஊரில்?'' பொல்லையும் எடுத்துக் கொண்டு கிழவனார் எழுந்தார். மாசிலாமணிக்கு ''பீடி'' மூர்த்தி அடித்ததனாலே பெருங் கோபங் கொண்டிருந்த பொன்னம்பலவாணர், நொண்டிக் கணபதியின் பெருந் தன்மையான பேச்சையும் நடத்தையையும் கண்டு மனம் ஆறி, இவற்றிற்கெல்லாம் நல்லதம்பியும் ஒரு காரணம் என்பதை அறிந்து அவருக்குச் சுடச்சுடக் கொடுக்கக் காத்திருந்தவர் போல, ''இந்த ஊரில் ஒருவரும் இல்லையா? ஏன் இல்லை. இதோ நான் இருக்கிறேன். என்னுடைய மருமகனைக் கணபதிப்பிள்ளையின் மகளுக்குக் கொடுக்க நிச்சயித்து விட்டேன். படிப்பற்ற, ஏழையான, நொண்டியின் நடத்தை மூலம் படிப்பினை பெற்றுவிட்டேன். பணம், பதவி, பட்டம், அதிகாரம் எல்லாம் வரும் போகும். அவன் சொன்னது மெய். நமக்கு யார் இருக்கிறார்கள்? அவருக்கு ஒரே மகள். எனக்கு ஒரே மருமகன். இந்த இளம் ஜோடியைப் பிரிக்க நமக்கு என்ன அதிகாரம். ஆனால்...அவளைத் தான் காணவில்லையே'' என்று முடித்தார். ''மாமா! இன்று தான் என் எண்ணம் பூர்த்தியானது'' என்று மாசிலாமணி அவர் காலில் வீழ்ந்தான். ''நானும் தெரியாமல் மமதையினாலே ஏதும் பிழை செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்று கணபதிப்பிள்ளை வேண்டினார். தன் மகள் காணாமற் போன துக்கத்திற் பாதி போய்விட்டது அவருக்கு. வெளியே நின்ற கும்பல் இச் சந்தோஷ சமாசாரம் கேட்டு ஆரவாரித்தது.

நல்லதம்பிக் கிழவனார், ''சாதி—மரபு எல்லாம் தொலைந்தே போய்விட்டது. பணம் பந்தியிலே-குலம் குப்பையிலே என்று சொல்வது மெய்'' என்று ஒருவருக்கும் கேளாமற்சொல்லிக்கொண்டே போய்க்கொண்டிருந்தார். அப்போது மோட்டார் ஒன்று விரைந்து வந்து நின்றது. அதில் இருந்தது யார்? ஏன் வந்து நின்றது? எல்லோரும் ஆவலாக எட்டி எட்டி அதையே பார்த்தனர்...ஆனல் அவள்...?

## 17

தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி

.....நல்வழி, பாட்டு 30.

வேலவனை வேங்கை மரமாக்கியவிதி, விறகு கட்டிச் சொக்கர் தமை விற்கவைத்தவிதி, மாயவனை உரலோடுகட்டி வைத்த விதி, வள்ளியையும் குறவர் புனம் காக்கவைத்த விதி, மருதஞ்சேரிக் கிராமத்தையும் ஒரு கலக்குக் கலக்கி ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. அதிசயம்; மகா அதிசயமென்னவென்றால் காதலித்த சோடி கணவனும் மனைவியுமான விந்தைதான்!

எவ்வளவு பூசி மெழுகியும் அந்த நேரத்தில் தன்னைச் சும்மா பார்த்துவிட்டுப் போக அமிர்தம் வரவில்லை என்பதைத் தவமணி அறிந்து விட்டாள். பின்பு கேள்வி மேற் கேள்வி போட்டு உண்மையை அவள் அறியப்பட்டபாடு

அரும்பாடுதான். முன்பே மாசிலாமணிக்கும் அமிர்தத்திற்கும் ஏற்பட்ட காதலை அவள் அறிந்திருந்தாள். அது சம்பந்தமாகப் பொன்னம்பலவாணருக்கும் மாசிலாமணிக்கும் இரண்டு மொட்டைக் கடிதங்கள் 'அன்பு' என்ற கையெழுத்தோடு போட்டவள் இதே தவமணிதான்.

அந்தக் காதல் சீர்குலைந்து குடும்பப் போட்டியால் தன் சிநேகிதி ஊரைவிட்டே ஓடி வந்துவிடக் கூடிய நிலைமையை உண்டாக்கியவர்களை நேரே சந்தித்து விஷயத்தை விளக்க அவள் விரும்பினுள். தன் தகப்பனுரிடம் விஷயத்தைச் சூசகமாக அவள் கூறினுள். அனுபவம் மிக்க விதானையார் ஆற அமர யோசித்தார். முடிவாக அமிர்தத்தைப் பார்த்து அவர் கூறிய வார்த்தைகள் ஒரு 'அமர இலக்கியம்' உண்டாக்கப்போதுமானவை.

''ஏன்ன? நீ வீட்டைவிட்டு ஒடிவந்துவிட்டாயாமே. தமிழ் நாட்டுப் பெண், அதிலும் யாழ்ப்பாணத்து பாரம்பரியத்திலே வளர்ந்த— படித்த— உபாத்தியானியாகிய— நீ என்ன வேலை செய்தாய். வெட்கக்கேடு. ஒரு வயதிலே தோன்றுகிற மனக்கிளர்ச்சியால்— அதைக் காதல் என்று நீங்கள் சொல்லலாம்— குடும்பத்துக்கே அவகேட்டை உண்டாக்கலாமா? இங்கு நீ வராமல் இன்றைக்குப் பட்டிணத்துக்குப் போயிருந்தால் என்ன பாடுபட்டிருப்பாய்? எத்தனை கயவர்கள் ஒரு வேலையுமின்றி சுற்றிக்கொண்டிருப்பார்கள்? அவர்கள் கண்ணிற் பட்டால் உன் கதி என்ன ஆகும்? யோசித்தாயா?

உன் தந்தைக்கும் அவன் மாமனுக்கும் சண்டை என்றால் சமாதானத்துக்குப் பாடுபட வேண்டியது யார்?''

அவர் சிறிது நிறுத்திவிட்டு தண்ணீர் குடிக்கத் தொடங்கினுர். அவர் மகள் தவமணி இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்தினுள்.

''ஐயா! முடிந்ததைப் பற்றிப் பேசுவதால் என்ன பயன் விளையப் போகிறது? இனிமேல் நடக்க வேண்டியு

தைக் கவனிப்பது தான் நல்லது. அமிர்தம் இங்கே இருக்கட்டும். நாம் இருவரும் போய் இவள் தகப்பனுரிடம் மன்ருடிக் கேட்டுக்கொள்ளுவோம்''

விதானையார் ஆரம்பித்தார். ''நீ சொல்வது நல்ல யோசனைதான்; செய்வதை விரைவாக செய்ய வேண்டும். அவர்கள் எங்கெங்கே தேடுகிருர்களோ? எங்கு போனுர்களோ? நாம் போகும்போது அமிர்தத்தையும் கூட்டிக் கொண்டு போனுல் விஷயம் சுலபமாக முடியுமல்லவா?'' அமிர்தம் குறுக்கிட்டாள்.

''இனி மேல் அந்த வீட்டுக்கு வர என்னுல் முடியாது. ஏது வந்தாலும் வரட்டும் என்று துணிந்து வெளியேறிய எனக்கு இனி அங்கு வேலையேயில்லை. நீங்கள் உங்களுக்குத் தோன்றியதைச் சொல்லலாம். செய்யலாம். ஆனுல் என் தகப்பனுரைச் சந்தித்தால் இதை மாத்திரம் கூறுங்கள். உங்கள் மகள் இறந்துவிட்டாள். நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் பணம் உங்கள் பெருமையை நிலைநாட்டி விடும். நல்லதம்பிக்கிழவனுர் கட்டாயம் உங்களுக்கு வீரக்கல் நடுவார். 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்று கூறிச்சென்ருரே ஒரு பெரியவர்; அவர் முட்டாள். அனுபவமில்லாத சோம்பேறி...............''

விதானையார் இவற்றையெல்லாம் கேட்கத் தயாராக இல்லை, கோயிலுக்குப் போவதற்குத் தயாராக நின்ற ஒரு மோட்டாரை ஒரு மணி அவகாசத்தில் விடுவதாகப் பேசி தானும் தன் மகளும் ஏறிக்கொண்டு மருதஞ்சேரிக் கிராமம் நோக்கிப் புறப்பட்டார்.

பெட்டியைத் தடவும் திருப்பணியோடு நல்லதம்பிக் கிழவனுரை ஏசிக் கலைத்தபின் கணபதிப்பிள்ளையும் பொன்னம்பலவாணரும் செய்வதென்ன தென்று அறியாது திகைக்கும் தருணத்தில் விதானையார் ஏறி வந்த மோட்டார் வீடுவிசாரித்துக்கொண்டு வந்து நின்றது.

''அமிர்தம் எங்கே? நீங்கள் யார்?'' என்ற குரல்கள் தான் நாலாதிசையும் ஒலித்தன.

சுப்பையா விதானையார் அமிர்தம் இருக்குமிடத்தைச் சொல்லி தன்னை அறிமுகஞ் செய்து கொண்டார். தான் தான் மொட்டைக் கடிதம் எழுதி முன்பு எச்சரிக்கை செய்த புண்ணியவதி என்று பொன்னம்பலவாணரிடம் கூறினுள் தவம்.

''உண்மைதானம்மா; நீ எழுதியதை நான் அசட்டை செய்து விட்டேன். பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்து விட்டு எரியாமல் தடுக்க முயற்சித்தேன். கொழு கொம்புக்கு அலையும் கொடியை ஏறிப் படரவிடாது தடுக்க எடுத்த முயற்சிகள் தான் எத்தனை? ஆனுல் இன்று ஒரே ஒரு உத்தமனுல் இவை எல்லாம் விழலுக்கிறைத்த நீர் என்பதை உணர்ந்து விட்டேன். அவன் வேறு யாருமில்லை. என்னுடைய வேலைக்காரன் நொண்டி. கால்தான் நொண்டியேயொழிய எங்களைப்போல அறிவு நொண்டியாகிவிடவில்லை. கணபதி அவன் மன்னிக்கும் குணத்திலே எங்கள் மனதையே திருப்பிவிட்டான்'' என்று புலம்பினுர் பொன்னம்பலவாணர்.

கணபதிப்பிள்ளை சொன்னுர்: ''விதியின் கை எழுதியதை யாரால் அழித்தெழுத முடியும்? நாம் செய்த வினைகளை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். நாம் வெறுத்தாலும் விதி எழுதுவதை நிறுத்துமா? நல்லதம்பிக் கிழவனுர் எம்மையெல்லாம் ஆட்டிவைத்தார். அவரைச் சொல்லி என்ன பயன்? விதியே நம்மையெல்லாம் ஆட்டி விளையாடியது.

இனி இந்தவிளையாட்டு முடிந்துவிட்டது. சந்தோஷமாக முடிந்துவிட்டது. பொன்னம்பலவாணரும் விவாகத்திற்குச் சம்மதியளித்துவிட்டார். எனக்கும் மனப்பூர்வமான சம்மதமே.

ஆனுல் அவன்...... விஷயத்தை முடிய அறியமுன் ஓடினுளே. அதற்கு அவளின் அவசர புத்தியே காரணம். என் மகனின் எண்ணத்திற்குக் குறுக்கே எப்போதும் நான்

நின்றது கிடையாது. அப்படி இருக்க 'ஓடிப்போனவள்.' என்ற அவப் பெயரை அவள் ஏன் கேட்கவேண்டும்.

"சரி எல்லோரும் மோட்டாரில் ஏறுங்கள் அவளையே கேட்டுவிடுவோம்."

மாசிலாமணிக்கு அப்போதுதான் மண்டையை 'வலித்தது' அதிக சந்தோஷமோ அடியின் உறைப்போ யார் கண்டார்கள்?

'பீடி மூர்த்தி' மாசிலாமணியை எங்கேயாவது கொண்டுபோய் மருந்து கட்டிக்கொண்டு வருவதாக 'ஒற்றைக்காலில்' நின்றான். அவன் திருந்தி விட்டான் என்று நம்பி அவனோடு அனுப்ப பொன்னம்பலவாணர் சம்மதம் கொடுக்கவில்லை. ஆனால் எல்லாவற்றையும் மறந்து— மன்னித்து— அவன் கொண்டுவந்த பைசிக்கிளில் மணி ஏறினான். அந்த நில்வொளியிலே தூரத்தே உள்ள டாக்டர் ஒருவரின் வீட்டைத் தேடி பைசிக்கிள் பறந்தது. மோட்டாரும் பறந்தது. விதானையாரின் வீட்டைத்தேடி எல்லோரும் ஆவலோடு அழைத்தும் அமிர்தம் வெளியே வரவில்லை. வெட்கம், பெண்களுக்கேயுரிய வெட்கந் தானது.

கடைசியில் பொன்னம்பலவாணர் 'முறை' சொல்லிக் கூப்பிட்டார். அமிர்தம் ஓடோடி வந்து அவர் காலில் விழுந்தாள்.

ஆறுமாதம் கழித்து ஒருநாள் அழகான கொட்டி லொன்று ஞானவைரவர் முன் கம்பீரமாகக் காட்சி அளித்தது. ஆம்; நொண்டிக் கணபதிக்கு மாசிலாமணி யும்-அமிர்தமும் கட்டிக்கொடுத்த உபயம் தானது.

கோவிலில் உண்டியற்பெட்டி. கொட்டிலில் அழகான தகரக் குவளை. 'பஸ்ஸில்' பிரயாணஞ் செய்ய வந்த பீடி மூர்த்தி ஐம்பது சதமொன்றை நொண்டியின் தகரக் குவளையிற் போட்டு சுகசேமம் விசாரித்ததை மாலைக் கதிரவன் ஆலமரத்தின் இலைகளினூடே பார்த்துச் சிரித்

தான். ''என்ன தம்பி, உன்னுடைய தகப்பனார் நல்லதம்பி பாம்பு தீண்டி இறந்தது எனக்கு மிகுந்த துக்கம். என்ன இருந்தாலும் கலகலப்பான மனுஷன்'' என்றான் கணபதி. ''விதியின்கை அப்படி எழுதிவிட்டது'' என்றான் பீடி மூர்த்தி.

★

* இந் நாவல் ஈழத்தின்
தலைசிறந்த இலக்கிய
அறிஞர் - இரசிகமணி
கனக செந்திநாதனால்
எழுதப்பட்டது.

* இது யாழ்ப்பாணத்தின்
ஒரு கால கிராமிய அமைப்பையும்,
சமூக சிந்தனைகளையும்
படம் பிடித்துக்காட்டுகின்றது.

* இது பத்திரிகையில்
தொடர்கதையாக வந்த காலத்தில்
இலக்கிய அறிஞர்களால்
புரட்சிகரமான போக்குக்
கொண்டதாகக் கணிக்கப்பட்டது.

540